ஆனந்தபோதினி

தொகுதி 21 எண் 6

டிசம்பர் 1935

ஜ

m211,N15 AB

N35.21.6.

207701

# ஜாதகாமிருத பலவிமர்சம் என்னும்

# சோதிட கணிதாமிருத சாகரம்.

கற்கக் கசடற கற்றவை கற்றபின்
நிற்க அதற்குத் தக.

என்ற மூதுரை வாக்கியப்படி எவ்விதக் கல்வியாயினும் குற்றமறக் கற்றுத் தெளிவதே நம்மோர் கடமையாகும். அதுபற்றியே வேத புருஷனுடைய அங்கங்கள் ஆறினுள் நேத்திர அங்கமாகிய, சோதிட சாஸ்திரமானது நங்கவர் எளிதிலறியும் வண்ணம் ஆரம்பசோதிடர் முதல் பஞ்சாங்க கணித ஆராய்ச்சிவரையில் துர்பிக்ஷகாலமுண்டாகும் விபரம், சர்வதேச அக்ஷாம்சஞ் செய்யும் முறை, சாஸ்திர உபயாதிகள். வர்கோத்துமம். தசவர்க்கம் பிரிக்குமடைவு வக்கிர. ரிஜு அஸ்தமயமறிதல், துவாதசாம்ச சக்கிர நிர்ணயம், உச்சாதி கிரகசங்கியை, கேந்திர திரிகோணாதிஸ்தானங்கள், பார்வைஸ்தான பலம், திரிகரண சக்கிரமறியும் விதம், மற்றும் ஜாதக கணிதத்திற்காய்வேண்டிய லக்னஸ்புடம்—நக்ஷத்திரஸ்புடம், பாவஸ்புடம், கிரகங்களில் ஆட்சி, உச்சநட்பு நீச்சம்பகை முதலியபலம்; மண்டல சமயசார பருவம், மனோனைத்து ஆயம் சொல்லும் மார்க்கம்; ஆரூடபாவம், விஷயத்தை யறிந்தபிறகு முடியும் முடியாதெனக் கூறும் வகை; காலசக்கிரம், அஷ்டக வர்க்கம், கோசாரம்; லக்னபாவம்; சகோதரபாவம்; மாதுருபாவம்; புத்திரபாவம்; ரோக பாவம்; களத்திரபாவம்; ஆயுள்பாவம்; பிதுர் பாவம்; தொழில், லாபம், விரய முதலியவைகளும்; ருதுகால பலாபலன்களை விளக்கும் மார்க்கமும் பலன் முதலியவைகளையும் செவ்வனே விளக்கி சோதிட வித்வசிகாமணிகளின் வேண்டுகோளால், சாஸ்திர சம்பந்தமான குதர்க்க வார்த்தைகளோ வருடன் சாஸ்திரசம்பந்தமான உண்மையைத் தெள்ளிய நடையினுலெடுத்துக் காட்டும் புராதன கணிதசாஸ்திர மூலமாய் ஒவ்வோர் விஷயங்களுக்கும் சந்தேக நிவர்த்தியாக, போதுமான காரணங்களுடன் எடுத்துக்காட்டி, ஜாதகாமிருதபலவிமர்சம் என்னும் ஜாதககணிதசாகரம் என்னும் புதுப்பெயர் சூட்டி உலக பரோபகாரமாக குறைந்தவிலையில் தயார் செய்திருக்கிறோம். இந்நூலிலேயுள்ள விஷயங்கள் பெரும்பாலும் சாஸ்திர சம்பந்த சந்தேகங்கள் நிவர்த்தி செய்யவும் உள்ளபடி உண்மைப் பலன் சொல்லவும் ஏதுவாகும். சோதிடர்கள் பொதுவாய் ஜனன கால லக்ஷணங்களை சந்தேகமின்றி எடுத்துக்காட்டவும் யோகாவயோகங்களும் அவையுண்டாகுங் காலங்களும் தமிழ் வாசிக்கத் தெரிந்தவர் இப்புத்தகத்தைக் கொண்டே கணிதஞ் செய்யத்தக்க எளியநடையிலெழுதியுள்ளதாகையால் இப்புத்தகத்தைக் கையாள்வோர் பெரிதும் பயன்படுவாரென்பதற்கு சிறிதேனுமையமில்லை.

## இப்புத்தகத்தி லடங்கிய விஷயங்கள்.


1. நட்சத்திர விவரணம்.
2. விவாக பொருத்த நக்ஷத்திரங்கள்.
3. ஜன்ம நட்சத்திர பலன்.
4. இராசி.
5. இராசிகளில் சாஸ்திராதிகள்.
6. ஜன்ம லக்கின பலன்.
7. கிரகங்கள்.
8. அவைகட்குள் சத்துரு மித்திரத்துவம்.
9. தாத்கால சத்துருமித்திரத்துவம்.
10. காரகத்துவம்.
11. சுப, பாபிகள்.
12. கேந்திர திரிகோணாதிஸ்தானங்கள்.
13. ஆட்சி, உச்சாதிகள்.
14. உச்சாதி கிரகஸங்கியை.
15. இராசிக்கு சுப, பாபி.
16. பார்வை.

17. ஸ்தான பாவங்கள்.
18. பாவ ஸ்தானங்கள்.
19. வக்கிராதி.
20. பலன்கள்.
21. சாத்வீகாதி காலங்கள்.
22. நவாம்ச சக்கிர நிர்ணயம்.
23. அந்திய நவாம்ச இராசிகள்.
24. வர்க்கோத்தமம்.
25. திரேகாண சக்கிர நிர்ணயம்.
26. ஹோரா சக்கிர நிர்ணயம்.
27. திம்சாம்ச சக்கிர நிர்ணயம்.
28. த்வாதசாம்ச சக்கிர நிர்ணயம்.
29. குளிகைகால ஸ்தான நிர்ணயம்.
30. லக்கின நிச்சயம்.
31. ஸ்திரி புருஷ லட்சணம்.
32. கால ஹோரை.
33. ஜன்ம கால லட்சணம்.
34. த்விக்கிரக யோகம்.
35. திரிக்கிரக யோகம்.
36. ருசகாதி யோகங்கள்.
37. ஸங்கியா யோகங்கள்.
38. தரித்திராதி யோகங்கள்.
39. ஆசிரிய யோகங்கள்.
40. விசேஷ யோகங்கள்.
41. ஊமை.
42. அந்தகத்துவம்.
43. பதிதபாவம்.
44. புஷ்டியம்சம்.
45. ஸ்திரி ஜாதகம்.
46. ஸ்திரி நடக்கை.
47. களத்திர பாவம்.
48. புத்திர பாவம்.
49. அபுத்திர பாவம்.
50. சவீகாரம்.
51. வியாதி.
52. பாலாரிஷ்டம்.
53. அற்பாயுர்பாவம்.
54. மத்தியாயுர்பாவம்.
55. தீர்க்காயுர் பாவம்.
56. நிர்யாண விஷயம்.
57. மாரகம் கொடுப்பவர்கள்.
58. தசைகள்.
59. நட்சத்திர தசை.
60. அதன் புக்தியாதிகள்.
61. ஷூமாசாதிகள்.
62. நட்சத்திர தசைகளின் புத்தி காலங்கள்.
63. சக்கர தசைகள்.
64. சக்கரதசா காலங்களும் நாட்டும்.
65. சக்கர புத்திகள்.
66. தசாபலன்களின் விதிகள்.
67. தசாபலன்.
68. கோசரம்.
69. அஷ்வர்க்க சந்திரபிந்து.
70. கோசர பலம்.
71. அந்தபலன் தரும் சமயம்.
72. கோசர வேதை.
73. அஷ்ட வர்க்கம்.
74. அதன் விதிகள்.
75. கண்டஇரிய விவரம்.
76. விவாக பொருத்தங்களின் விவ[ரம்.
77. பொருத்தங்களின் லட்சணம்.
78. விவாகத்திற்கு தோஷங்கள்.
79. முகூர்த்தங்கள்.

இதன் விலை ரூபா 1—8—0

## ஸ்திரீ புருஷ ஜாதகத் திறவுகோல்

ஜோதிடரை விரும்பாமலே ஒவ்வொருவரும் தாம் தாமே ஜாதக கணிதம் பண்ணவும், 9 கிரகங்களை 12 இராசிகளில் அடைத்து ஆட்சி யுச்சம் இவைகளைக் கண்டு பலாபலன் சொல்லவும், இராசியில் 7 கிரகங்கள் ஒன்றாகக் கூடியிருப்பினும், இரண்டு மூன்று கிரகங்கள் சேர்ந்திருப்பினும் வேறு விதமாக மாறி மாறியிருப்பினும் அவைகட்கு அனுபவமாகப் பலன் தெரிந்து சொல்லவும் இதனால் தெரிந்துகொள்ளலாம். இதன் விலை அணா 8.

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

காதலருக்கு இன்பந்தரும் நூதன நூல்
அன்பர்கள் ஆவலுடன் எதிர்பார்த்த ஆனந்த சாஸ்திரம்
வெளியாயிற்று!

# இன்பவாழ்க்கையின் இரகசியங்கள்

(நான்காம் பதிப்பு)

அழகிய நீல கலர் மேலே லைடங்க் செய்யப்பட்டு மிக்க
கண்கவர்ச்சிக்க அழகிய ஆர்ட் படங்களுடன்



400-பக்கங்களுக்குமேல் அழகிய பெரிய வெயிட்
பேப்பரில் சுத்தமான எழுத்தில் அச்சிடப்பட்டுள்ளது.

இதன் விலை ரூபா 2.

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு. விலை ரூபா 1—8—0

இது காதலர்க்கு இன்பந்தரும் நூதன நூல்; போகானந்தத்தை விரும்பும் பூமான்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த ஆனந்த இரகசிய சாஸ்திரம்.

இது காதல் இன்பத்தை உள்ளவாறுணர்ந்து அனுபவித்து, இல்லறத்தை நல்வாழ்க்கையாக நடத்திப் பேரானந்தக் கடலில் மூழ்கி நற்சந்ததியைப் பெற்று, மறுமைப் பயனையும் அடைதற் கேதுவாயிருக்கும்படி பற்பல இன்பமார்க்கங்கள் நிறைந்த இந்நூல் இப்போது இனிய தமிழ்நடையில் வெளிவந்திருக்கிறது. இதில் நமது பூர்வீக கொக்கோக சாஸ்திரத்தின் சாரம்

ங்களும், அகப்பொருள் நூல்களின் கருத்துகளும், தேக தத்துவ சாஸ்திரங்கள், வைத்திய சாஸ்திரங்கள் முதலியவற்றிற் கூறப்பட்டிருக்கும் பல அரிய விஷயங்களும், நாகரம், தெலுங்கு, கன்னடம், மராட்டி, அரபி, இந்துஸ்தானி, பார்ஸி, இங்கிலீஷ், பிரெஞ்ச் முதலிய பாஷைகளிலுள்ள இன்பரச நூல்களின் கொள்கைகளும், இன்ப வாழ்க்கையின் இரகசிய முறைகளும், அவரவருக்குப் பொருத்தமான மனத்தையும் கண்ணையும் கவரும் ஆப்டோன் படங்களும், லயன் பிளாக்குகளும், இன்னும் இல்வாழ்க்கைக்கு இன்றியமையாதனவாகிய அநேகம் விஷயங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இதனை வாங்கிப் படிப்போர் உண்மைக் காதல் என்பது இன்னதென்பதையும், இன்னவிதமானவர்களை மணம்புரிந்தால்தான் இன்பம் ஏற்படுமென்பதையும், இல்வாழ்க்கையில் இன்னவித மணக்கிரமங்களை அனுசரித்தால்தான் அளவற்ற ஆனந்தமுற்று அறிவிய சந்ததிகளைப் பெற்று ஜீவித்திருக்கலாமென்பதையும் உணர்ந்து இவ்வுலகத்தில் அடைய வேண்டிய இன்பத்தையும, மறுமை இன்பத்தையும் அடைவார்கள். இதனை ஒவ்வொரு குடும்பத்தினரும் வாங்கி வாசிக்கலாம்,

ஷை தெலுங்கு பதிப்பு விலை ரூபா 2.

# இல்லற இன்ப விஜயம்

"இது எங்கே யிருக்கிறது? என்ன ரூபமுடையது? இதை எப்படி உபயோகித்து ஆண் மக்களும் பெண் மக்களும் உலக இன்பத்தை அனுபவிக்க வேண்டும்?" என்று பலர் இக் கேள்விகளைக் கேட்கலாம்.

உண்மைக் காதல் ரசத்தை விரும்பும் உத்தமர்களே! சுகானந்தத்தை விரும்பும் சகோதர சகோதரிகளே! "இல்லற இன்ப விஜயம்" என்னும் இந்த இன்பரச பொக்கிஷம், ஆனந்தக் களஞ்சியம் சென்னை 'ஆனந்தபோதினி' ஆபீசில் தமிழ்நாட்டுச் சகவாசிகளின் அதிர்ஷ்டவசத்தால் விற்பனைக்கு தயாரித்து வைக்கப்பட்டிருக்கிறது; இஃதோர் அருமையான தமிழ்ப் புத்தகம் இதைப் படித்து ஆண் பெண்கள் அனுபவிக்கத் தக்க இன்ப வகைகள் அத்தனையும் பிரத்தியக்ஷமாகக் கண்டு பேரானந்தத்தை அடையலாம்.

இதன் விலை ரூபா 1—8—0

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு விலை ரூபா 1.

## தமிழ் மெட்டீரியா மெடிக்கா

### என்னும் அருமையான வைத்திய நூல்

## MATERIA MEDICA

இவ்வரிய பெரிய வைத்திய புஸ்தகமானது ஆங்கில மருந்துக் கலப்பு விசார முறைகளைத் தமிழில் விளக்கமாக உள்ளங்கை நெல்லிக்கனிபோல் நன்கு விளக்குவது. இன்னின்ன நோய்க்கு இன்னின்ன விதமாக மருந்துகளைச் சேர்த்து மிக்சர் (Mixture) முதலானவை செய்து சாப்பிடவேண்டுமென்பதை இந்நூல் நன்றாகக் கூறுகின்றமையால் இதை ஓர் 'ஆபத்துக் குதவும் தோழன்' என்று அனைவரும் நம்பலாம். இது வைத்திய அனுபவம் மிகப் பெரிதும் உடைய ஒருவரால் எழுதப்பட்டது. ஒவ்வொருவரும் தம் மக்களுக்குத் தாங்களே கூடிய வரையில் நோய்களுக்குப் பரிகாரம் செய்து கொள்ளவும் இந்நூல் மிகவும் உபயோகப்படும். இதன் விலை ரூபா 3.

ஆனந்தபோதினி ஆபீஸ், மதராஸ்.

புதிய நாவல்! பெருகும் ஆவல்!!

# சற்குணவல்லி

அல்லது

# சித்தூர் இளைய ஜமீன்தாரணி

(ஸ்ரீ. எஸ். எஸ். அருணகிரிநாதர் எழுதியது.)

இதில் தர்மசீலன் என்னும் கதாநாயகன் முதலில் ஆனந்தசுந்தரி என்னும் மாதை மணக்கிறான். இவளோ கணவனை மதியாத மாபாதகி, சிற்றின்ப ஆனந்தத்தையே மதித்து அன்னிய ஆடவருடன் அடிக்கடி உறவாடி கொடு நீலியாகி கொண்டவனை விட்டு கண்டவனுடன் திடீரென்று மறைந்து விட்டாள். தர்மசீலன் மிகவும் யோக்கியன். பிறகு அவன் மேல் காதல் கொண்ட கோமளவரி சற்குணவல்லி என்னும் சித்தூர் இளைய ஜமீன்தாரணி அவனை உள்ளன்புடன் மணக்கிறாள். இவளோ கற்பின் அணிகலம், பெண்களின் பொற்கொடி, பொறுமையின் பொக்கிஷம், நிறையுடைமை நங்கை, வீரத் தெய்வம். கணவனைக் கடவுளென மதித்தவள். தர்மசீலன் முதல் மனைவியைக் கொன்றுவிட்டு மறு மணம் செய்துகொண்டான் என்னும் ஆபாண்டமான பழி, சந்தர்ப்ப சாக்ஷியங்களால் அவனைப் பலவித பரிசோதனைகட்கும், ஆபத்துகளுக்கும் உட்படுத்திற்று. இருந்தாலும் சற்குணவல்லி அவன்மீது வைத்த பிரியம் மாறவில்லை. கடைசியில் ஆனந்தசுந்தரி திடீரென்று ஒரு நாள் தோன்றி தன் நடக்கைக்குத் தக்க தண்டனையைத் தானே ஏற்று தன் கணவன் மீது சுமத்தப்பட்ட வீண் பழியை விளக்கி, ஆவி நீத்தாள். இதில் இருவித மாதர் நடத்தை விளக்கப்பட்டிருப்பதோடு பலவித நீதிகளும் தெள்ளிய எளிய இனிய நடையில் படிப்போர் மனதைப் பரவசப்படுத்தும்படி எழுதப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு ஆடவரும் பெண்டிரும் இதைப் படித்து இருமைப் பயனைத் தேடி இன்புறுவார்களாக.

இதன் விலை ரூபா 1—8—0.

# கைவல்ய நவநீத வசனம்.

ஸ்ரீமான் ஆரணி-குப்புசாமி முதலியார் அவர்கள் எழுதியது.

ஆன்மாக்கள், மாயையினின்றும் விடுபட்டு மோக்ஷசாதனத்தை அடையும் பொருட்டுக் கருணாநிதியாகிய கடவுள் அருளிய வேதத்தின் உட்பொருளைத் தழுவிப் பல மகான்கள் பல நூற்களை இயற்றி யிருக்கின்றனர். அவைகளுள் தாண்டவராய சுவாமிகள் இயற்றிய கைவல்ய நவநீதமும் ஒன்று. இதன் நடை செய்யுளாகவும் மிகவும் கடினமாயிருப்பதால் எவரும் எளிதில் வாசித்துணரும்படி இதை வசனமாக எழுதி வெளியிடப்பட்டிருக்கிறது. இதனால் முத்தி மார்க்கத்தை எவரும் நன்குணரலாம். விலை ரூபா 1—8—0.

ஆனந்தபோதினி ஆபீஸ், நயினியப்பன் தெரு நெ. 167, மதராஸ்.

ஆசிரியரின்றி ஆங்கிலந்
தெரிந்துகொள்ளும்

# ஆனந்த ஆங்கில பாஷா போதினி.

(நான்காம் பதிப்பு) விலை ரூபா 2.

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு விலை ரூ. 1—8—0.

எம். ஏ., எல். டி. பட்டம் பெற்ற ஆங்கில போதகாசிரியராகிய திருவாளர் எம். ஷண்முகசுந்தர முதலியாரவர்களால் இயற்றப்பெற்ற உயர்ந்த திருத்தங்களோடும், சிறந்த அமைப்புகளோடும், நிறைந்த போதனைகளோடும் இப்பதிப்பு வெளிவந்திருக்கிறது.

**800-பக்கங்களுக்குமேல் திக்கு காகிதத்தில் அச்சிடப்பட்டு சீமை காலிகோ பைண்டு செய்யப்பட்டது.**

நற்பல கதைகளும், பாரதக் கதைகளும், ஸ்ரீ கிருஷ்ணர் சரித்திரங்களுக்கும் அடங்கியது. அவற்றிற்குப் பொருத்தமான அழகிற் சிறந்த 16-ஆப்டோன் படங்களுடன் கூடியது.

இக்காலத்தில் இங்கிலீஷ் இராஜ பாஷையாயிருப்பதால் அதை எல்லோரும் கற்றுக்கொள்ளவேண்டியது அவசியமாகவிருக்கின்றது. அப்படிப் படிக்காதவர்கள், பல சங்கடங்களை அடைகின்றனர். ஆதலின், அதனையவர் கற்றுக்கொள்வதற்கு உதவியாயிருக்கும்படி ஆங்கில பாஷையைத் தமிழ் மக்களுக்கு எளிதிற் போதிக்கும் அரிய போதனாமுறை நூலாகிய இது பலர் வேண்டுகோளுக்கிணங்க வெளிப்படுத்தப் பெற்றிருக்கின்றது.




இதனைச் சிரத்தையுடன் படிப்பவர் பணச் செலவில்லாமலும், வேறெவ்விதக் கஷ்டமில்லாமலும் மிக எளிதில் இங்கிலீஷ் பேசவும் படிக்கவும் எழுதவும் கற்றுக் கொள்ளலாம். ஆயிரக் கணக்கான பணச் செலவு செய்து 10 வருஷம் படிப்பதனால் எவ்வளவு ஆங்கில தேர்ச்சி யுண்டாகுமோ அவ்வளவு தேர்ச்சியை ஒரு மாதம் அல்லது 40-நாளில் இப் புத்தகத்தின் உதவி கொண்டு அடைந்து, ஆங்கிலத்தை அதி சீக்கிரத்தில் படித்துக்கொள்ளலாம். மனிதர் மிக சுலபமாக இங்கிலீஷ் கற்றுக்கொள்ளத் தக்க மார்க்கங்களெல்லாம் இதில் விளக்கமாக அமைக்கப் பெற்றிருக்கின்றன.

இதில் இதுவரை வெளிவராத நூதன பாடமுறைகளெல்லாம் வெளியிடப்பட்டிருக்கின்றன. இன்னும் ஒரு ரூபா முதல் 10 ஆயிரம் ரூபாவரை வட்டிக்கணக்கு, வட்டிக்கணக்கு, ஒவ்வோரு தேசத்திலும் ஏற்படும் நாணய வித்தியாசம், அன்னிய தேச நாணய மதிப்பு முதலியனவெல்லாம் தெளிவாக விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது.

மேற்படி தேலுங்கு பதிப்பு விலை ரூபா 2.

**ஆனந்தபோதினி ஆபீஸ், தபால் பெட்டி நெ. 167, மதராஸ்.**

ஔவையார் அருளிச்செய்த

# பெட்டகம்.

புதிதாய் அச்சிடப்பட்டு வெளிவந்துவிட்டது. விலை அணா 8.

# கற்கோட்டை

ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியாரவர்களால் வரையப்பட்டது.

இந்த அற்புதமான நாவல் ஏற்கனவே நமது சஞ்சிகையில் தொடர்ச்சியாய்ப் பிரசுரிக்கப் பட்டு வந்ததாகும். இதன் விசேஷத்தையறிந்து நமது சந்தாதார்களில் அநேகர் இதைப் புத்தகமாய் முடித்துத்தர வேண்டுமென்று பன்முறை கேட்டுக் கொண்டபடியால் இது வெளியிடப் பட்டது. ஸ்ரீமான் முதலியாரவர்களுடைய நாவல்களை வாசித்துள்ள நம் தமிழ் நாட்டார்க்கு இந்நாவலின் சுவையையும் அழகிய கதைப் போக்கையும் நாம் எடுத்துக் காட்டவேண்டுவது அநாவசியம் என்றே நினைக்கின்றோம். அவர் எழுதிய நாவல்களுள் இதுவே தலை சிறந்ததாகும். இதன் விசேஷ அம்சங்களைச் சுருக்கமாய்க் கீழே குறிப்பிடுகின்றோம்.

இந்த நாவல் ஆரம்பத்திலேயே வாசிப்போர் மனதைப் பூரணமாய்க் கவர்ந்துகொள்வதோடு முடியுமட்டும் அக்கவர்ச்சி நீங்காது. இது சரித்திர சம்பந்தமான நாவல் எனலாம். இதில் தேசப்ரஷ்டமடைந்த சில உயர்குல ஆடவர்த்தனர்கள் தலை மறைந்து வசிக்கும்போது, கெஞ்சு நடுக்கிடும் வீரா அபாயத்துகளில் சிக்கிக் கொள்வதும், அவற்றினின்றும் தப்பித்துக்கொள்ள அவர்கள் செய்யும் வீர தீர சாமர்த்தியச் செயல்களும் சொல்லொணா வியப்பையும் சோகத்தையும் வீரரசத்தையும் ஊட்டும். சில ஸ்திரீகளின் அற்புத நடக்கைகளும் துணிகரமான தீரச் செயல்களும், தம் காதலரிடத்தில் மெய்க் காதல் கொண்ட உத்தம ஸ்திரீகள் தம் காதலர் பொருட்டாய் எவ்வளவு வரையில் ஆடவருக்குச் சமமாய் நடந்து கொள்ளச் சக்தியுடையவர்களாயிருக்கிறார்களென்பதை நன்கு விளக்கும். இக் கதையிலுள்ள முக்கிய விசேஷமாவது, இதிலுள்ள கதா பாத்திரங்களில் ஒவ்வொருவருடைய நடக்கைகளும் அவற்றின் பயன்களும் மானிடர்க்கு இன்றியமையாததான ஒவ்வொரு நீதியை அத்தாட்சியோடு புகட்டுகின்றன.

இது தெளிவான இனிய நடையில், ஆண்களுக்கு நாம் உணரவேண்டிய முக்கிய விஷயங்களையெல்லாம் விளக்கிக் காட்டி எழுதப்பட்டிருக்கிறது. இதில் நூலாசிரியர் திருவுருவப் படமும் அமைக்கப்பட்டிருக்கிறது.

**இதன் விலை ரூபா 2—0—0.**

"ஆனந்தபோதினி" சந்தாதாரர்களுக்கு

**விலை ரூபா 1—8—0.**

**ஆனந்தபோதினி ஆபீஸ்,** தபால் பெட்டி நெ. 167, மதராஸ்.

## துரைத்தனத்தாரால் அங்கீகரிக்கப்பெற்ற எமது சொந்த பிரசுரப் பாடசாலை புத்தகங்கள்.

### பாடப் புத்தகங்களின் விவரம்.

| | | அ. | பை. |
|---|---|---|---|
| 1-ம் வகுப்பு மாணவர் தமிழ் பாலபாடம் | (1-ம் புத்தகம்) | 2 | 6 |
| 2-ம் வகுப்பு மாணவர் தமிழ் வாசகம் | (2-ம் புத்தகம்) | 3 | 0 |
| 3-ம் வகுப்பு ஷை | (3-ம் புத்தகம்) | 4 | 0 |
| 4-ம் வகுப்பு ஷை | (4-ம் புத்தகம்) | 5 | 0 |
| 5-ம் வகுப்பு ஷை | (5-ம் புத்தகம்) | 6 | 0 |
| 6-ம் வகுப்பு ஷை | (6-ம் புத்தகம்) | 7 | 0 |
| 7-ம் வகுப்பு ஷை | (7-ம் புத்தகம்) | 8 | 0 |
| 5-ம் வகுப்பு இளைஞர் இந்திய சரித்திரக் கதைகள் | | 4 | 0 |
| 5-ம் வகுப்பு இலக்கிய இலகு போதம் | | 3 | 0 |
| சிறுவர் துரைத்தன முறைகள் | (1-ம் பாகம்) | 5 | 0 |
| சிறுவர் துரைத்தன முறைகள் | (2-ம் பாகம்) | 6 | 0 |
| செய்யுட்பாடத்திரட்டு | | 4 | 0 |

### உப பாடமாக வைப்பதற்குரிய புத்தகங்கள்.

| | ரூ. | அ. |
|---|---|---|
| சதானந்தர் | 1 | 4 |
| ஜீவகன் | 1 | 0 |
| கர்ணன் சரிதை | 0 | 12 |
| ஸ்ரீ பீஷ்மவிஜயம் | 0 | 10 |
| வீரத்தன்மையுள்ள ஹிந்து மாது சிரோமணிகள் | 0 | 10 |
| கீர்த்திசிங்கன் | 0 | 8 |
| அரிச்சந்திரன் சரிதை | 0 | 8 |
| சகோதர வாஞ்சை | 0 | 7 |
| நீலக்கொடி | 0 | 5 |
| மணவாளன் | 0 | 3 |
| பரசுராமன் | 0 | 3 |
| ஸ்ரீ கிருஷ்ணன் தூது | 0 | 8 |
| தசாவதார மகிமை | 0 | 6 |
| சிசுபாலன் | 0 | 8 |
| சண்டோபாக்கியானம் | 0 | 6 |
| அங்கதன் | 0 | 4 |
| மங்களேசுவரன் | 0 | 6 |
| சத்திய வசனன் | 0 | 4 |
| சாது மந்திரி கதை | 0 | 4 |
| விமலன் or விதியின் வெற்றி | 0 | 4 |

| | ரூ. | அ. |
|---|---|---|
| சங்ககாலத்துப் புலவர்கள் அல்லது பண்டைத் தமிழ்ப் புலவர் மாண்பு | 0 | 10 |
| கண்ணபிரான் | 0 | 4 |
| உதயணன் | 0 | 6 |
| ஸ்ரீ பாலன் | 0 | 8 |
| தசக்கிரீவன் | 0 | 14 |
| போஜ சரித்திரம் | 0 | 5 |
| லார்ட் கிளைவ் | 0 | 12 |
| மூப்பெருந்தாசர் | 0 | 10 |
| சீமந்தனி | 0 | 8 |
| தக்கன் | 0 | 6 |
| ரிப்பன் பிரபு | 0 | 10 |
| மாதர் நீதிமஞ்சரி | 0 | 6 |
| பாரத வீரர்கள் | 0 | 8 |
| நான்கு கோடி அல்லது நான்கு கடமைகள் | 0 | 4 |
| நரிவிருத்தம் மூலமும் உரையும் | 0 | 4 |
| கண்ணகி | 0 | 10 |
| விஜயதிவிட்டர் | 0 | 12 |
| கருணாகரரும் சத்தியசீலரும் | 0 | 8 |

**ஆனந்தபோதினி ஆபீஸ்,**
**தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.**


உ
ஓம்
பரப்பிரஹ்மணே நம:

# ஆனந்தபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்.

(ALL RIGHTS RESERVED.)


| தொகுதி | யுவ௵ மார்கழிமீ கஉ | பகுதி |
|---|---|---|
| 21 | 1935௵ டிசம்பர்மீ 16௳ | 6 |


## கடவுள் வணக்கம்

அன்றுநால் வருக்கும் ஒளிநெறி காட்டும்
அன்புடைச் சோதியே செம்பொன்
மன்றுள்முக் கண்ணும் காளகண் டமுமாய்
வயங்கிய வானமே என்னுள்
துன்றுகூர் இருளைத் தூர்ந்திடு மதியே
துன்பமும் இன்பமும் ஆகி
நின்றவா தனையைக் கடந்தவர் நினைவே
நேசமே நின்பரம் யானே. (1)

யானெனல் காணேன் பூரண நிறைவில்
யாதினும் இருந்தபே ரொளிநீ
தானென நிற்கும் சமத்துற என்னைத்
தன்னவ னாக்கவும் தகுங்காண்
வானென வயங்கி ஒன்றிரண் டென்று
மார்க்கமாம் நெறிதந்து மாறு
தேனென ருசித்துள் அன்பரைக் கல
செல்வமே சிற்பர சிவமே. (2)

விண்ணருவி மேன்மேல் விளங்குவபோ
கண்ணருவி வெள்ளமொடு கைகூப்பித்—தண்ணமிர்த
வெள்ளமே ஆனந்த வெற்பே எனத் தொழுவோர்
உள்ளமே ஞான ஒளி. (3)

சொல்லிற் பதர்களைந்து சொன்முடிவு காணாதார்
நெல்லிற் பதர்போல நிற்பார் பராபரமே. (4)

207701

# அரும்பொருள் விளக்கம்

1. இதனால் தம்மை இறைவனுக்கு அர்ப்பணம் செய்தமை கூறுகின்றார்.

(இ-ள்) அந்நாளில் சனகாதி நால்வருக்கும் அருளொளியோடுங் கூடிய மார்க்கத்தைக் காட்டிய அன்பினையுடைய ஒளிப்பிழம்பே! கனக சபையில் மூன்று கண்களும் காளகண்டமுமாய் விளங்கிய பரமாகாயமே! அடியேனிடத்துச் செறிந்து மிகுந்த அறியாமை இருளை ஓட்டுகின்ற ஞானசந்திரனே துன்பமும் இன்பமுமாகி நிலைபெற்ற வேதனைகளை நீங்கிய அறிஞாது என்னமே! அன்பே! நான் தேவரீருடைய பக்ஷம் என்க.

பிரம புத்திரர்களாகிய சனகன், சனந்தனன், சனாதனன், சனற்குமாரன் என்னும் முனிவர் நால்வரும் மனமொடுங்கி ஞான நிலை யுணர்ந்து, பேரின்பப் பெருக்கிலழுந்திச் செயலொன்றுமில்லாதிருக்க முதல்வன் திருக்கரமொன்றனைத் திருமார்பிற் சேர்த்துச் சின்முத்திரை காட்டி க்ஷணப்பொழுதிஷ்டை கூடி யருளினன் என்பார் "அன்று நால்வருக்கு மொளிநெறி காட்டும் அன்புடைச் சோதியே" என்றனர். "செம்பொன் மன்றுள் மூக்கண்ணும் காளகண்டமுமாய் வயங்கிய" என்றது தில்லைச் சிற்றம்பலத்தின்கண்ணே ஞானத் தாண்டவம் செய்யும் ஆனந்த நடராஜமூர்த்தியினை. "வானமே" என்றது சிற்றம்பலத்தே காணப்படும் ரகசியத்தினை.

2. இதனால் தம்மை உரிமை ஆக்கிக்கொள்ளுமாறு இறைவனை வேண்டுகின்றார்.

(இ-ள்) மேகத்தினைப்போல் விளங்கி, ஒன்றெனவும் இரண்டெனவும் சொல்லப்படாத மார்க்கமாகிய வழியை அளித்து, மாறுபடாத தேனைப்போல் சுவையினைத் தந்து, அன்பர்களை உள்ளே கலந்து நின்ற ஐசுவரியமே! ஞானமயமாகிய மங்களமே! சர்வ வியாபகத்தில் யான் என்பதை அறிகிலேன். எப்பொருளினும் தங்கிய பரஞ்சோதி தேவரீரே என்று நிற்கின்ற சம நிலையில் பொருந்தும்படி அடியேனை உன்னவனாக்கிக்கொள்ளவும் தகும் என்க.

முதல்வனுடைய திருவருள் வியாபகத்திற் கலந்து பேரானந்தத்தை அனுபவிக்கின்ற சமயத்தில் தானென ஒன்று தோன்றாதாகலின் "யானெனல் காணேன் பூரண நிறைவில்" என்றனர்.

3. (இ-ள்) ஆகாயத்திலுள்ள கங்கையாகிய பிரவாகம் மேன்மேலும் பெருக்கெடுத்து ஓடுவதுபோல் இரண்டு கண்களிலும் அருவிப் பெருக்குடன் அஞ்சலித்துக் குளிர்ச்சி பொருந்திய அமிர்தப் பிரவாகமே! ஆனைமலையே! எனத் தோத்தரித்து வணங்குவோர் மனதே ஞானமயமாகிய கூடாரம் என்க.

கண்ணின் கண்ணே வெள்ளம் பெருகச் செய்தல் மனத் தொழில். கை கூப்புதல் காயத்தொழில். வெள்ளமே வெற்பே எனல் வாக்குத் தொழில்—ஆகவே மனவாக்குக் காயங்களால் வழிபடுவோர் இருதயத்திலேயே முதல்வன் விளங்குபவன் என்பார் "உள்ளமே ஞான ஒளி" என்றார்.

யுவ௵ மார்கழிமீ 1௨

## "படித்த பிச்சைக்காரர்கள்"

"இந்திய சர்வகலாசாலைகளில் மாணவர்கட்கு மேனாட்டுக் கல்வி போதிக்கப்படுகிறது. இந்நாட்டில் (இங்கிலாந்து) இருப்பதைக் காட்டிலும் அங்கே இரண்டுமடங்கு மாணவர்கள் அதிகமாய் இருக்கிறார்கள். அவர்களில் ஒவ்வொருவரும் ஒரு தேசியவாதி ஆவர். எல்லாரும் இந்தியாவுக்குப் பொறுப்பாட்சி வேண்டும் என்கின்றவர்கள். இந்தியாவிற்கு நாளைக்குத் தலைவர்களாய் இருக்கப் போகிறவர்கள் யார்? யார் பத்திரிகாசிரியர்களாய் வரப்போகிறார்களோ அவர்களே ஆவர். இந்தச் சர்வகலாசாலை மாணவர்களே ஸிவில் ஸர்விஸில் இருப்பார்கள். பிரபல வக்கீல்களாய் இருக்கப் போகிறார்கள். வியாபாரிகளாயும் விளங்கப் போகிறார்கள்"—இவ்வாறு இந்திய மசோதாவைப்பற்றிப் பேசுகையில் லார்டு லோதியன் குறிப்பிட்டிருந்தார். சர்வகலாசாலை மாணவர்கட்கு இது ஒரு பெரிய மதிப்புரைதான். ஆனால் இதில் எவ்வளவு உண்மை உண்டு என்பதை நம்மனோர் நன்கு அறிவர். இந்திய சர்வகலாசாலைகளில் மேனாட்டுக் கல்வி போதிக்கப்படுவது உண்மை. லார்டு லோதியன் குறிப்பிட்டபடி சர்வகலாசாலை மாணவர்கள் எல்லாரும் தேசியவாதிகளா என்பது ஐயத்திற்குரிய விஷயம். சர்வகலாசாலை மாணவர்களில் சிலர் அரசியல் தலைவர்களாய் வரலாம். ஸிவில் ஸர்விஸில் இருக்கலாம். வக்கீல்களாய் வரலாம். ஆனால் வியாபாரிகளாய் வர விரும்புவார்களா என்பது விவகாரத்திற்குரிய விஷயம். சர்வகலாசாலைகள் வெறும் அரசியல் தலைவர்கள்—பத்திரிகாசிரியர்கள்—ஸிவிலியன்கள்—வக்கீல்கள்—டாக்டர்கள் முதலியவர்களை உற்பத்தி செய்துவிட்டால் போதுமா? இக்காலத்தில் சர்வகலாசாலைப் பட்டதாரிகள் வேலையில்லாத் திண்டாட்டத்தில் மூழ்கித் தத்தளித்துக் கொண்டிருப்பதை நாம் கண்கூடாகக்கண்டு வருகின்றோம். சர்வகலாசாலைகள் அரசியல்

தலைவர்கள்—ஸிவில் ஸர்விஸ்காரர்—வக்கீல்கள் முதலியவர்களை உண்டாக்க வல்லன என்பதை நாம் மறுக்கத் துணியவில்லை. இந்திய ஏழை விவசாயப் பெருங்குடி மக்கள் நெற்றி வியர்வை நிலத்தில் சொட்டப் பாடுபட்டுக்கொடுத்த வரிப்பணத்தாலே நடைபெறுவன சர்வகலாசாலைகள். இந்நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு உயிர்நாடியாய் விளங்கும் விவசாயத்தை முன்னேற்ற இச் சர்வகலாசாலைகள் கடமைப்பட்டிருக்கின்றனவா இல்லையா! இந்நாட்டின் கைத்தொழில் வளர்ச்சிக்கு ஆக்கம் அளிக்கக் கடமைப்பட்டிருக்கின்றனவா இல்லையா? வர்த்தக வளர்ச்சிக்கு உதவி செய்யக் கடமைப்பட்டிருக்கின்றனவா இல்லையா! இந்த உண்மைகளை ஒவ்வொருவரும் சிந்தித்துப் பார்க்கவேண்டும். சர்வகலாசாலைகள் வெறும் அறிவியல்-இலக்கியக் கல்வியை மட்டும் வளர்க்கக் கடமைப்பட்டவை என்ற வாதத்தை இக்காலத்தில் யாரும் அவ்வளவாக ஒப்புக்கொள்ளுவதில்லை. டில்லியில் கூடிய சர்வகலாசாலைகள் மகாநாடு கைத்தொழில் வளர்ச்சிக்குச் சர்வகலாசாலைகள் ஆக்கம் அளிக்கவேண்டும் என்று தீர்மானித்ததும் கவனிக்கத்தக்கதாகும்.

ஆண்டுதோறும் நடைபெற்று வரும் ஒவ்வொரு சர்வகலாசாலைப் பட்டமளிப்பு விழாவிலும் கல்வியறிவிற் சிறந்த மேதாவிகள் இக்காலக் கல்வி முறையைக் கண்டிக்காமல் விடுவதில்லை. சர்க்கார் உத்தியோகங்கட்குத் தகுந்த ஆட்கள் கிடைப்பது பஞ்சமாயிருந்த காலத்தில் ஏற்படுத்தப்பட்ட "குமாஸ்தாக் கல்விமுறை" எல்லாக் காலத்திற்கும் பொருந்திவரும் என்று எவ்வாறு எதிர்பார்க்க முடியும்? எனவே நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குரிய கல்விமுறையைச் சர்வகலாசாலைகள் மேற்கொள்ளவேண்டும் என்று அறிஞர்கள் அடிக்கடி வற்புறுத்தி வருவதை நாம் எடுத்துக் காட்டிக்கொண்டே வந்திருப்பது நேயர்களுக்குத் தெரியும்.

30--11-35-ம் தேதி பாட்னா சர்வகலாசாலையின் பட்டமளிப்பு விழா நடைபெற்றது. மகாகனம் ஸர். தேஜ் பகதூர் ஸப்ரூ பட்டமளிப்பு விழாச் சொற்பொழிவு நிகழ்த்தினார். அவர் அச்சமயத்தில் வெளியிட்ட கருத்துக்கள் பெரிதும் போற்றத்தக்கவை ஆகும். "1915-ம் ஆண்டில் இந்தியாவிலுள்ள சர்வகலாசாலைகளில் பட்டம் பெற்றவர்களின் தொகை 61, 225-பேர். 1932-ம் ஆண்டில் 105000 பேர். இவ்வளவு ஆண்டுகளாக நாம் சாதித்ததுதான் என்ன? முதலில் சர்வகலாசாலைகளை ஏற்படுத்தினோம். பிறகு அவற்றை வளர்த்தோம். முடிவாக அவற்றைப் பற்றிக் குறை கூறுகின்றோம்—அல்லது போற்றுகின்றோம்" என்று ஸர் ஸப்ரூ கூறினார். இதன் கருத்தென்ன! சர்வகலாசாலைகள் பயன்தரத்தக்க முறையில் அமைக்கப்படவில்லை என்றே அவர் கருதுகின்றார். ஸர் ஸப்ரூ கல்வியறிவின் உயர்வைப் போற்றுகிறார். ஆனால் நாட்டில் "படித்த பிச்சைக்காரர்கள் பெருகி விட்டார்களே" என்று வருந்துகின்றார். நன்றாகக் கல்வி பயின்ற பிறகு யாரும் வேலையில்லாமல் திண்டாடக்கூடாது என்று அறிஞர் ஸப்ரூ எண்ணுகின்றார். இக்காலக் கல்வி முறையானது மாணவர்களை விவசாயம்—கைத்தொழில்—வர்த்தகத் துறைகளில் இறங்கத் தூண்டுவதில்லை என்று நாம் எத்தனையோ தடவை எழுதியிருக்கின்றோம். அறிஞர் ஸர் ஸப்ரூ அவர்களும் இதே கருத்தை வெளியிட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. "கலாசாலை—கல்லூரிகளில் படித்தல்—ஸினிமாக்களைப் பார்த்தல்—பத்திரிகைகளைப் படித்தல் முதலியவைகளால் மாணவர்களின் மனோநிலை மாறிக் கிடக்கின்றது. அவர்கள் கிராமங்களில் வசிப்பதற்குத் தகுதியற்றவர்களாகி விட்டார்கள். ஆகையால் அவர்களைக் கிராமங்களுக்குச் சென்று விவசாயத்தைக் கவனிக்கச் சொல்லுவது நடவாத காரியம்" என்று அவர் கூறியது முற்றிலும் உண்மை என்பதை விரிக்கவும் வேண்டுமோ? மேனாட்டுச் சர்வகலாசாலைகள் மாணவர்கட்கு வயிற்றுப் பாட்டுக்கு வழி காட்டும் கல்வி முறையைப் போதிக்கின்றன என்றும் அவர் சுட்டிக் காட்டினார். அப்படியே நம்முடைய சர்வகலாசாலைகளும் வாழ்க்கையை நடத்த உற்சாக மூட்டும் கல்வி முறையை மேற் கொள்ளவேண்டும் என்கிறார். இப்பொழுதுள்ள கல்வி முறையை அடியோடு மாற்றி விடவேண்டும் என்பது ஸர் ஸப்ருவின் ஆவல். உயர்தரக் கல்வி கற்பிக்கப்படுவதை அவர் ஆக்ஷேபிக்கவில்லை. ஆனால் ஆரம்பக் கல்வியும் நடுத்தரக் கல்வியும் ஜீவனத்திற்கு உபயோகப்படக் கூடிய முறையில் இருக்க வேண்டும் என்று கருதுகிறார். ஆரம்பக் கல்வி விவசாயத்திற்கு ஆக்கம் அளிக்க வேண்டும் என்றும் நடுத்தரக்கல்வி வேறு கைத்தொழில் வர்த்தகங்கட்கு உற்சாகம் கொடுக்க வேண்டும் என்றும் அவர் எடுத்துக் காட்டினார். "கிராமத்தவாசிகளாய் வாழ்வதற்கு வேண்டிய முறையில் ஆரம்பக் கல்வி போதிப்பதாலும், வேறு தொழில்களுக்கு வேண்டிய முறையில் நடுத்தரக் கல்வியைப் போதிப்பதாலும் மாணவர்களின் நிலைமையை வெகுதூரம் உயர்த்தி விடலாம்" என்று ஸர் ஸப்ரூ கூறியதை எல்லாரும் ஆதரிக்க வேண்டும் என்று விரும்புகின்றோம். இங்ஙனம் செய்தால் கல்லூரிகளில் கற்பிக்கப்படும் உயர்தரக் கல்வி மேலும் உரம் பெற்று விளங்கும் என்பதில் ஐயம் இல்லை.

இந் நாட்டில் 100-க்கு 90 பேர் இன்னும் எழுதப் படிக்கத் தெரியாத தற்குறிகளாய்க் காலங் கழித்து வருகிறார்கள். படித்தவர்களான சொற்பத் தொகையினரும் பயனற்ற உயர்தரக் கல்வியைக் கற்று வேலையில்லாமல் திண்டாடிக் கொண்டிருக்கின்றனர். தற்குறிகளான ஏழை விவசாயிகளின் வரிப்பணம் பயனற்ற உயர்தரக் கல்விக்குப் பாழ் போவதைக் கண்டு இன்னும் எத்தனை நாளைக்குப் பொறுமை காட்டுவது என்று கேட்கின்றோம். உயர்தரக் கல்விக்குச்

செலவு செய்யும் பெருந் தொகைகளைப் பயனுள்ள ஆரம்ப—நடுத்தரக் கல்விக்குச் செலவு செய்தால் நாட்டு மக்களிடையே அறியாமை நீங்கிச் செல்வ வளம் செழுமை அடையும் என்பதில் எள்ளளவேனும் ஐயமுண்டோ? குறைந்த பக்ஷம் ஒரு 10 அல்லது 15 ஆண்டுகள் வரையிலேனும் உயர்தரக் கல்லூரிகளை மூடிவிட்டு ஆரம்ப—நடுத்தரக் கல்வியைச் சிறந்த முறையில் வளர்க்க வேண்டும் என்பது நமது அபிப்பிராயம். மகாகனம் ஸர் ஸப்ரூ போன்ற அறிஞர்கள் முயன்றால் பயன்தரத்தக்க கல்வி முறையை விரைவில் ஏற்படுத்தலாம் என்றே நம்புகின்றோம். அவர் கூறியது போல் "படித்த பிச்சைக்காரர்கள்" பெருகி வருவது நாட்டுக்கே மானக்கேடாகும்.

---

# இந்தியருக்கு ராணுவப் பயிற்சி

"இந்தியர் பரமசாதுக்கள்—போருணர்ச்சி படைத்தவர்களல்லர்" என்ற ஒரு அபிப்பிராயம் எப்படியோ உலகமெங்கும் பரவிவிட்டது. தேசிய உணர்வு மேலோங்கி வரும் இக்காலத்தில் இந்த அபிப்பிராயத்தை இந்திய மக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். தமிழர் வீரம், மராட்டியர் பராக்கிரமம், இராஜபுத்திரர் அஞ்சா நெஞ்சம் முதலியவைகளைப் பற்றி வருணிக்கத் தொடங்கி விடுவார்கள். உண்மை. இந்தியாவில் ஒரு காலத்தில் வீரம், பராக்கிரமம், அஞ்சா நெஞ்சம் முதலிய குணங்கள் வீறுகொண்டு விளங்கியதை நாமும் ஒப்புக்கொள்ளுகின்றோம். ஆனால் பல நூற்றாண்டுகளாக இந்தியா அந்நியர் அலைக்கழிப்புக்கட்கு உட்பட்டிருந்ததையும் எல்லாரும் ஒப்புக்கொண்டு தீரவேண்டும். இதற்கென்ன காரணம்? இந்தியருக்கு அறிவில்லையா? கல்வி இல்லையா? வலிமை இல்லையா! செல்வம் இல்லையா? என்ன இல்லை? எல்லாம் உண்டு. ஆனால் ஒற்றுமை இல்லை. சாதி, சமயம், மொழி வேற்றுமைகள் இந்திய மக்களைப் பிரித்துப் பாழ்படுத்தி அடிமைகளாக்கி விட்டன. நமது இன்றைய இழிநிலைமைக்கு இவைகளைத் தவிர வேறு காரணம் என்ன இருக்கிறது என்று எனக்கு விளங்கவில்லை.

நமது வலிமைக் குறைவுக்கும், ஆண்மைக் குறைவுக்கும் காரணம் ஒரு சில சமய சாஸ்திரங்களே என்று கூறலாம். மக்கள் இவ்வுலக வாழ்வில் அநுபவிக்க வேண்டிய சாதனங்களைப் பெருக்க நம் நாட்டுச் சமய சாஸ்திரங்கள் ஊக்கம் அளிக்கவில்லை. "உலகம் நிலையாமை, இளமை நிலையாமை, யாக்கை நிலையாமை, செல்வம் நிலையாமை—எல்லாம் பொய், நமக்கு இவ்வுலகம் வேண்டாம்" என்னும் தத்துவங்



களையே நமது சமய சாஸ்திரங்கள் வற்புறுத்திக்கொண்டு வந்திருக்கின்றன. ஆதியில் இந்தத் தத்துவங்கள் எங்கும் மேலோங்கி நின்றமை சரித்திரப் பிரசித்தம். ஜைன, புத்த சமயங்கள் இந்த நிலையாமை உணர்வை மேன்மேலும் பெருக்கத் தொடங்கின என்பது நமது கருத்து. வேறு சமயங்களும் இவைகளை ஆதரிக்காமல் இல்லை. இப்பொழுது நாம் சாதுக்களாய்—அப்பாவிகளாய் இருப்பதற்குரிய காரண காரியங்களை ஆராய்ந்து முடிவு கட்டவேண்டியது இத்தலையங்கத்தின் நோக்கம் இல்லை. இந்தியருக்கும் வலிமை உண்டு. ஆண்மை உண்டு. வீரம் உண்டு. அவர்களும் தங்கள் நாட்டைக் காக்க வல்லவர்களே என்ற உண்மையை நாம் வெளிப்படுத்தவேண்டும். அதற்கு ஒரு அரிய சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கும் நற்செய்தியை நேயர்கட்கு மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

இந்தியருக்கு ராணுவப்பயிற்சி அளிக்கவேண்டும். ராணுவத்தை இந்திய மயமாக்க வேண்டும் என்பது நீண்டநாள் கூக்குரல். இதைப் பற்றி அரசாங்கத்தார் போதிய சிரத்தை காட்டாமலே இருந்து வந்திருக்கின்றனர். பிறகு கொஞ்சம் கொஞ்சமாக ராணுவத்தை இந்தியமாக்குவதாக ஒப்புக்கொண்டிருக்கின்றனர். ராஜாங்க சபையில் சேனாதிபதி சமீபத்தில் பேசியபோது "ராணுவ உத்தியோகஸ்தர் பதவியைப்பெற விரும்பும் அபேக்ஷகர்களுக்குப் போதிய ராணுவக்கல்வி கிடைப்பதில்லை. யோக்கியதையில் குறைவானவர்களே இந்திய ராணுவக் கழகத்தில் வந்து சேருகின்றனர்" எனக் குறிப்பிட்டிருந்தார். இது வெறும் சாக்குப் போக்கு. அரசாங்கத்தார் இவ்விஷயத்தில் உண்மைச் சிரத்தைகாட்டினால் பல்லாயிரக்கணக்கான திறமைசாலிகள் கிடைப்பார்கள் என்பது நமது கருத்து.

டாக்டர் மூஞ்சே அவர்கள் இந்தியர்கள் ராணுவப்பயிற்சி பெற வேண்டும் என்பதில் கண்ணும் கருத்தும் உடையவர். அவர் எங்கே சென்றாலும் இதே பேச்சைத்தான் பேசுவார். ஒரு ராணுவக்கலாசாலையை நிறுவவேண்டும் என்று தவங் கிடந்தார் என்றே சொல்ல வேண்டும். இப்பொழுதுதான் அவரது நோக்கம் கைகூடியிருக்கிறதாகத் தெரிகிறது. இந்த ராணுவக்கலாசாலை ஏற்பாடு பற்றி அவர் சேனாதிபதியையும் கலந்து பேசியதாகத் தெரிகிறது. சேனாதிபதியும் ஆசி கூறியிருக்கிறார். "இந்தியாவில் ராணுவக்கல்வி போதிய அளவு இல்லை. எனவே நீங்கள் ஏற்படுத்தும் ராணுவக்கலாசாலைக்காக நான் மகிழ்கின்றேன். இந்திய ராணுவக்கழகத்திற்கு மாணவர்களை அனுப்பக் கூடிய ஒரு ஸ்தாபனமாக உங்கள் கலாசாலை வளர்ச்சி பெறவேண்டும்" என்று வாழ்த்தும் கூறினார் சேனாதிபதி. டாக்டர் மூஞ்சே அவர்கள் ராணுவப் பயிற்சிக் கலாசாலை ஏற்படுத்துவதற்குரிய காரணங்களைத் தெளிவாகக் கூறியிருக்கிறார். "நமது நாட்டினர் தைரியத்திலும் வீரத்திலும் குறைந்தவர்களல்லர். ஆனால் ஐரோப்பியர்

கட்கு அளிக்கப்படும் ராணுவப் பயிற்சியைக் கவனிக்கையில் நம்மவர் சற்றுப் பின்வாங்க வேண்டிய நிலையில் இருப்பது உண்மை. ஆகவே நாமும் ஐரோப்பிய முறையில் நம்மவருக்கு ராணுவப் பயிற்சி அளிக்கும் வரையில் இக்குறை நீங்காது'' என்று டாக்டர் மூஞ்சே கூறியிருக்கிறார். இதிலிருந்து இக்கலாசாலையின் நோக்கம் இன்னது என்று இனிது விளங்கும் என்றே நம்புகின்றோம்.

இந்த ராணுவப் பயிற்சி சாலையில் நமது சிறுவர்கட்குத் தேசிய உணர்ச்சி குன்றாத முறையில் பயிற்சி அளிக்கப்படும். இதற்காக மத்திய ஹிந்து ராணுவப்பயிற்சி சங்கம் என்ற பெயரால் ஒரு சங்கமும் நிறுவப்பட்டிருக்கிறது. அடுத்த ஜுலைமாதம் முதல் கலாசாலையைத் தொடங்கவேண்டிய ஏற்பாடுகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அபோத்தாபாதுக்கும் டேராடூனுக்கும் இடையில் மித சீதோஷ்ண நிலையுள்ள இடத்தில் ஷை ராணுவப்பயிற்சிக் கலாசாலை ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. சுமார் மூந்நூறு மாணவர்கள் வரை சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். மொத்தம் மூன்று லக்ஷ ரூபாய் வேண்டும். பிரதாப்சேத் எனப்படும் சேத் மோதிலால் மாணிக்க சந்த் என்பவர் லக்ஷ ரூபாய் நன்கொடை கொடுத்திருக்கிறாராம். இவருடைய வள்ளன்மையை நாம் பெரிதும் போற்றுகின்றோம். பாக்கி இரண்டு லக்ஷ ரூபாயைக் கீழ்க்கண்ட முறையில் வசூலிக்க உத்தேசித்திருக்கிறார் டாக்டர் மூஞ்சே. குறைந்த பக்ஷம் 100 ரூபாய் நன்கொடை அளிக்கும் 500 ஆயுள் அங்கத்தினரைச் சேர்த்தல். குறைந்தபக்ஷம் 500 ரூபாய் நன்கொடை வழங்கும் நலங்கருதுவோரைச் சேர்த்தல். 1000 ரூபாய்க்குக் குறையாமல் வழங்கும் கொடையாளிகளைச் சேர்த்தல். மேலும் ஜமீன்தார்களும் மற்றச் செல்வர்களும் போஷகர்களாகச் சேர முன்வரவேண்டும் என்று டாக்டர் மூஞ்சே எதிர்பார்க்கிறார். 1936-ம் ஆண்டு ஜுலை மாதத்திற்கு முன் இரண்டு லக்ஷ ரூபாயை வசூல் செய்துவிட வேண்டும் என்பது டாக்டர் மூஞ்சேயின் வேட்கை. 100 ரூபாய்க்குக் குறைவான நன்கொடைகளும் ஏற்றுக் கொள்ளப்படும். இந்திய ராணுவப் பயிற்சி அபிவிருத்தியில் சிரத்தை உடைய ஒவ்வொருவரும் டாக்டர் மூஞ்சேயின் நன் முயற்சிக்கு ஆதரவு அளிக்க வேண்டும் என்பது நமது வேண்டுகோள்.

ஓம் தத் ஸத்.





# சாங்கிய தரிசனம்

(திரு. எஸ். ஏ. திருமலைக் கொழுந்துப் பிள்ளை, பி. ஏ.)

(374-ம் பக்கத் தொடர்ச்சி.)

## 11-வது காரிகை

திரிகுண மவிவேகி விஷயஃ சாமான்ய மசேதனம்-பிரசவத் தர்மி—வியக்தம்த தாபிரதானம்-தத்விபரீதஸ்யதா சபுமாந்.

[தோற்றமுற்ற பொருட்கும் தோற்றமுறாப் பொருட்கும் உள்ள அபேதமும் (இவ்விரு பொருள்களுக்கும் மாறாய) புருஷனது இலக்கணமும்.]

தோற்றமுற்ற பொருள் முக்குண வயப்பட்டது. பகுத்தறியுந் தன்மையதல்ல, நோக்கத்திற் குட்பட்டது; பொது வாயமைந்துளது; உணர்ச்சியற்றது; தன்னிடமிருந்து பிறவற்றைத் தோற்றஞ் செய்ய வல்லது; பிரதானமாகிய பிரகிருதியும் அத்தகையதே.

புமானாகிய அறிவனோ இவ்வியல்புகட்கும் அவ்வியல்புகட்கும் மாறாயவன்.

உரை:—முக்குணம், கருமை, வெண்மை, செம்மையாகிய மூன்று நிறங்களாம். இரும்பு கருமைவாய்ந்திருப்பினும், நெருப்பினிடம் வெதும்புதற்கண் கருமை நீங்கி செம்மை நிறம்பெறுகின்றது, பின்னர் வெண்மை நிறம் பெறுகின்றது.

பகுத்தறிதல், கண் முதலான இந்திரியங்கட்கேனும், மனம் முதலிய அந்தக்கரணங்கட்கேனும் கிடையாது; சைதன்னியன் அவற்றின் வாயிலாய் நோக்குவதனால்தான் இந்திரியங்களும் கரணங்களும் அறிகின்றனபோல் தோன்றுகின்றன.

அறிவன், தான் வேறிருந்து இந்திரியங்களையும் கரணங்களையும் தரிசிக்கலாம்; ஆதலின் அவை ஆத்துமாவாக மாட்டா.

ஒவ்வொருவனும் இந்திரியங்களையும் கரணங்களையும் ஏனையோர் போலவே தொழிற் படுத்துவதால் அவை யாவர்க்கும் பொதுவாம்.

கரணங்கட்கும், இந்திரியங்கட்கும் சுய உணர்ச்சி கிடையாது; அறிவன் அவற்றோடு தோய்வதால் தோலில் பரிசமும், செவியில் ஓசையும், கண்ணில் உருவங்களும், நாவில் சுவையும், மூக்கில் மணமும் புலப்படுகின்றன.

கரணங்களும், தன் மாத்திரைகளும் பிறவற்றைப் பிறப்பிக்கும் வரலாற்றை 12-ம் காரிகை கூறும். மூலப் பிரகிருதியும் மேற் கூறப்பட்ட இலக்கணங்களை யுடையது.

அறிவனே மூக்குணங்களுக்கு அதிகாரியாயுள்ளவன். அவைகளுக்குள் கட்டுப்பட்டவனல்லன்; பகுத்தறியவல்லன்; தான் ஒன்றிற்கும் எட்டான்; தான் பரிணமிக்க மாட்டான்.

## 12-வது காரிகை

*ப்ரீத்ய ப்ரீதி விஷாதாத்மகாஃ பிரகாசப் ப்ரவிருத்தி நியமார்த்தாஃ அன்யோ அன்யாபிபவாஸ்ரய ஜனனம் இதுன விருத்தயஸ் வகுணாஃ*

### முக்குண இலக்கணம்

குணங்கள் விருப்பம், வெறுப்பு, மூடம் என்னும் மூன்று இயல்பினவாம். இவை முறையே ஒளியையும், இயக்கத்தையும், மூடுதலையுஞ் செய்வனவாம்.

அன்றியும் இவை ஒன்றையொன்று, குடிப்பன, ஒன்றையொன்று தாங்குவன, ஒன்றையொன்று பிறப்பிப்பன, ஒன்றையொன்று புணர்வனவாம்.

உரை.—இக்குணங்களின் பெயர் பின்வரும் காரிகையிற் கூறுகின்றார்.

ஓர்குணம் விருப்பசொரூபம் அல்லது பிரீதிசொரூபம்.
ஓர்குணம் வெறுப்பு சொரூபம்.
ஓர்குணம் மூட சொரூபம்.

முதற்குணம் அறிவிற்கு விளக்குப் போலுதவும், இரண்டாங்குணம் அறிவை விழுத்துக்கொண்டு ஓடப்பார்க்கும், மூன்றாங்குணம் அறிவை மூடும்.

கல்லின் மாட்டு சைதன்யமா யுறையும் அறிவு மிகவும் வெளிப்படுதற்கு இயலாது மூடப்பட்டிருக்கின்றது. அதன் மாட்டு இயக்கமேனும் ஒளியேனும் மிகுந்து காணப்படவில்லை. இங்கு சத்துவகுணம் அடக்கப்பட்டது.

நீரின் மாட்டு சைதன்னியம் சிறிது இயங்கிக்கொண்டிருக்கின்றது. ஆதலில் நீரை யுண்ணும்பொழுது அறிவு சுருசுருப்பைப் பெறுகின்றது.

அக்கினிமயமான புத்துருக்கு நெய்யுடன் ஒன்றைப் புசிக்கின் அறிவு மிக்க விளக்கத்தைப் பெறுகின்றது. ஆதலின் கல்லின் மாட்டுத் தமோகுண வாதிக்கமும், நீரின் மாட்டு இராஜோகுண வாதிக்கமும், பசுவினது நெய்யின் மாட்டு சத்துவகுண வாதிக்கமும் உள்ளன.

ஒன்றையொன்று தாங்குவன! மணியினிடத்துப் பிரகாசமாகிய சத்துவகுணம் விளங்கினும், அது தமோகுணங்கொண்ட கல்லை இருப்பிடமாகக் கொண்டிருக்கின்றது. தமோகுணத்தைக் கொண்ட பூமி சத்துவகுணங் கொண்ட சூரியனைப் பற்றுக் கோடாய்க்கொண்டு நிற்கின்றது. இவ்வாறே மற்றைய பொருள்களிடத்தும் ஓட்டிக் கண்டுகொள்க.

ஒன்றையொன்று பிறப்பிப்பன: தமோ குணத்தா லிறுகப்பெற்ற கருங் கல்லின் மாட்டு இராஜோகுணமான இயக்கத்தைக் கொண்ட ஓர் இரும்பு பொருந்தினபொழுது சத்துவமயமாய் மறைவிருக்கும் அக்கினிப் பொறி தோன்றுகின்றது. இனி சத்துவ ரூபமான அக்கினியிலிருந்து தமோகுணமான இருண்ட புகை உண்டாகின்றது. மற்றும் உய்த்துணர்ந்து காண்க.

ஒன்றையொன்று புணர்வன; எப்பொருளிடத்தும் முக்குணங்களும் காணப்படும். ஆதலால் அவை ஒன்றுகூடியே யிருக்கின்றன.



சாந்தோக்கிய உபநிடதம் உணர்த்துகின்றபடி எவையும் கருமை, வெண்மை, செம்மையாகிய மூன்று நிறங்களாலேயே யுண்டாயினவாம். எவையெல்லாம் கருமையோ அவை அன்னமென்றும், எவையெல்லாம் வெண்மையோ அவை நீர் என்றும், எவையெல்லாம் செம்மையோ அவை அக்கினியென்றும், எப்பொருள் ஒரு நிறமும் காட்டாமலிருக்கின்றதோ அது முப்பொருட் கலப்பென்றுங் கொள்ளவேண்டுமென வற்புறுத்துகின்றது.

## 13-வது காரிகை

*சத்வம் லகுபிரகாசக மிஷ்டம் உபஷ்டம் பகம் சலம் சரஜஃ-குருவரண கமே வதமஃபிரதிபவச் சார்த்ததோ விருத்திஃ*

### முக்குணங்கள் ஒன்றிற்கொன்று உதவி புரியுந்தன்மை.

சத்துவகுணம் இலகுத்துவத்தையும் பிரகாசத்தையும் கொடுக்கும். இராஜோகுணம் தூண்டுதலையையும் இயக்கத்தையும் கொடுக்கின்றது. தமோகுணம் கனத்தையும் மூடுதலையும் உண்டாக்குகின்றது.

இம் முக்குணங்களும் தீபத்தைப்போல் ஒரே யுத்தேசங்கொண்டு தொழில் புரிகின்றன.

உரை:—தமோகுணம் இருப்பதினால் புருடன் பூமியைவிட்டு விலகி நிற்க இயலாது அதனை யொட்டியே சஞ்சரிக்கின்றான். அன்றியும் சைதன்னியத்தை மறைத்து அசதியையும் தூக்கத்தையும் உண்டாக்குதற்கும் தமோகுணமே காரணமாயிருக்கின்றது.

இராஜோகுணம்:—தமோகுணத்தால் பூமியைவிட்டு நீங்கத் திறமில்லாத மனிதனை அங்கு மிங்கும் உலாவுதற்கும், கன்மேந்திரியங்களை இயக்கிப் பற்பல தொழில்களிடத்தே ஏவுதற்கும் இராஜோகுணமே காரணமாகும். இராஜோகுண மில்லாதபொழுது மனிதன் மரம்போற் கிடந்த விடத்திலேயே கிடக்க நேரிடும்.

சத்துவகுணம்:—இக்குணம் இயங்குவதால்தான் (விளையாடுவதால்தான்) சைதன்யனுக்கு விளங்கவேண்டிய எல்லாம் விளங்கிப் பாவ புண்ணியங்களின் உருவமும் கடைத்தேற வேண்டியதற்குரிய ஞானமும் விசிதமாகின்றன.

தீபம் ஒளியின் பொருட்டு ஏற்பட்டது. அதனிடத்தே தைலமும், திரியும், அக்கினியும் தொழில் புரிகின்றன. இவற்றுள் எண்ணெய் தமோகுணத்தையும், திரி இராஜோகுணத்தையும், தீ சத்துவ குணத்தையும் குறிக்கும். எண்ணெய் தமோகுணத்தால் கீழே இருக்கின்றது; திரி இராஜோகுணத்தால் அவ்வெண்ணெயை இயக்கி மேற்செல்லும்படி செய்கின்றது; அவ்வாறு மேல் நோக்கி வந்த எண்ணெயாகிய சூக்குமத்தை ஒளியாக்குகின்றது.

கௌடபாதர் உரை:-சத்துவம் மிகுங்கால் உடம்பின் மாட்டு இலகுத்துவம் தென்படுகின்றது; இந்திரியங்களும், கரணங்களும் கூர்மை வாய்கின்றன. இராஜோகுணம் மிகுங்கால் உடம்பு நிலைகுலைகின்றது. ஓர் எருது மற்றோர் எருதை நோக்குங்கால் கோப ஆவேசங்கொண்டு நிற்கும் நிலை பாய்தற்பொருட்டல்லவா? அந்நிலை இராஜோகுணம். அன்றியும் இராஜோகுணம் மேலிடுங்கால் அறிவு பற்பல கவடுவிட்டு ஓடும், தமோகுணம் மேலிடின் உடம்பின் உறுப்புக்கள் பழுவாகி இந்திரியங்களும் கரணங்களும் மழுக்கமடையும்.




# 35. இங்கிலந்து புரட்சியா லேற்பட்ட பிறநாட்டு யுத்தங்கள்

(T. S. ராஜகோபாலன், B. A., L. T.)

இங்கிலாந்தை யாண்ட சார்ல்ஸ் II, ஜேம்ஸ் II அரசர்கள் பிரான்ஸ் அரசன் லூயி XIVன் மருமகன்கள் என்பதும், அந்த லூயி அவர் மூலம் இங்கிலாந்தில் கதோலிக மதத்தை பரவச் செய்து, வியாபார சம்பந்தமாக ஹாலந்து ஜனங்களான டச்சுக்காரர்களுடன் நடத்திய போராட்டத்தில் ஆங்கிலேயர் அவர்களுக்கு உதவாம லிருக்க, இரகசிய டோவர் உடன் படிக்கைகள் செய்தான் என்பதும் மூந்தின கட்டுரைகளில் குறிக்கப்பட்ட விஷயங்களாகும். அப்போது ஆங்கிலேயர் விழித்துக்கொண்டு அக்காரியங்களுக்கு உடந்தையாக இருந்த மந்திரிகளைத் துன்பத்திற்குள்ளாக்கி, மேரி இளவரசியை ஹாலந்தரசன் வில்லியமுக்கு மணம் செய்து வைத்தார்கள். பிறகு ஜேம்ஸ் II பஹிரங்கமாகவே பிரஞ்சு பணத்தையும் வீரர்களையும் கொண்டு, கதோலிக மதத்தைப் பரப்பச் செய்த காலத்தில் ஆதரவு செய்த டோரிகளும் வெறுத்து, புரட்சியை ஸ்தாபித்து, மேரியையும் வில்லியமையும் இங்கிலந்தை ஆளச் செய்தது பழைய விபரங்களாகும். ஆகதான் எதிர்பார்த்ததற்கு விரோதமாக, தன் விரோதியான ஹாலந்து அரசனே இங்கிலந்துக்கும் அரசனாகி விட்டதைக் காண மிகச் சிறப்புடன் ஆண்டு வந்த லூயி XIV எவ்விதம் சகிப்பான்?

தவிரவும் ஸ்காட்லந்து ஜனங்கள் ஸ்டுவர்ட் அரசர்கள் மூலம் சிரமம் அனுபவித் திருந்தாலும் அவர்களுக்கு ஸ்வபாவமான ராஜ விசுவாசம் உண்டு. அதிலும் மலைநாட்டார்களுக்குத்தான் அதிதீவிர ராஜ விசுவாசம் என்று சரித்திரங்களில் காணப்படும். அந்த முறையில் அவர்கள் முயன்று, வில்லியமின் ஆக்ஷிக்குள்பட மறுத்து கலகம் செய்து கிளம்பினர். ஆனால் வில்லியமின் கக்ஷியினர் அவர்களை "கில்லி கிரான்கீ" (Killiecrankie) என்ற ஒரு கணவாயில் வளைத்துக்கொண்டு தோற்கடித்து விரட்டினார்கள். பிறது ஒரு தினம் குறிப்பிட்டு அதற்குள், புதிய அரசனை வில்லியமினிடம் பணிவதாக பிரமாணம் செய்பவர்களை மன்னித்துவிடுவதாக ஒரு பிரசுரம் செய்யப்பட்டது. அதைக் கண்ட பிரபுக்கள் பலரும் பணிந்துவிட்டனர்.



அவர்களுள் மலைநாட்டுப் பிரபுக்களில் ஒருவரான க்ளென்கோ பிரபு மாக்டொனல்ட் (Macdonald of Glenco) என்றவர் சற்று கர்நாடகம்; சுய கௌரவத்தில் பற்றுள்ளவர். ஆனாலும் ஊருடன் ஒத்து வில்லியமிடம் பணிந்துவிட எண்ணியவர், தான் சற்று காலதாமதம் செய்து பிரமாணம் செய்வதை ஒரு கௌரவமாகக் கருதியிருந்தார். கடைசியில் பிரமாணமும் செய்துவிடவும் செய்து திரும்புவதற்குள், அவருடைய விரோதிகளில் சிலர், வில்லியமுக்கு அவருடைய முரட்டு குணத்தை விவரித்து, அவரை உடனே கொன்றுவிடுவதற்கு உத்தரவும் பெற்றுவிட்டனர். இப்படிப் பெற்றிருந்த உத்தரவுடன் க்ளென்கோவுக்கு மாக்டொனல்டின் மாளிகைக்கு வந்தனர். அவர்களுடைய அந்தரங்கம் தெரியாத கபடமற்ற மாக்டொனல்ட் அவர்களை அன்புடன் வரவேற்று பெரியதொரு விருந்து நடத்திச் சந்தோஷம் கொண்டாடினார். "உண்டகத்திற்கே இரண்டகம் நினைத்த படு பாவிகள்" க்ளென்கோ பிரபுவின் மேல் பாய்ந்து கொன்று தீர்த்தனர்! இந்த ஆடாத செயல் சரித்திரங்களிலும் "க்ளென்கோ சதிகொலை" (The Massacre of Glenco) என்றும் குறிப்பிடப்பட்டு இருக்கின்றது. இவ்விதமாக ஸ்காட்லந்தில் புரட்சி ஸ்தாபனம் ஆகியது.

அதே சமயத்தில், அம்மான் லூயி ஐர்லந்து கதோலிக்கரைத் தட்டிக் கொடுத்து, பணத்தினாலும், சேனைகளை யனுப்பியும் ஊக்கப் படுத்தியும் கிளப்பிவிட்டு, அவர்கள் ஜேம்ஸை, ஐர்லந்தின் தலைநகர் டப்ளினில் (Dublin) பட்டமும் கட்டிவிட்டு, வடக்கு பாகத்திலிருந்த பிராடெஸ்டெண்ட் மதத்தினரைத் துன்புறுத்தி அவர்களுடைய முக்கிய இடங்களான லண்டன்டெரி (Londonderry), எனிஸ்கிலென் (Enniskillen) என்பவைகளை முற்றுகையிட்டனர். ஆதியில் பிரதிநிதிகளும்; பிறகு வில்லியமும் சென்று அந்தப் பட்டணங்களை விடுவித்ததுடன் பாய்ன் (Boynne) நதிக்கரையில் நடந்த சண்டையில் ஜேம்ஸின் கக்ஷியினரை முறியடிக்கவும் செய்து டப்ளினையும் பிடித்து கொண்டான். பிறகு தெற்கிலிருந்த கதோலிகர்களும் ஆக்ரீம் (Augrim) லிமரிக் (Limerick) என்ற விடங்களில் தோல்வியுற்று, கடைசியாக Limerick ல் சமாதானமும் நடைபெற்றுவிட்டது. ஜேம்ஸ் ஓடவேண்டி நேர்ந்தது. இந்தப் பாவிக்கு உதவி செய்ததன் பலனாக ஐர்லந்து வாசிகளில் பலர் சொத்துரிமைகளையும் அரசியல் உரிமைகளையும் அறவே இழந்து வாடிவதங்கி, உழன்று பரிதவிக்கலாயினர்! பலாத்காரத்தின் பலன் பளிங்குபோல் தெரியும் பல சந்தர்ப்பங்களில் ஒன்றாகும்!

இதேபோன்று பிரான்ஸின் எல்லைப் புறங்களில் ஹாலந்து அரசனுக்குச் சொந்தமான பல பிரதேசங்களில் உபத்திரவம் விளைவித்தான். வில்லிய

மும் விடாமண்டன் கலையார் லூயியை எதிர்க்க சளைக்காமல் சண்டை செய்தான். தோற்றுவிட்ட உடனே ஊக்கப்பட்டுக்கொண்டு சண்டைக்குப் பிரயத்தனத்துடன் இருப்பது வில்லியமின் அருங்குணங்களில் ஒன்று என்று சரித்திரங்கள் கூறுகின்றன. ஆக லூயிக்கு தகுந்த வேலை கொடுத்தான் வில்லியம். இந்த யுத்தங்களுக்குத்தான் முன்பு சொன்னபடி, பணம் வேண்டி, வில்லியம் தன் உரிமைகளை விட்டுக் கொடுத்து ஆங்கிலேயரின் போராட்டத்தின் வெற்றியான புரட்சியை ஸ்தாபிக்கவும், ஸ்திரப் படுத்தவும் உதவி செய்தான் என்பது வாசகர்களுக்கு விளங்கும். அந்தப்படி உதவி செய்ததில்தான் விக்கக்ஷியினருக்கும், டோரிக் கக்ஷியினருக்கும் அபிப்பிராய பேதம் ஏற்பட்டு தன் யுத்தங்களுக்கு பண ஆதரவு செய்யும் மனப்போக்கு உள்ள விக்கக்ஷியினரே பெரும்பான்மையினராய் தேர்ந்தெடுக்கபட 1696-ல் அரசன் செய்ததும், விக்கட்சியினர் மட்டும் உள்ள ஜண்டோ (Junto) மந்திரி சபையை அமைத்ததும் நடந்தது. கடைசியில் Ryswick என்ற இடத்தில் லூயிக்கும் வில்லியமுக்கும் சமாதானமும் நடந்துவிட்டது.

ஆனாலும் மறுபடியும் யுத்தம் நேரிட வந்தபோது வில்லியமும் லூயியும் எதிர் கட்சியில் சேர்ந்தனர். அந்த யுத்தத்திற்கு ஸ்பெயின் வார்ஸ் யுத்தம் (The war of Spanish Succession) என்று சொல்லப்படும். அதன் காரணங்கள் பின்வருவனவாகும்:—

ஐரோப்பாவில் அந்த சமயம் ஸ்பெயின் அரசனாக சார்ல்ஸ் II என்றொருவன் இருந்தான். அவனுக்கு ஏராளமான சாம்ராஜ்யம் ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் இருந்தது. அவனுக்கு நேரான ஆண் சந்ததியில்லை. அவனுக்குப் பிறகு அந்த சாம்ராஜ்யத்தையடைய ஆஸ்ட்ரிய இளவரசன் சார்லஸுக்கும், பிரான்ஸ் லூயி XIV ன் பேரன் பிலிப்புக்கும் சம உரிமை இருந்தது. அப்படி அந்த பூரா சாம்ராஜ்யத்தையும் ஏகதேசத்தில் ஆஸ்ட்ரிய சார்லஸோ, பிரான்ஸ் பிலிப்போ அடைந்து விடுவதானால், ஐரோப்பிய அதிகாரச் சமநிலை பாதிக்கப்படுவதுடன், ஹாலந்து தேசத்தின் பத்திரத்திற்கும் வெகு ஆபத்தானது என்பதை வில்லியம் உணர்ந்தான். ஆகவே மெதுவாக லூயியிடம் அணுகி, ஏதோ ஐரோப்பாவின் பொதுவிஷயத்திற்காக கவலைகொண்டது போல பாவித்து, பின்வரும் முறையில் ஒரு ஒப்பந்தம் பேசினான். "ஏக தேசத்தில் ஒருவரே யடைவது முடியாத காரியம். நிச்சயம் சண்டை ஏற்படும் ஆகவே ஆளுக்குப் பாதியாய் அடைவதானாலும், பூராவும் பெற உரிமையுள்ள தன்மையில் யுத்தம் ஏற்படவே செய்யும். ஆகையினால் பிரான்ஸின் பக்கமாக உள்ள சாம்ராஜ்ய பாகத்தை பிலிப்புக்கும், ஆஸ்ட்ரியாவின் பக்கமாக உள்ள பாகத்தை சார்லஸுக்குமாகக் கொடுத்து, ஏறத்தாழ இந்த உரிமைக்கு சற்று குறைவாக உள்ள பவேரியா சிற்றரசன் ஜோஸப் (Joseph) என்பவனை மீதி பாகங்களுக்கு அரசனாக்கி விடுவது" என்பதாகும். சாம்ராஜ்யத்தை பாகம் பிரிக்க நோக்கமுள்ள ஒப்பந்தம் ஆனதாலும், முதல் தடவை செய்து கொள்ளப்பட்டதாலும் இதற்கு சரித்திரத்தில் முதல் பாகப் பிரிவினை உடன்படிக்கை (The First partition treaty) என்று பெயர். இது 1699-ல் செய்யப்பட்டது.

ஆனால் "நாமொன்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைத்தது" என்பதற்கிணங்க, அந்த ஜோஸப் திடீரென இறந்து போனான். மறுபடியும் வில்லியம் ஆத்திரப்பட்டு, லூயியுடன் ஒரு உடன் படிக்கை செய்து கொண்டு, முந்தினதற்குமேல் வேறு சில பிரதேசங்களையும், பிலிப்புக்குக் கொடுத்து விட்டு, ஆஸ்ட்ரிய சார்லஸே ஸ்பெயின் சிம்மாஸனம் சாம்ராஜ்யம் முதலியவற்றை அடையும்படி லூயி விட்டுக் கொடுத்து விடுவதென்ற ஏற்பாடு செய்தான். அழுத்தக்கார லூயி அமுக்கமாகவே இருந்து விட்டான்! இவ்வளவையும் அறிந்தான் ஸ்பெயினின் மரண அவஸ்தையில் இருந்த சார்ல்ஸ் II! "நோயாளிகளுக்கு சடுதியில் கோபம் வரும்" என்பதொருவாக்கு தவிரவும் "கடைத் தேங்காயை எடுத்து வழிப் பிள்ளையாருக்கு உடைப்பது" போலும் "சத்திரத்தின் சாப்பாட்டிற்கு தாத்தய்யங்கார் உத்தரவு" போலும், மற்ற அரசர்கள் தன் ராஜ்யத்தைப் பங்கு பிரிக்கிறார்கள் என்பதையும், தன்னை ஒரு பொருட்டாகக் கூட நினையாமலும், தன் சம்பந்தமே இல்லாமலும் இருந்ததைக் கண்ட யாருக்குத் தான் கோபம் வராது? ஆகவே ஒரேயடியில் தன் மரண சாசனத்தில் பூரா பிரதேசங்களுக்கும் பிலிப்பையே அரசனாக்கி விட்டு, "பிடித்தான் பிரயாணம் பெரிய நாட்டுக்கு" சார்லஸ் II. அதை யப்படியே ஒப்புக்கொள்ள லூயிக்கு என்ன வருத்தம்?

ஆனால் வில்லியம், லூயி ஒப்புக்கொள்ளக் கூடாதென்று தர்ம நியாயம் பேச ஆரம்பித்து, "அப்படி ஒப்புக் கொண்டது முந்தின பாகப் பிரிவினை உடன்படிக்கைகளுக்கு விரோதமானது" என்றான். பெரிய சாம்ராஜ்ய வெறி பிடித்தவர்களுக்கு இதெல்லாம் "செவிடன் காதில் சங்கு ஊதியதையே" யல்லவா? இது ஒரு காரணம்.

தன் பேரனுக்கு ஹாலந்து பக்கத்திலுள்ள பிரதேசத்தில் சொந்தமானதை யொட்டி—அவைகளை வசப்படுத்தும் முறையில், Ryswick சமாதான ஒப்பந்தத்திற்கு மாறாக, எல்லைப்புற கோட்டைகளில் இருந்த டச்சு வீரர்களை விரட்டி யடித்து, பிரஞ்சு வீரர்களை ஸ்தாபனம் செய்தான்! (சமயம் வந்தபோது பழைய ஆத்திரங்களும் சேரும் அல்லவா?) இது ஒரு காரணம்.

(இதில் ஒரு விஷயம் வாசகர்கள் ஞாபகம் வைக்க வேண்டும். இந்த சமயம் அதாவது 1700 வருஷத்தில் அன்னிய நாட்டு யுத்தங்களை வெறுத்த டோரிகள் தேச நிர்வாகத்திலிருந்தனர். ஆகவே இங்கிலந்து சம்பந்தப்படாத, ஹாலந்து விஷயம் ஆங்கிலேயர் மனதைப் பாதிக்கவேயில்லை. வில்லியமுக்கு வீண் ஆத்திரம் இருந்ததைத் தவிர, யுத்தத்திற்கு வேண்டிய ஆதரவு கிளம்ப சுத்தமாக வழியில்லை! என்ன செய்வான் வில்லியம்? ஆனால் அவன் பங்கில் தெய்வம் இருந்ததனால் மற்றொரு காரணம் தெய்வாதீனமாய் ஏற்பட்டு விட்டது.)

அதுதான் லூயி தன் அதிக நம்பிக்கையில் வைத்த பலம். அதாவது இங்கிலந்தை விட்டு விரட்டப்பட்ட ஸ்டுவர்ட் ஜேம்ஸ் தான் நியாயமான அரசர் என்றும் வில்லியமை விரட்டி விட வேண்டும் என்பதாக விளம்பரம் செய்தான் லூயி XIV! அந்த சந்தர்ப்பத்தில் தான் டோரிகளும் விக்கட்சியும் பொது தேச விஷயத்தில் ஒருமனப்பட்டு சேர்ந்து, "நிர்மாணச் சட்டம்" (The Act of Settlement) செய்து, நிர்ணயமாக ஜேம்ஸை ஒழித்து, இங்கிலாந்து சிம்மாஸனம் ஹானோவர் சிற்றரசர் ஜார்ஜ்க்கு சேர வேண்டும் என்று ஏற்பாடு செய்தது. ஆகவே, பொது மக்களின் ஏகோபித்த அபிப்பிராயத்

துக்கு மாறாக ஜேம்ஸ்க்குத்தான் இங்கிலாந்து சிம்மாஸன உரிமை என்று ஊய் கொண்டாடிய போது ஆங்கில மக்கள் பெருவாரியான பேர்க்கும் வந்தது ஆத்திரம். உடனே போர் தொடங்கி சண்டை செய்தாவது தங்கள் புரட்சித் திட்டத்தைப் பாதுகாத்துக் கொள்ள முன் வந்தனர் என்பதே குறிப்பிடத்தக்க விஷயம். ஆக இது மூன்றாவது காரணம். ஆனால் வெகு முக்கியமான காரணம் ஆகும். (சண்டை ஆரம்பிக்க வேண்டுமே யென்ற போராவலுடன் பார்த்திருந்த வில்லியமும் குதூகலத்துடன் சண்டைக்கு வேண்டிய முஸ்தீபுகளுடன் புறப்பட ஆயத்தப்படும் மத்தியில் குதிரைக் கால் சறுக்கி, விழுந்து, கழுத்தெலும்பு முறிந்து இறந்து போனான்! 'வெண்ணெய் திரண்டு வரும்போது தாழி புடைந்தது' போலும் "நல்ல பெருந்தொகை லாட்டரியில் விழுந்ததெனக் கேட்ட எளியவன் உயிர் விடுவது" போலும் ஆகி விட்டது பரிதாபமே யல்லவா? ஆன் ராணியானாள்! பெண் பிள்ளை என்ற முறையில், முன்பொரு கட்டுரையில் குறிப்பிடப்பட்ட மார்ல்ப்ரோ பிரபு சேனைத் தலைவனாக நியமிக்கப்பட்டான். அவனும் வில்லியமைப் போலவே திறமைசாலி தான்! ஆனால் அதிகாரத்திலிருந்தது டோரிக் கட்சியினர்! பணம் தாராளமாகப் புரளுவதற்கு வழி கிடையாது. மேலும் வெகு நிதானமாகப் போகக் கூடியவர்கள். முதல் இரண்டு வருஷங்களுக்கு (1702-1704) தீவிர முயற்சி ஒன்றும் செய்ய விடவில்லை. அதனால் தான் மார்ல்ப்ரோ பிரபு "கட்சி ஆட்சி" கட்டுரையில் கண்ட பிரகாரம் அந்தர் அடிக்க ஆரம்பித்து குழி மாற்றுகள் செய்ததன் காரணமாகும் என்பது ஞாபகம் வேண்டும்.

சண்டைகள் பலவாயினும், முக்கியமாக, ப்ளென்ஹீம் (Blenheim) 1704, ராமிலீஸ் (Ramilies) 1706, ஊடினார்ட் (Oudenard) 1707. மான்ப்ளா கெட் (Malplaquette) 1708, என்பன மார்ல்ப்ரோவின் பெரும் வெற்றிகளாகும். ஆங்கிலேயருக்கு ஜிப்ரால்டர் என்ற பிரதான இடம் கிடைத்தது இந்த யுத்தத்தில் 1606-ல் என்று சொல்லப்படுகிறது. இந்த வெற்றிகளின் விசேஷம் என்னவெனில், தரைச் சண்டைகளில் நிர்ணயமாக யுத்தம் நடத்தி தோல்வி பிரஞ்சுக்காரருக்கு ஏற்பட்டது மார்ல்ப்ரோவினால் தான் என்று சொல்லப்படுகிறது. அந்த அளவில் மார்ல்ப்ரோவுக்கு உலகம் பரவிய புகழ் ஏற்பட்டது. ஆனாலும் கட்சிக் கோளாறுகளினால் மார்ல்ப்ரோ நீக்கப்பட்டு, 1713-ல் யுட்ரெக்ட் என்ற விடத்தில் சமாதானமும் நிறைவேறி விட்டது. கோரியபடி கிடைக்கக் கூடிய லாபங்களை யடையவில்லை என்பது விக்கக்ஷியினர் அபிப்பிராயப் பட்டதும் முன்பு சொல்லப்பட்டது.

அடுத்து, உள்நாட்டு சம்பவங்கள் சிலவும் ஸ்காட்லந்துடன் ஐக்கியம் ஏற்பட்டதும் எழுதப்படும்.



# "பாரதியாரின் கண்ணன் வழிபாடு"

(திருமலை-இராமாநுஜன்.)

மிகப் பழைய காலந் தொட்டுப் பாரத நாட்டின் குல தெய்வமாகி விட்ட, கண்ணபிரானிடத்து ஈடுபாடு அடையாத கவிகளும் பக்திமான்களுங் கிடையாது. கண்ணன், தனது குணம் செயல் அழகு முதலியவற்றால் கண்டவர்தம் மனதைத் திறை கொள்ளும் தன்மை வாய்ந்தவன்; தமிழகத்து வந்தவரித்த பக்திசீலரான ஆழ்வார்கள் அனைவருமே அவனது சௌலப்ய குணத்தில் ஆழ்ந்தொழிந்தனர்.

கவிகள் யாவரும் அவன் தனது கரிய கோலத் திருவுருவிலே, சிந்தை செலுத்தி நின்றனர்; உண்மையில், வெண்ணை யுண்ட பவளச் செவ்வாயும், மேனியும், அரைமேல் சிவந்த பீத வாடையும், கரிய கண்டமும், கரியவாய்ப் புடை பரந்து அகன்ற கண்ணும் இயற்கையில் மகிழும் கவிஞர்களுக்கு ஒரு பெரு விருந்தாகும். இத் தோற்றப் பொலிவு எத்தகைய கல்நெஞ்சையும் கரையச் செய்யும் இயல்பினது அன்றோ! இவ் வழகு புரிந்திட்ட கவிஞர் ஒருவர், வேறு ஒன்றினையும் விரும்பாதவராய் 'என் கண்ணனைக் கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே' என்கிறார்.

இனிக் குண நலத்தில் ஈடுபட்டார் நிலையும் இத்தன்மையதே. இவனது அடியார்க் கெளிய சௌலப்பிய குணத்தில் ஈடுபட்டு நின்றார் ஆழ்வார்கள் அனைவரும் 'நான் மறைக்கும் எட்டா நலம் திகழ்ந்த இவன் கோவலனாய் வெண்ணையுண்டது' அவரது மனதைவிட்டு அகல இடந்தரவில்லை; இக்குண சேஷ்டிதங்களை எல்லாம் கண்டு வியந்து அவர்கள் 'மாயன்; மாமாயன்; பெருமாமாயன்' என்றெல்லாம் பாராட்டிப் பேசிச் சென்றனர்.

நிற்க, நம் தமிழகத்தில் தலைநின்ற கவிஞர் திலகர் ஸ்ரீமான் சுப்பிரமணிய பாரதியாரும் கண்ணபிரான் மீது பல பாடல்கள் பாடியுள்ளார். இப்பாடல்கள் எல்லாம் ஒப்பு உயர்வற்று விளங்குபவை. எளிய சொற்களின் அரிய பொருள் பல உணர்த்தும் ஆற்றல் வாய்ந்தன.

கண்ணபிரானிடத்து, நம் தேசிய கவி பாரதிப் பெருமகன் கொண்ட அன்பு நிலை, முன்னவரோடு பெரிதும் வேறுபாடு உடையது. குணமும், அழகும் அத்துணைப் பெரும் போக்காக அவருக்குத் தோற்றவில்லை. 'செயல்' ஒன்றிலேயே இவரது மனம் ஆழ்ந்து அடங்கிவிடுகிறது.

இறைவன் அருளிய பத்து அவதாரங்களிலே கிருஷ்ணாவதாரமும் இராமாவதாரமும் மிகவும் சிறியதென்ப. உலகத்து உயிர்களை [illegible]ல்லாம் காக்

கும் கடமை பூண்ட கடவுள், சாதி, குலம், தாழ்வு உயர்வு கருதாது எல்லாரையும் ஒப்ப நோக்கும் தன்மை வாய்ந்தவனால் இருத்தல் வேண்டும் அன்றோ? 'அழுக்கு வேடுவர் குரக்கினம் அரக்கர் என்று இவரோடெல்லாம் இழுக்கில்லாது உடன் பிறப்பு' எனக் கலந்துண்டு மகிழ்ந்தது இராமாவதாரத்திலல்லவா? 'கடவுளைச் சாதிபால் உயர்ந்தோரே யடைகுவர்' என்ற போலிக் கொள்கைக்கு நேர்மாறாக, 'கடவுள் தாழ்வார் உயர்வடையவே தவங்கிடக்கிறான்' என்னும் தத்துவம் ஈண்டே நன்கு தென்படுகின்றது.

இத்திறத்தில் இராமனிலும் கண்ணன் ஒருபடி உயர்ந்தவன். இராமன் தாழ்ந்தோரை ஆட்கொள்ளும் விஷயத்தில், சக்கரவர்த்தி திருமகனாகப் பிறந்து செயல் நன்றாகத் திருத்திப் பணி கொண்டான்; நம் கண்ணனோ குலநலம் பேணாது அறிவு கேட்டிற்கு எல்லை நிலமாய ஆயர் குலத்தில் பிறந்து பெற்றம் மேய்த்துண்ணும் வாழ்வு தலைக் கொண்டு அவரோடு ஒக்க இருந்து ஆட்கொண்டான். அன்றியும் அடியார்க் கடியனாய்த்—தாசாது தாசனாய்—இருந்து பயனற்றவரையும் செயல் நன்றாகத் திருத்திப் பணிகொண்ட திறம் இவனது முழு உரிமை என்றே கூறலாம். பார்த்தனுக்குச் சாரதியாய் நின்றும் அவனை ஆட்கொண்டான் அன்றோ!

இவனது சிறந்த இச்செயல் ஒன்று கொண்டே பாரதியார் கண்ணனைப் பாராட்டுகிறார்; தாழ்ந்துள்ள தேசத்தையும் தேசமக்களையும் உயர்த்துதற்கெனவே வாணாளைச் செலவிட்ட நம் தேசிய கவியின் சிந்தனை, கண்ணனது குணம் அழகு இவைகளைக் காட்டிலும் தாழ்ந்தாரை உயர்த்துதற்கே தவம் கிடக்கும் அவனது செயலில் சென்று ஈடுபட்டது மிகவும் நயனும் பயனும் உடையதாகும்.

இனி, பாரதியார் இயற்றிப் போந்த நூல்களைச் சிறிது நுணுகி ஆராயுங்கால், அவர் பல துறையும் வைணவ சமய ஆழ்வார்களை அடியொற்றிச் சென்றவர் என்பதனைத் தெள்ளிதிற் காணல் ஆகும். இது பற்றி விரிவாகப் "பாரதியாரும் ஆழ்வார்களும்" என்னும் பிறிது ஒருதலைப்பின் கீழ்த் தெளிவுபெறக் காண்போம். எம்பெருமானது பிறபல அவதாரங்கள் அனைத்தையும் ஒழித்துக் கண்ணனிடம் மட்டும் ஈடுபட்டதற்கும், அவனைத் தாய் தந்தை தனயன் என்றிப்படி எல்லாம் பாராட்டிப் பேசியதற்கும் வழிகாட்டிச் சென்றவர் அவ்வாழ்வார்களே யாவர்; 'சேலேய் கண்ணியரும் பெருஞ் செல்வமும் நன்மக்களும் மேலாத் தாய் தந்தையரும் அவரே இனியாவாரே' என்பது ஆழ்வார் பாசுரம்.

நிற்க பாரதியார் கண்ணன் மீது பாடிய சில கண்ணிகள், நடைத்திறன் கருத்தமைதி, சொல் நயம், பொருட் செறிவு பாவமைப்பு முதலிய எல்லாப் படியாலும் ஆழ்வார்களுள் ஒருவராகிய நம்மாழ்வார் பாடிய 'கண்ணன் கழலிணை' (10-ம் பத்து திருவாய்மொழி) என்னும் பதிகத்தைப் பெரும்பான்மை ஒத்துச் செல்லுகின்றன. ஆகையால் இவையிற்றை அவ்வாழ்வார் பாசுரங்களோடு ஒருபுடை ஒப்பு நோக்கி ஆராய்தல் பாரதியாரது மதிநலத்தைக் கண்டறிவதற்கு ஒரு அளவுகோலாகும்.

கண்ணனது திருவுருவம் கரியது; கண்ணன் என்னும் பெயர்க்கே கரியவன் என்பது பொருள். கரு நிறத்திற்குக் கண்டவர் மனதை ஈர்க்கும் தன்



மை உண்டு என்ப. இதனை 'கண்டவர் தம் மனங்கவரும் கணபுரத்து என் கருமணியே'' எனக் கரு நிறம் கூறிக் கண்டவர்தம் மனம் வாங்கும் தன்மையை விளக்கியது கொண்டு அறியலாகும்.

இக்கரிய உரு யாவரையும் இழுத்து அவன் அழகிலே ஈடுபடுத்தும். அவன் அழகு கடல் அனையது. 'அவன் அழகில் இழிந்தார் யாவரும் மனவமைதி காண்பது இலர்; 'ஆவி உள்ளுறும் இணைக் கூற்றம் கொலோ அறியேன் ஆழியங் கண்ணபிரான் திருக் கண்கள்' என்பது கண்ணன் கண்ணழகிலே ஆழ்ந்துபட்ட நம்மாழ்வார் அருளிச் செயல். 'அழகே புரிந்திட்டு அடிநாயேன் அரற்றுகின்றேன்' என்றார் திருவாசகத்தும். கடலழகு கருதி அது காணப் புக்கார் அதில் இழிதல் ஒண்ணாது; இழியரேல் உயிரழிதல் திண்ணம். இறைவன் அழகு கண்டு அதில் இழிந்தோர் நிலையும் இத்தகையதே. திருமாலிருஞ் சோலை அழகனிடத்து பக்திபூண்ட நம்மாழ்வார் 'செஞ்சொற் கவிதாள் உயிர்காத்து ஆட்செய்ம்மின், திருமாலிருஞ்சோலை வஞ்சக் கள்வன் மாமாயன்' என்று உயிர்காத்து ஆட்செய்ய வேண்டுகின்றமை ஈண்டு சிந்தை கொளத்தக்கது.

கடலில் இழிவார் புணை ஒன்று கொள்ளின் அதன் துணையால் தாம் இடர் உறாதவாறே கடலையும் தாண்டிக் கரையேறுதல்போல, இறைவன் அழகில் திளைப்பாரும் துணையாகப் புணை ஒன்று பற்றவேண்டுவதுண்டு. அப்புணையே திருவடி. அது துணையாகப் பற்றினோர் இறைவன் எழில் நலத்தையும் அநுபவித்துத் தாமும் துயர் உறாது ஒழிவர். இது கருதியே 'துயரறு சுடர் அடி தொழுதெழல் மனனே' என்றார் ஆழ்வாரும். 'அடியவர்க்குத் திருவடியே உத்தேஸ்யம் என்கை' என்றார் அதற்கு உரையிட்ட பெரியாரும். 'மலர்மிசை யேகினான் மாண் அடி சேர்ந்தார்' என்பது வள்ளுவர் வாய்மொழி' 'மலர்ச்சேவடியிணையே குறுகினோம்' என்றார் நாவுக்கரசர். 'அழகே புரிந்திட்டு அடிநாயேன் அரற்றுகின்றேன்...புகழே பெரிய பதம் எனக்குத் தந்தருளாதே...குழகா! கோல மறையோனே! கோனே என்னைக் குழைத்த தாயே' (திருவாசகம்—குழைத்த பத்து) என்ற திருவாசகம் முற்கூறிய எல்லாவற்றையும் நன்கு விளக்கும். இத்தகைய வேதப் பொருளின் விழுமிய கருத்துக்களை நன்குணர்ந்த நம் புலவர் கோமகன் பாரதியார்,

"கண்ணன் திருவடி
எண்ணுக மனமே"

என்னும் எளிய சிறிய அடியின் மூலம் வெளியிட்டுள்ளார். அவன் அழகில் ஈடுபட்டுப் பின் அது பெறாது வருந்தும் இயல்பினை யுடையது மனம் ஆகலின், அவ்வாறு வருந்தாது புணையாகிய திருவடியைப் பற்றுக என மனதை நோக்கி அவர் உபதேசிக்கின்றமை மிகவும் இன்புறத்தக்க தொன்று.

எவ்வகையிலும் தாழ்ந்துள்ள தம் தேசமக்களை உயர்த்த விரும்பும் அவர், தாழ்ந்தோரை உயர்த்தும் திறத்தில் சிறுமை பெருமை பாராதே தானே மேல் விழுந்து அடியார்க் கெளியனாய் நின்றும் ஆட்கொள்கின்ற கண்ணபிரானிடத்து ஈடுபாடடைந்து 'அவன் அல்லால் தெய்வம் இல்லை கற்றினம் மேய்த்த எந்தை கழலிணை பணிமின் நீரே' என அறுதியிட்ட ஆழ்வாரைப்போல, 'கண்ணன் அல்லால் தெய்வம் இல்லை' என்னும் கருத்தொடு

பட்டவராய் 'மனமே கண்ணன் திருவடி எண்ணுக' என்று அறிவுறுத்திய அழகு உன்ன உன்னப் பெருமகிழ் வளிப்பதாகும்.

இனி வாளா அடி எனக் கூறாது திருவடி என அடை கொடுத்த அழகும் ஆழ்ந்து சிந்திக்கத்தக்கது. இறைவனது பாதம் அடியவருக்கு உத்தேசியமாயிருந்து நன்மை விளைப்பதனால் எல்லாராலும் விரும்பப்படும் மேன்மை கொண்டு திரு என்னும் அடை அடுத்து வழங்கப்பட்டது. 'திரு என்பது கண்டாரால் விரும்பப்படும் தன்மை நோக்கம்' என்பது பேராசிரியர் உரை. இனி அடிவரை ஈடேற்றும் விதத்தில் அவனினும் அது சிறந்ததாய் உள்ள தன்மை பற்றி அவ்வடை கொடுத்தார் எனினும் ஆம். 'நின்னிற் சிறந்த நின் திருவடி போற்றி' என அவ்வடிக்கு வாழ்த்துக் கூறினாரும் உண்டு.

இவ்வாறு முன்னிரண்டடிகளால் கண்ணபிரானது திருவடியினைப் போற்றுமாறு காரணங் காட்டி நிறுவிய பாரதியார் வரும் அடிகளால், அது செய்தார் எய்தும் பேற்றினை எடுத்துரைக்கின்றார். 'திண்ணம் அழியா வண்ணம் தருமே' என்பது அவ்வடி. அவ்வடியினை குறுகினார் என்று அழியாப் புகழுடம்புடன் நிலமிசை நீடு வாழ்வார் என்பது கருத்து. 'திண்ணம்' என்பது அப்பேறு எய்துதலின் உறுதி குறித்து நின்றது. எனவே, 'ஏ மனமே! கண்ணபிரானது திருவடிகளைத் தவறாது சிந்திப்பையாயின், என்றும் அழியா வண்ணத்தை அஃது எய்துவிக்கும்' என்பது திரண்ட பொருள்.

இனி இச் செய்யுளை,

"கண்ணன் கழலினை
நண்ணும் மனமுடையீர்
எண்ணும் திருநாமம்
திண்ணம் நாரணமே"

என்ற நம்மாழ்வார் பாசுரத்தோடு ஒப்பிட்டுப் பார்த்தால் யாம் முற்கூறியவை வலியுறும்.

கண்ணன் திருவடி நண்ணினார் எய்தும் மறுமைப் பேறு கூறிய கவி இவ்விரண்டாம் கண்ணியினால் இம்மை இன்பத்தினையும் பெறுதல் கூடும் என வற்புறுத்துகின்றார். இம்மை மறுமை இரண்டனுக்கும் ஒருசேர நன்மை பயக்கவல்லது கண்ணன் திருவடி என்பது கருத்து. மக்கள் ஒவ்வொருவரும் விரும்புகின்றவாறு அழியாவண்ணம் நல்குவதோடு மட்டும் அன்றி, இங்கும் எல்லா நலங்களையும் பாலிப்பன் என்றவாறாயிற்று. "தருமே நிதியும் பெருமை புகழும்-கருமா மேனிப் பெருமான் இங்கே" என்பது அது. நம் பெருமானது நலம் தரும் காரணச் சொல் ஒன்றே, குலமும் பெருவிசும்பும் செல்வமும் அளிப்பதாயிருக்குங்கால், அவன் துயரறு சுடரடி, ஈண்டு நிதி பெருமை புகழ் எல்லாவற்றையும் தந்து வாழ்விக்கும் எனப் பாரதியார் கூறுவதில் ஐயம் யாதுளது?

இவ்வாறு இன்பத்தின் பகுதியவாய நிதி பெருமை புகழ் என்றின்னவை எல்லாம் ஈண்டே கிடைக்கப் பெறின், ஈவாரும் கொள்வாரும் இல்லாத



வானகப் பெருமையும் நம் பாரதியார் கண்ணுக்கு பகல் விளக்கென்று காட்சி தரத் தடையில்லை. அவ்வாறே அவர் மனக் கண்முன் அது மதிப்பிழந்து நிற்கிறது. வானால காட்சி இங்கே கிடைப்பின் தீமை இங்கே ஏது? நலமே பொங்கும் அன்றோ! இதனை எல்லாம் உட் கொண்டே, அடுத்த கண்ணியில்

"இங்கே யமரர்—சங்கம் தோன்றும்
மங்கும் தீமை—பொங்கும் நலமே"

என அவர் வருங்காலப் பாரத நாட்டின் நலத்தைப் பேசுகின்றார்.

இதனை அடுத்து கண்ணன் அருளால் இன்னோரன்ன நலம் உண்டு என அறிந்தவர்கள் அதனைப் பெறுதற்குச் செய்ய வேண்டிய உபாயம் இன்னதென வெளியிடுகிறார்.

"நலமே நாடில்
புலவீர் பாடீர்
நிலமா மகளின்
தலைவன் புகழே"

என்பது அவர் கூறும் உபாயமாகும். இதனுள், ஓர் வண்ணம் கலி கெட வேண்டும் என்று எண்ணி வண்ணம் கலி வெண்பா என்ற இவைகளால் மானிடம் பாடித் திரியும் புலவர்களை நோக்கி, 'இனி அது செய்வது ஒழிக; அதனால் பெறும் பொருள் என் ஆவது? 'எத்தனை நாளைக்குப் போதும்' இதனை நீக்கி என்றும் அழியா நலம் எய்த வேண்டின் கண்ணன் புகழைப் பாடுங்கள்' எனத் துணிந்து கூறுவது பெரிதும் சிந்திக்கத்தக்கதாகும். ஒரு பொருளில் அன்புமிக உடையவர் அல்லும் பகலும் அதுவே சிந்தனையாய்ப் பாடித் திரியும் பரிபக்குவ நிலை அடைகுவர். "பாவின் இன்னிசை பாடித் திரிவனே" என்றும் "பாட்டினால் கண்டு வாழும் பாணர்" என்றும் பிறாண்டும் கூறப்படும். இவ்வாறு அவன் மீதுள்ள பக்தி மேலீட்டால் பாடித் திரிதல் மிக்க இன்பம் அளிக்கவல்லது. "இச்சுவை தவிர யான் போய் இந்திர லோகம் ஆளும் அச்சுவை பெறினும் வேண்டேன்" என்பது பாடித் திரிவதில் இன்பம் உண்டென்பதையும், அஃது தேவலோக இன்பத்திலும் சிறந்ததென்பதையும் விளக்குகிறது.

இனி "நிலமா மகளின் தலைவன் புகழே பாடீர்" என்றதில் ஏகாரம் இட்டு தோற்றத்துடன் கூறிய நயம் உய்த்து நோக்குமவர்க்கு தெவிட்டா இன்பம் அளிப்பதாகும். இது கண்ணன் அன்றி வேறு தெய்வங் கருதாத அவரது வைராக்கிய மன நிலையையும், வேறு தெய்வங் காணினும் கண்ணனாகவே பாவித்தொழுகும் பக்தி விஞ்சிய சமரசக் கொள்கையையும் நன்கு தெரிவிக்கும். இத்தகைய வைராக்கிய நிலை அடைதலே பக்தர்களின் உத்தம இலக்கணம். "நிலமாமகளின் தலைவன்" எனக் கண்ணனைக் கூறியது கருத்துடை அடைகொளியாகும். இதனை வட நூலுள் சாபிப்பிராய விசேஷணம் என்பர். இப்புவியின்கண் பிறந்தோர் யாவரேயாயினும் அவர் புவித் தாயின் புதல்வராவர். ஆக பூமியாகிய தாயினை மனைவியாகக் கொண்ட கண்ணன் தந்தையும் ஆவன். தந்தையிற் சிறந்த தெய்வம் இல்லை. ஆகலின் இந்நிலத்து உதித்தோர் எல்லாம் சாதிமத வேற்றுமை பாராட்டாது

அவனைப் போற்றிப் பரசுதல் சாலச் சிறந்தது என்ற கருத்தினை உள்ளடக்கி 'நிலமா மகளின் தலைவன்' என்பது ஏது வாசகமாக நிற்கின்றது.

நம் பாரதியார் தாம் இறங்கிய ஒவ்வொரு துறையிலும் பழயனவாய்த் தீமை பயத்தற் கேதுவாயவற்றை நீக்கிப் புதுமையினைப் புகுத்திச் செப்பம் செய்து வைப்பர். பக்திமார்க்கத்திலும் இவர் காட்டிய வேறுபாடு பெரிதும் கவனிக்கத்தக்கது. இதற்கு முன் எல்லாம், கடவுளர் பெயரால், சண்டையிட்டு வருவது பெரிதும் உண்டு. அரி அதிகன் அரன் அதிகன் என்னும் வாதமும் நாட்டைவிட்டு அகலாது. வைராக்கியம், என்பதனை 'பிறமதத்தினையும் பிற தெய்வங்களையும் இகழ்தல்' என்ற அளவில் பொருள் பண்ணிப் பெரும் கலகம் நிகழ்த்திவந்தனர் என்பதை நாம் நன்கு காணலாகும். வைராக்கிய நிலை வேண்டியது ஒன்று உண்டு. ஆயின் அதனைச் செலுத்தும் விஷயத்தில் மாறுபட்டனராய் நாட்டின் அமைதியைக் குலைத்து வந்தவராவர் இடைக் காலத்தோர். பெரும் பக்திமான்களும் கூட, 'தன் தெய்வம் உயர்ந்தது' என்னும் அளவில் செலுத்திவந்தனர்: அதுவே பிற்காலத்தார்க்கு 'பிற தெய்வம் தாழ்ந்தது' எனும்படியான எண்ணம் எழற்கும் இடம் தந்தது. பக்தி மார்க்கத்தில் பாரதியார் அநுசரித்துக் காட்டிய துறையோ இதினினும் வேறுபட்டது. தனது வீர வுணர்ச்சியும் அஞ்சாமையும் அடக்குதற்கியலா பெருமித முடையதாயின், அதனைக் கொண்டு அமைதி குடிகொண்ட காட்டினை வருத்த விரும்பும் போர் வீரனைப்போல் தனது வைராக்கிய சிந்தையைக் கடவுளின் உயர்வு தாழ்வு விஷயத்தில் கற்பித்துக் கலகம் விளைத்து வந்த முன்னையோர் முறையினை அறவே ஒதுக்கி, வைராக்கிய புத்தியை மட்டும் மேற்கொண்டு அதனை வேறுதுறையில் செலுத்திப் புதுப்பித்த பாரதியாரது தத்துவ உணர்ச்சியின் பெருமை மைக்கடல் வற்ற வான் பரப்பு முழுதும் எழுதினும் அடங்குவ தொன்றன்று.

கண்ணபிரானது அருளுக்கு இலக்காகா வாழ்க்கையை அவர் வெற்று வாழ்க்கை என்று குறிப்பிடுகின்றார். அது சாரம் அற்றதென்பது அவர் கருத்து. கண்ணன் அருள்பெறாத எவர்க்கும், ஒப்பிலா உயர்வு, கல்வி, எய்ப்பில் வீரம், புவி ஆட்சி, தப்பிலாத் தருமம் ஆகிய இவை எல்லாம் எய்தா என்பது அவரது உட்கோள். "கொற்றவா நின் குவலய மீதினில் வெற்று வாழ்க்கை விரும்பி அழிகலேம்" என்று அவர் கூறுவதின் கருத்து அதுவே ஆகும் அன்றோ!

தனது தறுகண்மையையும், வீரத்தனத்தையும் அடக்கிவைத்து, சமயம் நேர்ந்துழிப் போர்முகத்துச் செலுத்தி, உயிரினும் வெற்றியைப் பெரிதென மதித்து, இறக்க விரும்பி வீர மொழி விளம்பும் மனத்துறை வல்ல ஒருவனை நம்ப, அவர்களுக்கு எல்லாம் கலாம் விளைத்தற்கு ஏதுவாயிருந்த வைராக்கிய நிலையை, பக்தி மார்க்கத்தில் வெற்றி யடைவார்க்குச் சாதனமாம் படி, 'அவனது அருள் பெறுவிடில் உயிர் துறந்திறப்பது' என்ற அளவில் புகுத்தியது பெரிதும் நயமும் பலமும் உடைய தன்றோ!

"நின்றன் மாமர பில்வந்து நீசராய்ப்
பொன்றல் வேண்டிலம் பொற்கழலா ணைகாண்
இன்று இங்கு எம்மை அதம்புரி இல்லையேல்
வென்றியும் புகழும் தால் வேண்டுமால்."



"மற்று நீ இந்த வாழ்வு மறுப்பையேல்
சற்று நேரத்துள் எம்முயிர் சாய்த்தருள்."

என்பது அவரது பொன்போல் போற்றத்தக்க மொழிகளாகும். வைராக்கிய நிலையைத் 'தன் உயிரையும் அவனது அருளைப் பெறும் விஷயத்தில் துறப்பது' என்ற அளவில் கையாண்டு 'என் உயிரை மாய்ப்பாயாக' என வேண்டிய பாடல் மருந்துக்கேனும் இடைக்காலப் பிரபந்தங்களில் அகப்படுமோ என நடுவு நிலையோடு ஒவ்வொருவரும் சிறிது உன்னிப் பார்ப்பாராக.

இனி, இத்தகைய போலி வைராக்கியத்தை ஒரு கருவியாகக் கொண்டு, 'இத்தகைய பேறுகளை அளிக்கவல்லான் பிறிதொருவனும் உலன்' எனக் கூறி, மத வேறுபாட்டால் மனம் மாறுபடுவார்க்கு உண்மை காட்டி, தனது வைராக்கிய நிலையுழ் தாழாதபடி தத்துவம் தெளிவிக்கும் அழகும் பேணத்தக்கது.

"தவறுது ணர்வீர்
புவியீர் மாலும்
சிவனும் வானோர்
எவரும் ஒன்றே."

என்பதனால் 'உங்கள் கோட்பாடு பற்றி வேறு நின்றானும் எம் கண்ணனே' என்று விளக்குகிறார். "வம்மின் புலவீர், நும்நும் இன் கவி கொண்டு நும் இட்டா தெய்வம் எத்தினால் செம்மின் சுடர்முடி என் திருமாலுக்குச் சேருமே" என்ற ஆழ்வாரோடு ஒப்புக் கூறிக், கண்ணபிரானது மேன்மைகளை எல்லாம் எளிய நடையுடைய கண்ணியிலே அமைத்துச் சென்ற நம் பாரதியாரது கவித்துவம் கற்றாரோடொப்ப மற்றோர்க்கும் கழிபேரின்பம் விளைப்பனவாகும்.

## புதிய ஜீவிய சந்தாதார்.

இலங்கை வாவுனிய போஸ்டு காபெட்டிகொல்லவாவைச் சேர்ந்த உயர் திருவாளர் வி. தம்பி பிள்ளை அவர்கள் நமது "ஆனந்த போதினி" மாத சஞ்சிகையின் ஜீவிய சந்தாதாரராகச் சேர்ந்துள்ள நற்செய்தியை மகிழ்ச்சிப் பெருக்குடன் தெரிவித்துக்கொள்ளுகின்றோம். இவர்கட்கு நன்றியறிதல் உரிமை. உயர் திரு. பிள்ளை அவர்கள் எல்லாச் செல்வமும் இனிது எய்திப் பல்லாண்டு வாழ்வார்களாக. இங்ஙனமே ஏனைய தமிழன்பர்களும் ஜீவிய சந்தாதாராகச் சேர்ந்து "போதினி"யை ஆதரிக்க வேண்டும் என்று விரும்புகின்றோம்.

பத்திராதிபர்.

# சாருதத்த சரிதம்

(திரு-வி. சங்கரய்யர்.)

(368-ம் பக்கத் தொடர்ச்சி.)

6. சூதாடி ஸம்வாஹகன்:—ஸம்வாஹகன் சாருதத்தனின் உத்தம சேவகர்களில் ஒருவன். சாருதத்தனின் வறுமையை யறிந்து அவருக்கு வருத்த முண்டாக்காம லிருக்கவே அவரைவிட்டு நீங்கினான். எப்படியோ இவனுக்குச் சூதாடியான மாதுரன் சிநேகிதனானான். பாலகமஹா ராஜாவின் காலத்தில் சூதாடிகளும் கட்குடிப்பவருமே பெருகி வந்தனர். மாதுரன் என்பவனே சூதாடிகளுக்காகக் கடைவைத்து அதிகப் பணம் சம்பாதித்து வந்தான். முதலில் காசில்லாமல் விளையாட்டை மாதுரன் ஸம்வாஹகனுக்குக் கற்றுக் கொடுத்தான். நளன், தர்மபுத்திரர் முதலிய மஹாராஜாக்கள் சூதாடி அதனால் ஏற்பட்ட கஷ்டங்களை அனுபவித்தனர். அதெல்லாம் நன்றாய்க் கற்றுணர்ந்தவனான நமது மாதுரன் மனமும் இவ்வாறு மாறி சூதாடத் துணிந்து விட்டது ஆச்சரியமே.

ஒருநாள் மாதுரனிடம் பத்துநாட்கள் வாய்தாவுக்கு நூறுரூபாய் கடன் வாங்கி சூதாடித் தோற்றுப்போனான் ஸம்வாஹகன்; கடனைத் தீர்க்க முடியாதவனாகி அவ்வூரிலேயே ஒளிந்து கொண்டிருந்தான். ஒருநாள் தற்செயலாக மாதுரன் இவனைப் பார்த்துவிட்டான். பின் தொடர்ந்து பிடிக்க ஓடும் ஸம்வாஹகன் வஸந்த சேனையி னில்லத்தி னுட்புகுந்து ஒளிந்தான். மாதுரனும் உட்சென்றான். நமது மாதுரத்னம் ஸம்வாஹகன் கதையைக்கேட்டு மனம் பூரித்தவளாக அவன் கடனைத் தீர்த்து மாதுரனை அனுப்பிவிட்டு ஸம்வாஹகனை நோக்கி, 'தாங்கள் முன்போல் ஆரிய சாருதத்தனிடம் வேலை பார்த்து வரும்படிக் கேட்டுக்கொள்ளுகிறேன். தங்களுக்குச் சம்பளம் நானே தருகிறேன்' என்று கூறினாள். அதற்கு அவன், "நான் இனி உலக வாழ்க்கையைவிட்டு பௌத்த சன்யாசியாகத் தீர்மானித்து விட்டபடியால் தயவு செய்து என்னைக் கட்டாயப்படுத்தாதிருக்க வேண்டிக்கொள்ளுகிறேன். மன்னிக்கவும். தாங்கள் இன்று எனக்குச் செய்த பேருதவியை நான் என்றுமே மறக்க முடியாது" எனப் பதிலளித்தான். ஆகையால் அம்மாதும் அவரைக் கட்டாயப் படுத்தவில்லை. இவ் விஷயம் நடந்த ஒரு வாரத்திற்குப் பிறகுதான் இதற்குமுன் கூறப்பட்ட சம்பவங்களெல்லாம் நடந்தன.

7. ரோஹஸேனனின் மண்வண்டி:—மறுநாட் காலை சாருதத்தன் தான் புஷ்பகரோத்யானத்துக்குப் போவதாக வேலைக்காரர்களிடம் தெரிவித்து விட்டுத் தன் வண்டியில் ஏறிப்போனார். வஸந்தா எழுந்திருந்து வெளியே வந்த பொழுது ரோஹஸேனன் தன் மண்வண்டியை வைத்துக்கொண்டு தனக்குத் தங்க வண்டி வேண்டுமென்று அழுது கொண்டிருந்தான். அதைக் கண்ட வஸந்தா அக்குழந்தையை எடுத்துக் கொஞ்சி விளையாடி விட்டுத் தன் நகைகளை அந்த மண்வண்டிமீது வைத்துவிட்டு, 'குழந்தாய் இந்த நகைகள் இனி உன்னுடையதே. மைத்ரேயரிடம் கொடுத்து உனக்கு ஒரு தங்க



வண்டி வாங்கிக் கொடுக்கும்படி யுரை' என்றாள். மைத்ரேயனிடமும் இதைக் கூறினாள். மைத்ரேயனிடமிருந்து சாருதத்தன் உத்யானவனத்துக்குச் சென்ற விவரமறிந்து தானும் அங்கே போக எண்ணி வண்டியைக் கொண்டு வரும்படி ஆக்ஞாபித்தாள். வண்டியும் வந்து நின்றது. அதே சமயத்தில் தற்செயலாக ஸம்ஸ்தானகனுடைய வண்டி அங்கே வந்து நிற்க அது தான் சாருதத்தன் வீட்டு வண்டியென நினைத்து அதிலேறிக்கொண்டு கதவை மூடிக்கொண்டாள். வண்டியும் ஸம்ஸ்தானகன் வீட்டை யடைந்தது. ஸம்ஸ்தானகன் வண்டியிலேற உத்தேசித்து வண்டியைத் திறக்க அதனுள்ளிருந்த வசந்தசேனையைப் பார்க்க ஆனந்தபூரிதனானான். உடனே வண்டியை உத்யானவனத்துக்கு விடச் சொன்னான். வண்டியும் உத்யானவனத்தை யடைந்தது.

8. புஷ்பகரோத்யானம்:—புஷ்பகரோத்யானம் மிகப் பெரியது. அது பட்டணத்தின் வெளியிலிருக்கிறது. அதன் ஒருபாகம் ஸம்ஸ்தானகனுக்கென்றே விடப்பட்டிருப்பதால் அவ்விடத்துக்கு வண்டியும் போய்ச் சேர்ந்தது. அவ்விடத்தில் நயத்தாலும் பயத்தாலும் வஸந்தசேனையைத் தன் வைப்பாட்டியாக்க வெகு பாடுபட்டான். இதைப்பார்த்த வண்டியோட்டி அதிக வருத்தப்பட்டான். என்ன செய்வான் பாவம்! அவள் ஒன்றுக்கும் இணங்காததால் அவளுடைய கழுத்தைப் பிடித்து நெரிக்க அவளும் மூர்ச்சையாகிக் கீழே விழுந்து விட்டாள். ஆகையால் அவள் இறந்துவிட்டாள் என்றெண்ணி அவள்மீது இலைகளைப் போட்டுத் தன் வீட்டுக்குச் சென்றான். வண்டியோட்டி இவ் விவரத்தை வெளியிடாமலிருக்க அவனைத் தன் வீட்டின் மேல்மாடியில் போட்டுப் பூட்டிவிட்டான்.

இச் சம்பவம் நடந்ததற்கு முந்தினநாள் ஒரு குறி சொல்பவன் பாலக ராஜனிடம் சென்று இன்னும் மூன்றுநாட்களுக்குள் அவன் அரசாங்கத்தை இழக்க நேரிடுமென்றும், அவ்வூரிலிருக்கும் ஆரியகன் என்ற இடையன் அரசனாவான் என்றும் கூறிவிட்டான். அதனால் ஆரியகனைப் பிடித்து வரும்படி ராஜாக்ஞை பிறந்தது. இதை யறிந்த ஆரியகன் தப்பிக்க எண்ணி சாருதத்தன் வாசற்படியை யடைந்தான். அவ்விடத்தில் வசந்த சேனைக்காகக் காத்திருந்த வண்டியில் ஏறி ஒளிந்து கொண்டான். வஸந்த சேனைதான் வண்டியிலிருப்பதாக எண்ணி வண்டியோட்டியும் வண்டியை உத்யானவனத்தை நோக்கி யோட்டினான். வண்டியும் உத்யானவனத்தை யடைந்தது.

சாருதத்தன் வண்டிக்குள் வஸந்த சேனைக்குப் பதிலாக ஆரியகனிருப்பதைப் பார்த்து திகிலுற்றான்; ஆச்சரியமு முற்றான். ஆரியகன் சாருதத்தனிடம் விடை பெற்றுக்கொண்டு தனது குக்கிராமத்தை யடைந்தான். இதை யறிந்த பலர் பாலகனை நீக்கவும் ஆரியகனை அரசனாக்கவும் எண்ணி ஆரியகனிருக்கும் குக்கிராமத்தை அடைந்தனர்.

சாருதத்தன் தனதில்லத்தை யடைந்ததும் வஸந்த சேனையைக் காணவில்லை; வஸந்த சேனையின் நகைகளைத் திரும்ப அவளிடம் ஒப்பிக்கும்படி மைத்ரேயனை அனுப்பினான்.

நிற்க, வசந்த சேனையை மூடிக் கிடத்தி யிருந்த இடத்திற்குச் சமீபத்திலுள்ள தடாகத்தில், முன் வசந்தசேனையால் காப்பாற்றப்பட்ட சூதாடி சம்-

வாஹகன் என்ற பௌத்த சந்யாசி ஸ்னானம் செய்துவிட்டுத் தன் ஈரவஸ்திரத்தை அந்த இலைக்குவியலின்மீது காயப்போட்டான். அந்த வஸ்திரத்திலிருந்து விழுந்த நீர்த்துளிகள் வஸந்த சேனைக்குக் கொஞ்சம் ஆச்வாசமாயிருந்தது. அந்த இலைக்குவியலில் ஒரு ஸ்திரீ யிருப்பதைக் கண்டார் அந்த சந்யாசி. உடனே அவளை எழுப்பித் தண்ணீர் கொடுக்க மூர்ச்சை தெளிந்தெழுந்தாள். விவரம் அவள் சொல்லத் தெரிந்தவராக தன் ஆச்ரமத்துக்கு அழைத்துச் சென்றார். ஆங்கு அம்மாதுக்கு வேண்டிய ஆகாராதிகளைக் கொடுத்து நித்திரை செய்யும்படிக் கூறினார்.

9. சம்ஸ்தானகன் சதி விசாரணை:—சம்ஸ்தானகன் தன் வீட்டையடைந்தவுடன், வசந்த சேனையை உத்யானவனத்தில் வைத்து சாருதத்தன் கொன்றுவிட்டு அவள் நகைகளை அபகரித்து விட்டதாக ஒரு மனு எழுதி அத்தேசத்துப் பிரதான நீதிபதியிடம் கொடுத்துவிட்டு அதை உடனே விசாரித்துத் தீர்ப்புச் செய்யும்படியும் கேட்டுக்கொண்டான். அத் தேசத்து நீதிபதியும்கூட சம்ஸ்தானகன் சொற்படி நடந்தே தீரவேண்டும். இல்லையேல் ராஜத்துரோஹ குற்றம் ஆரோபித்துத் தண்டிக்கப்படும். ஆகையால் நீதிபதி மனுவை அங்கீகரித்தார்.

நீதிபதி:—தாங்கள்தானா வஸந்த சேனையம்மாளின் கொலை சம்பந்தமாக மனுச் செய்தவர்?

ஸம்ஸ்தானகன்:—ஆம், நான்தான் பாலக மஹாராஜனின் மைத்துனன். அவருக்குப் பிறகு நானே இத்தேசத்துக்கும் அரசனாகப் போகிறேன்.

நீதிபதி:—அதெல்லா மிருக்கட்டும். கேட்டதற்குப் பதில் கூறும்.

ஸம்:—என் சொந்தமான உத்யானவனத்தில் சாருதத்தனால் கொல்லப்பட்டு வசந்த சேனையம்மாள் கிடக்கிறாள். அவள் நகைகளைச் சாருதத்தனே அபஹரித்துக்கொண்டு சென்றுவிட்டான்.

நீதி:—சாருதத்தன் மஹாதர்மிஷ்டனன்றோ! அவர் தன் சொத்துக்களைப் பூராவும் அறநெறியிலேயே செலவு செய்த அம்மஹானா இவ் விழிவான ஸ்திரீஹத்தி, ஸ்வர்ண்ஸ்தேயம் ஆகிய இம் மஹாபாதகங்களைச் செய்பவர். நம்பவே முடியாது.

(அச்சமயத்தில் அங்கே வஸந்தசேனையின் தாயாரை அழைத்து வரும்படி சம்ஸ்தானகன் நீதிபதியை வேண்டினார். நீதிபதியும் உடனே ஆளனுப்பினார்.)

நீதி:—அம்மா! தங்கள் குமாரத்தியான வஸந்தசேனை யெங்கே?

வ-தாயார்:—அவள் ஆரிய சாருதத்தனது இல்லத்தி லிருப்பாள். அவள் அவ்விடத்துக்கு நேற்றே சென்றிருக்கிறாள்.

(ஆரிய சாருதத்தனை யழைத்துவர உத்தரவு கொடுக்க அவரும் அவ்விடத்தை யடைந்தார். அவர் வரும் வழியில் பல கெட்டசகுனங்கள் காணப்பட்டன. அவர் வந்ததும் நீதிபதி அதிக வணக்கத்துடனும் மரியாதையோடும் எழுந்து உபசரித்து ஒரு ஆசனத்தில் உட்காரும்படிக் கூறினார். இதைப் பார்த்த சம்ஸ்தானகனுக்கு அதிகக் கோபம் உண்டாயிற்று.)



நீதிபதி:—ஆரிய! தாங்கள் வஸந்த சேனையை நேசிக்கிறீர்களா? (சாருதத்தன் பதில் கூறாமல் மௌனம் சாதித்தான்.)

ஸம்:—அடே! மடைய சாருதத்தா! வசந்தசேனையை நேசிக்க உனக்கு வெட்கமில்லையா! நேசிப்பதாக ஏமாற்றி அவளை இன்று காலை உத்யானவனத்தில் நீ கொன்று அவள் நகைகளை அபகரிக்கவில்லையா! அடா கொலைபாதகா! ஏன் மௌனமாக இருக்கிறாய்? உண்மையைக் கூறு. இது நியாயஸ்தலம். உன்னை விடமாட்டேன்.

சாரு:—அம்மாதிரியான அகிருத்யங்கள் செய்பவன் நானல்லவே! மஹாப்ரபுவான நீதிபதியே!

நீதி:—வசந்த சேனை நேற்றிரவு தமதில்லத்துக்கு வந்தாள். இப்பொழுது அவளெங்கே?

(அதே சமயம் மைத்ரேயர் வசந்தசேனையின் இல்லத்தில் அவளில்லாமையால் அவளுடைய நகைகளோடு வீடுவந்து சேர, சாருதத்தன் நீதிஸ்தலம் போயிருப்பதாகக் கேள்விப்பட்டு அங்கே வந்து சேர்ந்தார். அவரை நகைகளோடு பார்த்த சம்ஸ்தானதன் அந்த மைத்ரேயரை அவ்விடத்துக்கு அழைப்பித்தான்.

ஸம்ஸ்தானகன்:—ஏ! மைத்ரேயா! இந்த நகைகள் யாருடையது? உண்மையைக் கூறு! இவை யார் உனக்கு எப்பொழுது கொடுத்தார்கள்?

மைத்ரேயன்:—:—இது வஸந்த சேனையி னுடையது. இதை இன்று காலை என்னிடம் ஆரியசாருதத்தர் கொடுத்தார்.

ஸம்ஸ்தானகன்:—நீதிபதியே! இனி வேறு சாட்சிகள் அவசியமில்லை. நீதியைக் கூறும்.

நீதிபதி:—இது கொலைக்குற்றம். எதிரி பிராம்மணனாகையால் அரசனே தீர்ப்புக்கூற அதிகார முடையவன்.

ஸம்ஸ்தானகன்:—நானே சென்று அரசனுத்தரவைப் பெற்று வருகிறேன்.

10. கொலைக்களம்:—சாருதத்தனுடைய உடல் பூராவும் பன்றியின் ரத்தம்பூசி, கழுத்தில் அரளி மாலையிட்டு, கையில் வாளேந்திய இரு கிங்கரர்கள் இருபுறமும் இருக்க பேரிகை வாத்தியம் முன் செல்ல, ராஜாக்ஞையைக் கட்டியமாகக் கூறப்பட்டு அந்த நகரத்தின் பல பாகங்களுக்கும் சாருதத்தன் அழைத்துச் செல்லப்பட்டான். சந்திரனுக்குக் களங்க மிருந்தாலும் அதற்கென்ன குறைவு என்றபடி, யாவரும் ராஜாக்ஞையைத் தூஷித்தும், கடவுளுக்குக் கண்ணில்லையா என்றும் ஆரிய சாருதத்தனைக் கடவுள் காப்பாற்றுவார் என்றும் கூறினார்கள்.

இக்கூட்டம் ஸம்ஸ்தானகன் அரண்மனை வாசலில் சென்றதும் வண்டியோட்டி மாடியின் மீதிருந்து உடனே எப்படியோ தன் பிராணன் போய் விடுமோ என்றுகூட எண்ணாமல் குதித்துக் கூட்டத்திற்கு வந்தான். உண்மையை வெளியிட்டான். ஆனாலும் சம்ஸ்தானகன் ஆக்ஞைப்படி அவன்

மறுபடி சிறைப்படுத்தப்பட்டான். மாலை ஐந்து மணிக்கு கூட்டம் கொலைக் களத்தை அடைந்தது. இன்னும் சில நிமிஷங்களில் சாருதத்தன் உயிரிழக்க வேண்டியதே.

11. ஆரிய மஹாராஜா:—அதே தினம் மாலை மூன்று மணிக்கு சார்விலகனால் சேனை நடத்தப்பட்டு அரண்மனையை யடைந்து பாலகனைக் கொன்றுவிட்டு ஆரியகன் அரசனானான். ஆரியகன் சாருதத்தனைக் கொலை செய்ய வேண்டாமென்று உத்தரவு அனுப்பினான். அன்று மாலை ஐந்து மணி நேரத்தில் வஸந்த சேனையை அவளில்லத்திற்குக் கொண்டு விடும் பொருட்டு பௌத்த சந்யாசியோடுகூட கொலைக்களத்தின் வழியாக வஸந்த சேனை வந்து கொண்டிருந்தாள். விஷயமறிந்த வஸந்த சேனை தான் உயிருட னிருப்பதையும் ரூபித்தாள். ஆரியகன் உத்தரவைக் கொண்டுவந்த மோஷ்டக சார்விலகப் பிராமணன் ஸம்ஸ்தானகனைப் பிடித்து விலங்கிடும் படிக்கும் ஆரிய சாருதத்தனை விடுவிக்கும்படிக்கும் ராஜாக்ஞை இருப்பதாகக் கூறி அவ்வாறே செய்தான். ஸம்ஸ்தானகன் கால் கைகளில் இரும்புச்சங்கிலி பூட்டப்பட்டு அரசனிடம் கொண்டுபோய் நிறுத்தப்பட்டான்.

12. இராஜாங்க சபை:—ஆரிய மஹாராஜா சிம்மாஸனத்தில் வீற்றிருக்க, சாருதத்தன் பிரதான மந்திரியாகவும், சார்விலகன் பிரதான சேனாதிபதியாகவும் சமீபத்தில் அமர்ந்திருக்க, ஸம்ஸ்தானகன் அங்கே பூட்டிய கையுடன் கொண்டு வரப்பட்டான். அவனை மன்னித்து உயிர்ப்பிச்சை கொடுத்து வேறு நாட்டுக்கேகும்படி ஆரிய சாருதத்தன் கூறியபடி அரசாங்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அவ்வாறே சம்ஸ்தானகனும் நாடு கடத்தப்பட்டான். உஜ்ஜயினி ஜனங்களின் ஆனந்தத்துக்கு அளவே இல்லை.

மாளவராஜ்யம் ஆரியகனால் நீதி தவறாமல் சாருதத்தனுடைய மந்திரித்வத்தில் பரிபாலனம் செய்யப்பட்டு வந்தது. தூதாவின் சம்மதம் பெற்று வஸந்த சேனை சாருதத்தனிடம் சென்று தன்னை ஆட்கொண்டு காப்பாற்றும்படி வேண்டிக்கொண்டாள். நல்ல சுபமுகூர்த்தத்தில் சாருதத்தனுக்கும் வஸந்த சேனைக்கும் விவாஹம் பௌத்த சன்யாஸியால் அரண்மனையில் வெகு விமரிசையாக நடத்தப்பட்டது. எல்லோரும் ஒரு குறைவுமின்றி க்ஷேமமாக வஸித்து வந்தார்கள். ஜனங்கள் அதை ராமராஜ்யம் என்றே கூறினார்கள்.

ஆகையால் சகோதர சகோதரிகளே! எப்பொழுதும், எவ்விடத்திலும், எச் சமயத்தாருக்கும், சத்தியமும் தர்மமுமே முடிவில் ஜயிக்குமென்றும் அசத்தியமும் அதர்மமும் முடிவில் அபஜய மடையுமென்றும் இக்கதை நிரூபிக்கிறது. ஆகையால் 'அறஞ்செய விரும்பு;' 'ஸத்யம் வத'; 'தர்மம் சர'; முதலிய பெரியோர் அமுத வாக்கின்படி நடந்து கடவுள் கடவுள் அருள் பெறுவீர்களாக!

---

# மஹாத்மா மணிமொழி

(S. கணேசன்.)

காங்கிரஸ் காரனுக்கு எது சுதேசி என்றால், கையால் நூற்று கையால் நெய்யப்பட்ட துணிதான் சுதேசி. ஆனால் காங்கிரஸ் உபதேசம், தலையில் ஏறாதவர்களும், முடியாதவர்களும் உள்நாட்டு மில் துணியை உபயோகிக்கலாம்.

* * * *

நம்முடைய தேசீய உரிமையை இழப்போமானால் உலகாதாயத்திற்கு நாம் அருகரல்ல என்பதையும் அறிய வேண்டும்.

* * * *

எளிய சகோதரர்களை ஒடுக்கும் பாவத்தில் மூழ்கி யிருக்கு மட்டும் நாம் விலங்குகளை விட நல்லவர்களல்ல.

* * * *

தீண்டாமை சமயத்தின் விளைவன்று; சாத்தான் சூழ்ச்சியால் விளைந்தது.

* * * *

ஆங்கிலக் கல்வி நமது ஆண்மையை அழித்து விட்டது. நமது அறி ஆற்றைத் தூர்த்து விட்டது.

* * * *

தாய்மொழிகள் நசுக்கப்படுவது காண என்னால் பொறுக்க முடியவில்லை. தாய் தந்தையர்கள் தங்கள் குழந்தைகட்கும், நாயகன்மார்கள் தங்கள் நாயகிமார்கட்கும் கடிதங்கள் தாய் மொழியில் எழுதாது ஆங்கிலத்தில் எழுத எண்ணுவது குறித்து என் மனம் பொறுக்க வில்லை.

* * * *

அவரவர் அவரவர்க்குரிய தாய்மொழி வாயிலாகவே கல்வி பெறல் வேண்டும். தமிழ் மக்கள் தங்கள் தாய் மொழியாகிய தமிழ் பயில வேண்டுவது அவர்களது இன்றியமையாக் கடமை. தமிழர்கள் தங்கள் மொழியை ஆங்கிலம் முதலிய மொழிகளை விட முதன்மையாகக் கருத வேண்டும்.

* * * *

மானமுள்ள இந்தியாவில் ஒவ்வோராண்மகனும் தன்னுடைய சகோதரி போல் மற்றப் பெண்மணிகளைக் கருதிக் கொண்டால் பெண்மகள் நல்லொழுக்கங் காக்கப்படும்.

* * * *

இந்திய மக்களை ஒவ்வொருவரும் தமது சகோதரர் அல்லது சகோதரி என்று கொள்ளும் பேராண்மையே சுயராஜ்யம்.

உழைப்பின்றி உண்கிறவர்களைத் திருடர்களென்று தான் அழைக்க வேண்டும்.

*　　　*　　　*　　　*

கல்வி யென்பதற்கு நான் கொண்ட பொருள் ஒழுக்கத்தைப் படிப்படியாக வளர்ப்ப தென்பது. எழுத்திலக்கணம் பயிறல் கல்வியாகாது.

*　　　*　　　*　　　*

என் வாழ்விற்கும் என்னைப் பற்றி யுள்ளார்க்கும் வேண்டுவது பெற ஆண்டவன் எனக்குக் கை கால் தந்தான் என்னும் உளங்கொள்வேனாயின் என் வாழ்வையும், மற்றவர் வாழ்வையும் எளிமையாக்கிக் கொள்வேன். இதனால் நான் பிறரை வருத்தாது எனது குடும்பத்தைக் காப்பாற்றுபவனாகிறேன். ஒவ்வொருவரும் இவ்வெளிய முறையில் வாழ்ந்து வருவரேல் அவர் நாடு பொன்னாடாகும்.

*　　　*　　　*　　　*

ஆன்ற ஒழுக்கத்தை மேல் நாட்டிலிருந்து பெற ஒன்றுமில்லை என்பது எனது உறுதியான நம்பிக்கை. நோய்க்கு இரையாநம் அந்நாட்டின் தீமைகள் பரவா திருக்க நாம் எச்சரிக்கையா யிருத்தல் வேண்டும்.

*　　　*　　　*　　　*

மனதைக் குப்பைத் தொட்டியாக்கிக் கொள்கிறவர்கள் உண்ணா விரத நோன்பால் அதைத் தூய்மை செய்து கொள்ள முடியாது. உணவு மாற்றத்தினாலும் பயன் விளையாது. நெஞ்சில் வேரூன்றிக் கிடக்கும் காம வேட்கையைத் தன்னை ஆராய்வதனாலும், கடவுளிடம் தன்னை ஒப்புவிப்பதாலும், முடிவாக அவனது அருளாலுமே தணித்து அகழ்ந்தெறிய முடியுமேயன்றி வேறு வழியால் முடியாது.

*　　　*　　　*　　　*

சுவையடக்க இயலாத ஒருவன் காமக் கிளர்ச்சியை அடக்க இயலாதவன் என்பது எனக்குத் தெரியும்.

*　　　*　　　*　　　*

பிரமசரியத்தை முற்றும் நடையில் கொணர்ந்த மகனோ அல்லது மகளோ எல்லா அவாக்களினின்றும் முழுவதும் விடுதலை அடைந்தவரென்க. அத்தகையவர் கடவுளுக்கு அணித்தே யிருப்பவர் அல்லது கடவுள் நிலை பெற்றவராகிறார்.

*　　　*　　　*　　　*

ஒருவன் தன்பால் உறுத்தெழும் விலங்கு நசைகளை அடக்க வேண்டுமானால் முதலாவது அவன் நா நசையை அடக்குதல் வேண்டும். ஆனால் அஃது எளிதன்று.

*　　　*　　　*　　　*

தேக்கடை காப்பிக்கடை பலகாரக் கடைகள் மீது ஓடும் மனதை அடக்கி யாளாதவரை நமது உடல் நலத்துக்கேற்ற உணவளவில் நிறையுளங் கொள்ளாதவரை—உணவுடன் காரமுள்ள கனி யமுதுகளையும், வித விதமான ஊறுகாய்களையும் விலக்காதவரை—நாம் நம் மாட்டுள்ள விலங்கியல்புகளை அடக்கியாள முடியாதவராகிறோம்.

*　　　*　　　*　　　*

கதரில்லாத சுதேசியம் உயிரில்லாத உடல் போன்றது.

# "சிவ! சிவ!"

(தென்னாப்பிரிகா-டர்பன், சாஸ்வதீ சபைத் தலைவர்
திரு. ச. முனிசாமி பிள்ளை)

இம் மகா மந்திரமானது கடத்தற்கரிய பிறவி யென்று சொல்லப்படும் சமுத்திரத்தைக் கடந்து, சிவபெருமானுடைய திவ்விய பாதாரவிந்த நிழலை அடைதற்குத் தெப்பம் போன்றிருக்கிறது. இதனைப் பத்தியுடன் செபிப்பவர்களுக்கு இஷ்டசித்தியும், பெருவாழ்வும் தப்பாது கிடைக்குமென்று சமயநூல்கள் ஒவ்வொன்றும் தனித்தனி கரதலாமலகம் போலக் காட்டும். "சிவ சிவ என்றிடத் தீவினை மாளும்" என்றும் "சிவ சிவ என்றிடத் தேவரு மாவர்" என்றும் 'சிவ சிவ என்றிடச் சிவகதி தானே" என்றும் திருமூலநாயனார் அருளிச்செய்த திருமந்திரம் கூறும். இதை ஆரம்பத்தில் ஒருமுறை செபித்துப், பின் இரு முறையாகி, மும்முறையாகி அப்பால் பன்முறையாகி, அறிவு முதிர்ந்து, பூர்வஜன்ம புண்ணிய விசேடத்தினாலும், திருவருள் முன்னிற்பதாலும் சாதுசங்க சேவையும் ஆன்ம விசாரமும் சற்குரு கடாட்சமும் எய்தப் பெறுங்காலத்தில் இடைவிடாது செபிக்கும் பாக்கியம் வந்து சேரும். அவ்விதம் செபித்து வருதலினாலே நாம் செய்துள்ள தீவினை முழுதும் தீப்பட்ட பருத்திப் பொதிபோல் அழிந்துவிடும். ஆசைக்கடல் வற்றும். வினையென்னுந் திரை மாயும். பிறவிகள் தோறும் பிறந்து உழன்று இறத்தலை ஒழித்து ஆன்மநாதருடைய குஞ்சித பாத நிழலில் இருமாந்திருக்கும் பெருவாழ்வும் தப்பாது வந்து சேரும். இதனாலன்றோ "நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும் நினை, என்றும் சிவன்றாளினை" என்று கூறப்பட்டிருக்கிறது.

நவீன நாகரீகமும் சமயவிரோதமான அடாத செயல்களும் அதிகப்படும் இக்காலத்தில் அநேகர் ஆலயசேவை செய்யும் பொழுதாயினும் "அரகர" என்னவும் "சிவ சிவ" என்னவும் கூசுகின்றனர். சிலர் அருவருக்கின்றனர். அந்தோ! எவ்வளவு அறியாமை !! இவ்விதமான விபரீத புத்தியானது நாசத்துக்கே ஏதுவாகும். கற்பிற் சிறந்த ஒரு நாயகி தன் நாயகனுடைய குணாதிசயங்களையும் புகழையும் எடுத்துப் போற்றித் துதிப்பதில் ஒருபோதும் பின்னிட மாட்டாள். இதுபோலவே நாமும் ஆன்மநாதராகிய பகவானுடைய சந்நிதானத்தில் அன்புபூண்டு வணங்கவேண்டுமாயின் அப் பரமேசுவரனின் திருநாமங்களையும் தேவாரம் திருவாசகம் முதலான அருட்பாக்களையும் ஓதுதல் வேண்டும். அச்சத்துடன் நடுங்கி ஒடுங்கி ஏறக்குவித்த கைகளுடன் நிற்றல் வேண்டும். நெஞ்சம் உருகுதல் உரை தடுமாறுதல் கண்களிலிருந்து ஆனந்த அருவி சொரிதல் முதலான தன்மைகளை உடையராதல் வேண்டும். அந்தச் சர்வஜீவ தயாபரராகிய சிவபெருமானது பெருங்கருணையினால் இன்ப வீட்டை யடைந்த பக்தசிரோன்மணிகள் பலர், நாம் ஓதி உணர்ந்து உய்ந்து

ஈடேறும் பொருட்டு அநேக நன்மார்க்கங்களை வகுத்தருளினர். இந்த உண்மையை ஒரு சிறிதும் உணராதவர்களாய், காடியை உள்ளே புகுத்தி மூடப்பட்ட பெட்டி ஆற்றில் மிதந்து வரக்கண்டு, அப்பெட்டிக்குள் திரவியம் இருக்கிறதென வீணான எண்ணமும் ஆசையுங்கொண்ட ஒருவன் விரைந்து சென்று பெட்டியை எடுத்துத் திறந்து அக் காடியைக் கம்பளிமூட்டை என்று கட்டிப்புரண்டு மாண்ட தன்மைபோல, நாமும் உலக போகங்களில் ஆழ்ந்து வாழ்நாளை வீணாக்கி ஈற்றில் ஒருசிறிதுந் தவறாது வந்தே தீரும் மரணம் என்னும் பேராபத்திற்கு இரையாகின்றோம். எவரேனும் இச் "சிவ சிவ" என்னும் மந்திரத்தை இடைவிடாது ஜெபிக்கும் பெரும்பேற்றைப் பெறுவரெனில், ஈற்றில் அச் சிவவடிவமே யாவரென நூல்கள் கூறும். "சந்ததமும் வேதமொழி யாதொன்று செப்பினது தான்வந்து முற்றும்" எனத் தாயுமான சுவாமிகள் கூறினர். இந்நிலை கைவரப்பெற்றோர் காலன் றனக் கொருகாலு மஞ்சார்.

ஆதலின் நித்தியகருமமும், சமயானுஷ்டானமும், வேத பாராயணமும், சாது சங்கமும், ஆலயசேவையும், உண்மைத் திருத்தொண்டும் சிறிது சோர்வடையும் இக்காலத்தில் ஆலய உற்சவங்களிலேனும் இறைவனுடைய திருவடி நிழலை அடையச் செய்யும் மகத்துவம் பொருந்திய இம்மகா மந்திரத்தை அன்புடன் ஓதுதல் மிகச் சிறந்ததாகும்.


## ஒரு சிறந்த நாவல் சஞ்சிகை

'மனமோகினி' என்னும் நமது இனிய நாவல் சஞ்சிகைக்கு இப்போது பிப்ரவரி முதல் பதின்மூன்றாவது ஆண்டு நடந்து வருகிறது. இதில் 'நாகபுரியின் நாகரிகம்' என்னும் புதிய நாவல் ஆரம்பிக்கப்பட்டு வெளியாகிவருகிறது. இந்நவீனகம் படிக்கப் படிக்கத் தெவிட்டாத அமுதமாகும். இதுவே ஆங்கில நாவலாசிரியராகிய ரெயினால்ட்ஸின் கடைசி கதையாகையால் மிக்க ருசிகரமாக இருக்கும். சுமார் நான்கு ரூபாய் விலையுள்ள நாவல் ஒரு வருஷத்தில் கிடைக்கும். பிரதி மாதமும் கிரௌன் 1-க்கு 16 சைசில் 80 பக்கங்கள் வெளியாகின்றன. இதன்,

வருஷ சந்தா ரூபா 2—8—0 தான்.

அன்னிய நாடுகளுக்கு ரூபா 3—0—0.

உடனே முன்பணம் அனுப்புங்கள்.

மானேஜர் :—'ஆனந்தபோதினி' ஆபீஸ்,
தபாற்பெட்டி நெ. 167, மதராஸ்.


# பூத்தையலும் அதின் பிரயோஜனமும்.

(ரேவதி எழுதியது.)

பொழுது போக்குவதற்காக மட்டும் அல்லாமல் அதையும் (தையலையும்) ஒரு முக்கியமான வேலையாகவே நான் கருதுகிறேன். தையல் வேலை செய்வதற்காக நாம் எடுக்கும் சிரமமும், நேரமும் அநாவசியமானதென்று ஒருவரும் சொல்ல முடியாதல்லவா? சமைப்பதும் சாப்பிடுவதும், மற்ற வீட்டுக் காரியங்களும் நமக்கு எப்படி அத்தியாவசியமானதாக இருக்கிறதோ அப்படியே தையல் வேலையும் இன்றியமையாத வேலை என்பதே எனது நோக்கம். பூத்தையல் தைப்பது சுலபமென்றும், தைப்பதற்குமுன் அதை தைக்கவேண்டிய இடத்தில் (Drawing) சித்திரத்தில் அமைப்பதுதான் கஷ்டமென்றும் எழுதியிருக்கிறாய். நீ மாத்திரம் அன்று எனக்குத் தெரிந்தவரையில் வெகுபேர்கள் இப்படிச் சொல்லுவது வழக்கமாக இருக்கிறது. நீ சித்திரம் வரைவது கஷ்டம் என்று நினைக்கிறாய். எனது தோழி ஒருத்தி இருக்கிறாள் அவள் என்ன சொல்லுகிறாள் தெரியுமா? சித்திரம் எவ்வளவுவேண்டுமானாலும் எழுதலாமென்றும் அதற்குத் தகுந்த மாதிரி தையல் வேலை செய்வதுதான் கடினம் என்று சொல்லுகிறாள்.

தையல் வேலை அழகா யிருக்கவேண்டுமானால் கட்டாயமாய் நமக்கு சித்திரம் வரையத் தெரிந்திருத்தல் அவசியம். ஓர் உடுப்பு வெட்டத் தெரிபவர்களுக்கு அதைத் தைக்கவேண்டிய விதம் தெரிந்திருக்கவேண்டியது எவ்வளவு அவசியமோ அதே மாதிரியாக பூத்தையல் தைப்பவர்களுக்கு சித்திரம் தெரிந்திருத்தல் அவசியம். தைக்கத் தெரியாமல் வெட்டுவதிலும் பிரயோஜனமில்லை. வெட்டத் தெரியாமல் தைப்பதிலும் பிரயோஜனமில்லை. ஒன்றுக்கொன்று உடலும் உயிரும்போல் சம்பந்தப்படுத்தப்பட்டிருக்கிறது. 'வெட்டுவேன்; தைக்கத் தெரியாது. தைப்பேன்; வெட்டத் தெரியாது' என்று சொல்லுவதைவிட தையல் வேலையே தெரியாதென்று சொல்லுவது மேல் என்று நான் நினைக்கிறேன். அதுபோல்தான் சித்திரம் வரைதலும் அதைத் தைத்தலும் நாம் நன்முயற்சியோடு பிரயாசைப்பட்டு ஒரு வேலையைச் செய்யத் துவங்கினால் கட்டாயமாக அதில் வெற்றியடைவோம். நீ காலையில் அல்லது உனக்கு ஒழிந்த நேரத்தில் ஒரு மணிநேரம் சித்திரம் வரைவதில் செலவிட்டு வருவாயானால் நாளடைவில் அதின் பிரயோஜனத்தை நீ நன்கு அறியக்கூடும்.

"சித்திரமும் கைப்பழக்கம், செந்தமிழும் நாப்பழக்கம்" என்பது நமது பாட்டியாரின் திருமொழி அல்லவா? தையல் வேலையினால் நமக்கு உண்டாகும் பிரயோஜனங்கள் எவ்வளவோ இருக்கிறது. "தையல்" என்றாலே பெண் என்று பொருள்படும். (ஆகையால் தையல் வேலை ஒவ்வொரு பெண் மணிகளுக்கும் தெரிந்திருக்கவேண்டுமென்பதே எனது பேராவல்).

தையல் வேலை நாம் அதிகமாக கற்கத்தொடங்கினால் நமக்கு எதையும் கூர்ந்து நோக்கும் சக்தி அதிகம் உண்டாகிறது. நாம் கோவில்களுக்கோ, அல்லது வேறு ஏதாவது பொது ஜனங்கள் கூடும் வேறு இடத்திற்கோ போக நேரிட்டால் முதலாவது கவனிக்கப்படுவது சேலை தினுசுகளும் நகை தினுசுகளும் என்று மக்கள் சொல்லுவது சகஜமாக இருக்கிறதல்லவா? ஆம். அதில் என்ன குற்றம்? சித்திரத்தையல் பழகுவதினால் நாம் ஒவ்வொன்றையும் கூர்ந்து நோக்கும் சக்தி அதிகரிக்கவே செய்யும். நமக்கு எவ்வளவு நன்றாய்த் தைக்கத் தெரிந்திருந்தாலும், பிறர் தைப்பதையும் நாம் கவனித்து அதில் ஏதாவது விசேஷமான புதிய வேலைகள் செய்யப்பட்டிருந்தால் அதையும் நாம் கவனித்துப் பிறகு நமக்குக் கூடுமான வரையில் அதை செய்துப் பார்க்கவேண்டும். "கற்றது கைமண்ணளவு கல்லாதது உலகளவு" நம்மைவிட சிறப்பாக செய்யக் கூடியவர்கள் உலகில் எவ்வளவோ பேர் இருப்பார்கள் அல்லவா? மற்றவை அடுத்த கடிதத்தில்.


## ஏஜண்டுகள் தேவை.

எல்லா ஊர்களிலும் நமது 'ஆனந்தபோதினி' மாத, வாரப் பத்திரிகைகளை விற்பதற்கும், சந்தா சேர்த்துக் கொடுப்பதற்கும், விளம்பரம் சேர்த்துக் கொடுப்பதற்கும் தக்க சாமர்த்தியமுள்ள ஏஜண்டுகள் தேவை. விவரம் அறிய விரும்புவோர் எமக்கு எழுதித் தெரிந்து கொள்ளவும். நமது புஸ்தகங்களும் பத்திரிகைகளும் எல்லா ஸ்டேஷன்களிலுமுள்ள ஹிக்கின்பாத்தம் புஸ்தகசாலைகளில் கிடைக்கும்

மானேஜர்.


# "தினசரி வாழ்வில் யோகம்"

("சமூகத் தொண்டன்" மொழி பெயர்த்தது)

இது, பம்பாய்க்கு அணித்துள்ள லோனவாலா என்னுமிடத்தில், சென்ற ஆகஸ்டு மாதம் 31ந் தேதி "பம்பாய் இந்து இளைஞர் கழக"த்தின் ஆதரவில், சுவாமி. குவலயானந்தர் அவர்களால் "தினசரி வாழ்வில் யோகம்" என்னும் பொருள் பற்றி உபந்நியாசிக்கப்பட்டு, "பம்பாய் கிரானிகல்" ஞாயிறு வெளியீட்டில் பிரசுரிக்கப்பட்டது.

"நான் இன்று இரவு தினசரி வாழ்வில் யோகத்திற்கு இடமுண்டா?" என்பது பற்றிப் பேச விரும்புகிறேன். அதாவது பெரிய நகரங்களிலும், நடுத்தரப்பட்டணங்களிலும் தற்போதுள்ள நவீன வாழ்க்கை முறையில் உள்ளவர்களுடைய தினசரி வாழ்வையே குறிக்கின்றேன்.

"இப்போதுள்ள விஞ்ஞானக் கலைவல்லுநரின் கணக்குப்படி இன்றைக்குச் சுமார் பதினைந்து ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே, மிக மிகப் பழையகாலத்து மனிதன், இயற்கையின் தத்துவங்களைத் தன்வசம் செய்யத் தன் மூளையைப் பயன்படுத்தத் தொடங்கினான். இவ்வழியில் அவன் முயற்சியும், அம்முயற்சியின் பலனுமே இப்போது நாகரிகம் என்று சொல்லப்படுகிறது. ஒன்றின் பின் ஒன்றாகப் பல அதிசயங்கள் தொடர்ந்து கண்டுபிடிக்கப்பட்டு, அவைமூலம், தன் சுற்றிலுமுள்ள இயற்கைத் தத்துவங்களை வெல்ல மனிதன் பலம் தேடிக்கொண்டான். இவ்விதமாக மனிதனுடைய மூளை அவனுடைய சுற்றுப் புறங்களில் வேலை செய்துகொண்டிருந்தபோது அத் தத்துவங்களும், அவன் மூளையில் வேலை செய்யத் தொடங்கின. மனிதனுடைய மூளைக்கும் தத்துவங்களுக்குமிடையே இவ்விதப் போராட்டம் இன்றுகாறும் தொடர்ந்து வந்துகொண்டிருக்கின்றது. இவ்வுலகத்தின் மீது மனித வாழ்வின் கடைசி நாள் மட்டும் இப்போராட்டம் நிகழ்ந்துகொண்டேயிருக்குமென்று நான் நிச்சயமாயிருக்கின்றேன். மனிதனுடைய மூளை வளர்ச்சியடைவது போன்று நாகரிகமும் வளர்ந்து, இரண்டும் ஒன்று சேர்ந்தே எப்போதும் போய்க்கொண்டிருக்கின்றன. நாகரிகத்தை வளர்த்துக் கொண்டுபோகும் முறையில் மூளை எப்போதும் குறைந்த பலத்துடன் இருந்தது இல்லை. அதிசயிக்கத்தக்க வகையில் அறிவு முன்னேற்றமடைந்து வந்திருப்பதாகவே மனிதனுடைய வரலாற்றால் தெரியவருகின்றது.

## மூளையின் அம்சமும் நுட்ப புத்தியும்

"மனிதன் அறிவு மூளையைச் சம்பந்தப்படுகிறதா? ஆம்; சம்பந்தமிருக்கிறது. மூளையின் வளர்ச்சியையே பெரும்பாலும் அறிவு விளக்கம் பொருந்தியிருப்பதாக உடற்கூறு சாத்திரத்தில் வல்லவர்கள் முடிவுக்கு வந்துள்ளனர். மனிதனுக்கும் மனிதனைச் சூழ்ந்துள்ள சந்தர்ப்பங்களுக்கும் இடையே, இப்போது குறிப்பிட்டபடி நடந்துவரும் போராட்டத்தால் தான் மனிதனுடைய மூளை, தன்மையிலும், அளவிலுமாக இரண்டு விதத்திலும் செழிப்புற்றிருக்கிறது. மிக மிகப் பழைய காலத்து மனிதனுடைய மூளை

63 கன அங்குலம்தான் இருந்தது. தற்போதைய மனிதனுடைய மூளையின் அளவு 98 கன அங்குலமாகும். இப்படிப் பழைய காலத்து மனிதனுடைய மூளையின் அளவைவிட இப்போதைய மனிதனுடைய மூளையின் அளவு 35 கன அங்குலம் அதிகரித்திருக்கிறது. இருப்பினும் மிருகங்கள் அறிவு, அவைகளின் நெற்றிக்குமேல் இருக்கும் மூளையையே பொருத்திருக்கிறது. பூனையைவிட நாய் அதிக அறிவுடையதென்று நாம் அறிவோம். பூனையின் முன்புற மூளையின் அமைப்பு 3.4 வீதமும், நாயின் அமைப்பு 6.9 வீதமும், ஆனால் மனிதனுடையது 29. வீதம் அதிகமாயும் அமைக்கப்பட்டிருக்கின்றன. மிகப் பழையகால மனிதன் மூளையைவிடத் தற்கால மனிதனின் மூளை எவ்வளவு பெருத்திருக்கின்றதென்பதைக் கொண்டே மக்கள் வகுப்பிலும் இவ்வித்தியாசம் காணப்படும்.

“எடுத்துக்கொள்ளக் கூடியவிதமாய் இதுவரைக்கும் சொல்லப்பட்டிருப்பது யாதெனில், மனிதன் மூளையுடன் எல்லாம் செவ்வையாக விருப்பதாயும், மனிதனுக்கும் மனிதனைச் சுற்றியுள்ளவைகளுக்கு மிடையில் பூரண ஒற்றுமை யிருப்பதுமாகும். என்றபோதிலும் அப்படியில்லை. சென்ற நூற்றாண்டுகளிலும் இந்த நூற்றாண்டிலுமாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனவும், ஏறக்குறைய நமது காலத்தையும், இடத்தையும் குறைத்துவிட்டிருப்பனவுமான அம்சங்கள் மூளையின் சுகத்தை, அல்லது உடல் வன்மையை மூர்க்கமாகப் பயமுறுத்தி வருகின்றன. அதி வேகமாய் ஓடும் புகை வண்டி, மோட்டார் வண்டி, ஆகாயவிமானம், தந்தி, டெலிபோன், கம்பியில்லாத் தந்தி ஆகிய இவைகள் நமது உடற்கூறு தத்துவங்களையும், பலத்தையுமே அழித்துவிடக்கூடிய வகையில் ஏற்பட்டிருக்கின்றன. உலகத்தைச் சுற்றிக்கொண்டு தன்னிடமே திரும்பிவரும்படி ஒரு செய்தியனுப்பினால் அச்செய்தி, 24,000 மைல் தூரத்தை அரைக்கால் விநாடியில் சுற்றிக்கொண்டு புறப்பட்ட இடம் சேர்கிறது. நாம் இன்று வாழ்ந்துகொண்டிருக்கும் வாழ்க்கை முறையின் வேகம் எத்தகையதென்று குறிப்பிட இது ஒரு உதாரணமே சாலும்.

## உடற் சக்தி வளர்ச்சி

“ஒழுங்காகவும், சுறுசுறுப்பாகவும் நடத்தும் ஓர் வர்த்தகன் அல்லது ஓர் ஆங்கிலவைத்தியன் (டாக்டர்) அல்லது ஓர் வழக்கறிஞன் ஆகிய இவர்களில் ஒருவருடைய காரியாலயத்திற்குச் சென்று பார்த்தால், நவீன வாழ்க்கை முறையில் மறைந்துகொண்டுள்ள ஒருசக்தி, அவர்களை அழுத்திக்கொண்டிருப்பதைக் காணலாம். வேலை செய்யும் நேரத்தில் ஒவ்வொரு நிமிஷமும் உடற் சக்தி தொழில்படுவதும் தொழிலினின்று மீட்சியுறுவதுமா யிருக்கின்றது. கட்சிக்காரனுடையவும், நோயாளியுடையவும் சந்தர்ப்பத்தையும், நிலைமையையும் அறிய அடிக்கடி உடற் சக்தியை உபயோகிக்கவேண்டிய சந்தர்ப்பங்களும், அறிந்து உடனே செய்யவேண்டிய பரிகாரங்களும் தமது காரியாலயத்தின் வெளிப்புறத்தில் சகிக்கொணாத நிலையில் காத்துக்கொண்டிருக்கும் கட்சிக்காரர், நோயாளிகளின் கூட்டமும், அவர்களைக் கவனித்து ஆவன செய்ய வேண்டிய பொறுப்பும், இவை போன்ற மற்றும் எத்தனையோவிதத் தொல்லைகளும் வேலை செய்யும் மனிதனுடைய உடற் சக்தியையும் அறிவையும் அழுத்தித் தொந்தரைக்குள்ளாக்கி, அமைதியைக் கடுமையாகக் குலைத்துவிடுகின்றன. தனிப்பட்ட மனிதனையும், நாட்டினரையும் வற்புறுத்தும் பொருளாதார நெருக்கடி நிலைமையை இன்னும் மோசமாக்கிவிடுகிறது. ஆராய்ச்சி நிபுணனாவது இப்போதுள்ள நிலைமையைவிட நல்ல முறை ஏதாவதொன்றைக் கண்டுபிடிக்கவில்லை. அவன்தான் இரவெல்லாம் விளக்கெரித்துக் கொண்டு அறிவையும், உடற் சக்தியையும் அழிப்பதில் முன்னிற்கின்றான். அவன் வேலையிலிருந்து வரும்போதும் அவனுடைய எண்ணங்களுடனே வருகிறான். அது ஓய்வு வேளையிலும் அவனது உடற் சக்தியை அழித்துக்கொண்டிருக்கின்றன.



“இவ்விதமாகத்தான் ஓர் நாகரீகமடைந்துள்ள மனிதன் தனது தினசரி வாழ்வை நடத்திக்கொண்டிருக்கின்றான். இவ்வாழ்வு அஜீரணம், மலச்சிக்கல், இரத்தக் குறைவு, தலைவலி, இதயத்துடிப்பு, தூக்கமின்மை, புத்தி மாறாட்டம் முடிவாகத் தற்கொலை ஆகிய இவ்வளவிற்கும் காரணமாக நின்று, தற்கால நாகரிக மனிதனை வாட்டுகின்றது. இச்செய்தியையே எல்லா டாக்டர்களும், எங்கும் காதாரக் கேட்பது. எனவே உலகத்தின் எல்லாப் பாகத்திலும் வைத்திய நிபுணர்களும், வைத்தியசாலைகளும், பயித்தியத்திற்குத் தனி வைத்தியசாலைகளும் அதிகரித்து வருவது அதிசயமன்று. பயித்தியக்காரர்களைப் பற்றியும், தற்கொலைகளைப் பற்றியும் வெளியிடப்பட்டுள்ள வீதாசாரப் புள்ளி விவரங்களைப் பார்த்தால் மனிதனுடைய அறிவும், உடல் நிலையும் எவ்வளவு தூரம் கெட்டு வருகிறதென்றும், இக்கெடுதிக்குக் காரணம் வளர்ந்துவருகிறதென்றும் புலப்படும்.

## பைத்தியத்தின் விபரீத வளர்ச்சி

“புத்தி மாறாட்டம் என்பது மனோ வியாதியின் உச்ச நிலையையும், மூளையின் நிலைமையையும் சரியானபடி உணர்த்துவது. புத்தி மாறாட்டத்திற்கு இரண்டு காரணங்களுள வென்பது சரியாகும். முதலாவது பயித்தியத்திற்குக் காரணம் பயித்தியக்காரனின் மூளை முழு வளர்ச்சி பெறக்கூடாமல் தவறிப்போனது. இரண்டாவது பயித்தியக்காரனின் மூளை நன்கு வளர்ச்சிபெற்றிருந்தும், மனநிலை கெட்டுவருவது, அல்லது மூளை கெட்டுவருவது, இது மற்றொருவகை. நாம் இப்போது எடுத்துக்கொண்டுள்ள விஷயத்தில் சம்பந்தப்பட்டவர் இரண்டாவது வகுப்பினரே என்பது தெளிவாக விளங்குகிறது. இப்போது நாம் இங்கிலாந்தையும், வேல்ஸையும் பற்றி எடுத்துக்கொண்டு, 1920-ம் ஆண்டு முதல் 1931--ஆம் ஆண்டு வரையும் வெளியிடப்பட்டுள்ள வீதாசாரப் புள்ளி விவரங்களைப் பார்த்தால் இரண்டாவது வகுப்பு பயித்திக்காரர்களின் தொகை எப்படி ஒரேவிதமாய் உயர்ந்துகொண்டே வந்துகொண்டிருப்பது காணப்படும். 1920-ம் ஆண்டில் பயித்தியக்காரர்களின் வீதாசாரம் ஒவ்வொரு பதினாயிரத்திற்கும் 32 பேராகவும், 1932-ம் ஆண்டில் அத்தொகை ஒவ்வொரு பதினாயிரத்திற்கும் 36 பேராகவும் உயர்ந்து வருவதும் தெரியும். முதல் வகுப்பைப்பற்றிப் பார்த்தாலும் அவ்வகுப்பு இங்கிலாந்திலும், வேல்ஸிலும் அதிகரித்திருப்பதாகவே தெரிகிறது.

“இந்தியாவுக்கு வந்து நமது வகுப்பைப் பார்த்தால் 88,000 பயித்தியக்காரர் 1921-ம் ஆண்டில் இருந்தனர். ஆனால், இப்போது 1931-ம் ஆண்டில் 120,000 பேர் பயித்தியங் கொண்டுள்ளார்கள் என்று தெரிகிறது. அப்படியும் இப்புள்ளி சரியன்று. 1931-ம் ஆண்டில் ஜனக் கணித அதிகாரிகளாகவிருந்த திருவாளர்கள் பார்டர் அவர்களும் சார்லி அவர்களும் வெளி

யிட்டுள்ள புள்ளி விவரப்படி பயித்தியக்காரர்களின் வீதாசாரம் மேலே குறித்துள்ளதைவிட இன்னும் அதிகமிருக்கவேண்டும்.

## தற்கொலையின் பெருக்கம்

"தற்கொலையைப் பற்றித் தெரிந்துகொள்வது பயித்தியத்தைப் பற்றியதைவிட நடுங்கத்தக்கதாக விருக்கும். மனிதன் வாழ்க்கையில் மகிழ்ச்சியில்லாததால் தற்கொலை செய்துகொள்ளவில்லை. ஆனால் தினசரி வாழ்வில் நேரும் அசம்பாவிதங்களை எதிர்த்து நிற்கும் ஆற்றல் இல்லாமையாலேதான். இக்கருத்தையே டாக்டர் டிவைன் என்பார் தாம் தற்கொலையைப் பற்றி 1935 ஆண்டு "மருத்துவ ஆண்டு அனுபந்தத்தில்" எழுதியுள்ள கட்டுரையில் வற்புறுத்துகின்றார். மக்கள், தங்களை மிக்க வேகமாய்ச் சென்றுகொண்டிருக்கும் நவீன தினசரி வாழ்வில் பிணைத்துக் கொண்டு தங்கள் உடல் வளத்தையும் கெடுத்து, அறிவுக் கேட்டையும் வளர்த்து வருகின்றனர். இதுதான் உலக முழுதும் நிகழும் பயங்கரமான தற்கொலைக்குக் காரணமாகின்றது; பொறுப்பாகின்றது. இங்கிலந்து, ஸ்காட்லந்து, அயர்லந்து, நெதர்லந்து, ஸ்வீடன், ஆஸ்திரேலியா, இத்தாலி ஆகிய நாடுகளின் தற்கொலை வீதாசாரப் புள்ளி விவரங்கள் கடந்த 60 ஆண்டுகளுக்குக் கிடைக்கும். அவைகளில் நான் சொன்ன நாடுகளின் தற்கொலை வீதாசாரப் புள்ளி விவரங்கள் உயர்ந்து கொண்டே வந்திருப்பது தெரியவரும். இந்நாடுகளில் பெரும்பாலானவற்றில் தற்கொலை வீதாசாரம் ஏறக்குறைய இரட்டித்துவிட்டது.

"பிரான்ஸ், ஜெர்மனி, ஸ்விட்ஜர்லந்து ஆகிய இவைகளின் செய்தி இன்னும் ஆபாசம். இந்நாடுகளில் தற்கொலை உயர்ந்து வருவது மாத்திரமன்றி, இங்கிலாந்தின் வீதத்தைவிட அதிகதூரம் உயர்ந்திருக்கிறது. இங்கிலந்தில் பத்து இலட்சத்திற்கு 100 பேர் தற்கொலையால் மாண்டால், பிரான்ஸில் 133 பேர் மடிகின்றனர். 166 பேர் ஜெர்மனியிலும், சுமார் 230 பேர் ஸ்விட்ஜர்லந்திலும் தற்கொலை புரிந்து மாள்கின்றனர். ஆனாலும் ஹங்கேரியின் தலைமை பட்டினமான புடாபெஸ்டில் தான் உலகத்திலேயே தற்கொலையில் உயர்ந்த வீதாசாரமென்று நம்பத்தகுந்த புள்ளிவிவரம் காட்டுகிறது. அங்கே 1930-ம் ஆண்டில் 2000 பேர்களுக்குமேல் தற்கொலை செய்துகொள்ள முயன்றதாகத் தெரிகிறது. புடாபெஸ்டு பம்பாயினும் சிறிய பட்டினமாய், பத்து லட்சம் மக்களே வாழ்கின்றார்கள் என்பதை நினைக்கும்போது எவ்வளவு கொடூரமான நிலையில் மக்கள் அங்கு வாழ்கின்றனர் என்பது புலனாகும். புடாபெஸ்டில் 500 பேருக்கு ஒருவர் தற்கொலை செய்துகொள்ள முயலுவது இப்போது எடுத்துக் காட்டப்பட்ட புள்ளி விவரத்திலிருந்து வெளியாகும். உலகத்திலேயே இப்போது நாகரிகத்தின் உச்ச நிலையில் இருந்து வாழும் அமெரிக்கா ஐக்கிய மாகாணத்தில் ஒரு இலட்சத்து ஐம்பதினாயிரம் பேர் தற்கொலையால் மாள்கின்றனர்.

"நவீன நாகரிகத்தின் மரண வாழ்வு இப்படித்தானிருக்கிறது. நான் நமது நாட்டில் பயித்தியமும், தற்கொலையும் இல்லை யென்று சொல்லவரவில்லை. ஆனால், நாம் அடைந்துகொண்டிருக்கும் புள்ளி விவரப்படி, மக்கள் நடாத்தும் மிகவும் ஆவேசமான நவீன வாழ்க்கை முறையால் குறைந்து வரும் உடல் பலமே பயித்தியத்திற்கும் தற்கொலைக்கும் காரணமென்று மிகவும் வற்புறுத்தி நிலைநாட்ட விரும்புகிறேன். டாக்டர். ஒல்கியெசி, டாக்டர்.



ஜாகோப்சன், ஆக மற்றும் பலர் இம்முடிவுக்கே வந்திருக்கின்றனர். எவராயினும் சரி, பாரபட்சமில்லாமல் நடுவு நிலைமை வகித்து, நவீன நாகரிக தினசரி வாழ்வை நோக்குவாராயின் என்னுடைய முடிவில், என்னுடைய கொள்கையில் உண்மை காண்பர்.

## பரிகார மென்ன?

"விமோசனம் யாது? நாம் காலத்தின் வேகத்தைத் தடுத்துவிடலாமா? சென்ற நூற்றுண்டுகளிலும் இந்நூற்றுண்டிலும் மனித சமூகத்தில் தோன்றிய பேரறிவாளர்கள் கண்டுபிடித்த நூதன விஷயங்களை மாற்றுவதா? நாம் இருப்புப்பாதையைத் தோண்டி யெடுத்து எறிந்துவிடுவதா? கப்பல்களைக் கடலில் அமுத்திவிடலாமா? ஆகாய விமானங்களை அழித்துவிடுவதா? இப்படிச் செய்ய நாம் எண்ணினாலும் செய்வோமோ? நிச்சயமாய்ச் செய்யமாட்டோம். இவை மக்கள் வாழ்க்கையை வளம்படுத்த மாத்திரம் ஏற்பட்டவை யன்று. இன்றைய நிலையிலிருந்து, இனி என்னென்ன அதிசயங் கண்டுபிடிக்கவிருக்கின்றன வென்று சொல்ல முடியா ஒப்பற்ற பலப் பல விஷயங்களை காண்பதற்கு காரணமாகவும் உள்ளன என்று சொல்லுகிறேன். அங்ஙனமாயின் நாம் நவீன வாழ்க்கை முறையால் நேரிடும் கெடுதியை எப்படிப் பரிகரிப்போம்? இக்கேள்விக்கு உடல் நலங்களை வளப்படுத்துவதும், இதயத்தைச் சுத்திசெய்வதும் என்பவையே எனது தெளிவான பதிலாகும். நமது உடல் தத்துவங்களை யோகாப்பியாசங்களால் நன்கு தளர்த்துவதும் தினசரி வாழ்வில் அனுசரிக்கும் தூய ஒழுக்கங்களாலுமே நவீன வாழ்க்கை முறையால் நேரும் மரணத்தை யுண்டுபண்ணக் கூடிய தீமைகளை ஒழிக்கமுடியும். யோகம் உடலுக்கு உறுதிதரத்தக்க அப்பியாசத்தைப் போதித்து, நாம் ஒழுகவேண்டிய விதிகளையும் ஏற்படுத்தியிருக்கிறதென்று நான் உங்களுக்குச் சொல்லவிருக்கிறேன். நமது நாட்டுப் படிப்பாளிகளுள்ளத்தில் யோகத்தைப் பற்றிய இழிந்த கருத்து மிக ஆழமாக வேரூன்றியிருக்கிறது. ஆனாலும் யோகம் சமய சம்பந்தமானதன்று. அது மிக விரிவான ஆராய்ச்சியுடன் இவ்வுலக இன்பத்தையும், மறுவுலக இன்பத்தையும் அனுபவிக்க நேர்மையான கருத்துடனும், நம்பிக்கையுடனும் அனுசரிக்கப்படுவதென்று இப்போதே சொல்லிவிடுகிறேன். ஆனால் கடைக்கால் இல்லாத கட்டிடத்தைப் போன்றாவது, மூடத்தனமாக ஏற்படுத்தப்பட்டாவது இருக்கிறதென்பதற்கு இடமில்லை.

## யோகப் பயிற்சியே உய்திதரும்

"நவீன முறையில் நாம் நடத்தும் வாழ்வே நமது உடலில் உண்டாகும் பல்வேறு நோய்களுக்கும், முடிவில் பயித்தியத்திற்கும், தற்கொலைக்கும் காரணமென்று முன்னே சொன்னேன். நமது தினசரி வாழ்வில் நாம் நாள் முழுதும் அடைந்து வரும் கேட்டை அடியுடன் மாற்றுவதற்குச் சாவாசனம், பிராணுதாரணம், சித்தாசனம், சமாசனம் ஆகிய யோகப் பயிற்சிகளால், நாள்தோறும் அரை மணி நேரம் முயன்றால் போதும். யோகப் பயிற்சி உடம்பை எப்படி போஷிக்கிறதென்று உங்களில் பெரும்பாலார் அறியாமலிருக்கலாம். ஆனால் நல்ல தூக்கம் உடம்புக்கு எவ்வளவு நல்லதென்று உங்களில் ஒவ்வொருவரும் நன்கு உணர்ந்திருக்கிறீர்கள். டாக்டர். ஜாகோப்சன் என்பவர் அமெரிக்கப் பிரபல வைத்தியர் என்று முன்பு சொன்னேன். அவர் தமது ஆராய்ச்சிக் கூடத்தில் பரிசீலனை செய்து, ஆழ்ந்த தூக்கத்தைவிட

உடலைத் தளர்த்தும் பயிற்சியே உடலுக்குச் செழிப்பை யளிக்கச் சிறந்ததென்று முடிவு கட்டியிருக்கிறார். அவர் அனுவத்தனை இரும்பால் ஒரு கருவி கண்டுபிடித்திருக்கிறார். அக்கருவி ஒரு வால்டின் (Volt)-வால்ட் என்பது மின்சார விசையை அளக்கும் ஒரு அளவு—பத்து லட்சம் பாகத்தில் ஒரு பாக மின்சார விசையையும் காட்டக்கூடிய மிக நுண்ணிய அமைப்புடையது. உடற் சக்தி தொழில்படாது மிகவும் அமைந்திருக்கும்போது மின்சார அலைகளை அனுப்பிக்கொண்டே யிருப்பதை டாக்டர்கள் அறிவார்கள். இந்த உடற் சக்தி எவ்வளவுக் கெவ்வளவு அழுத்தமாக விருக்கிறதோ, அவ்வளவுக் கவ்வளவு அனுப்பப்படும் மின்சார அலையின் வேகம் அல்லது பலம், அதிகமாக விருக்கும். டாக்டர் ஜாகோப்சன் தமது ஆராய்ச்சி வேலையில் நுட்பக் கருவியை உடலில் சம்பந்தப்படுத்தி, ஆழ்ந்த தூக்கத்தில் அசைவற்றிருக்கிற போதும் அளந்துபார்த்திருக்கிறார்.

"உடல் தத்துவங்களை யெல்லாம் விரிவுபடுத்தும் யோகப் பயிற்சியின்போது அவர் ஒருபோதும் முயன்றதில்லை யென்று உங்களுக்குத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். விரிவுபடுத்தும் முறை யோகப் பயிற்சியிலும், அல்லது வேறு வகையிலும் எல்லாம் ஒரே மாதிரிதான். கைவல்யதாமா என்பவர் மேலே சொன்ன முறையை யன்றி மற்றும் பல முறைகளை அதிசயிக்கத்தக்கவிதமாய், உடலிற் குறைந்த சக்தி தத்துவங்களைச் சரிசெய்ய ஆராய்ச்சியிலும், யோகப் பயிற்சியிலும் முயன்று பார்க்கக் கவலையுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார். நாம் நமக்கு அநுகூலமான சந்தர்ப்பங்களை நோக்கிக் கொண்டு பொறுமையுடன் இருக்கின்றோம். இதற்கிடையில் நான் மேலை நாட்டு ஆராய்ச்சியுடன் நமது சொந்த அனுபவத்தையும் சேர்த்து இரண்டும் ஒருதன்மையன வென்று கூறுகிறேன். யோகப் பயிற்சியின் மூலம் தற்கால வாழ்க்கை முறையிலுள்ள மக்களின் உடற்கூறுகளின் குறைகளை அடியுடன் போக்கிவிட முடியும் என்று நான் முழுதும் திருப்தியுறுகின்றேன்.

"பிராணாயாமம் என்று சொல்லப்படும் மற்றொரு பயிற்சியும் யோகத்திலுள்ளது. நாங்களும் பிராணாயாமப் பயிற்சியில் முயன்று, எங்களுடைய ஆராய்ச்சிக் கூடத்தில் அதைப் பற்றிக் கொஞ்சம் பரிசீலனை செய்திருக்கின்றோம். இவ்விதமான எங்கள் பரிசீலனையின் மூலம், பிராணாயாமம் மனிதவுடல் பலவீனத்தைப் போக்குவதன்றி, உடலின் ஒவ்வொரு உறுப்பினையும் முன்னேற்றமடையச் செய்யும் திறமுடையதென்னும் முடிவுக்கு நாங்கள் வந்திருக்கிறோம்.

## தினசரி வாழ்வில் நமது ஒழுக்கம்

"மக்கள் உடலிலுள்ள குறைகளை உடலை விரிவுபடுத்தும் பயிற்சியாலும் பிராணாயாமப் பயிற்சியாலும் மாத்திரமே போக்கமுடியும் என்று நான் இங்கு உங்களுக்கு நினைப்பூட்ட வேண்டும். தினசரி வாழ்வில் நமது ஒழுக்கத்தின்மூலம் இதயத்தைப் புனிதமாக வைத்துக்கொள்ளவேண்டும். ஏனெனில் தீய இதயமே புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டு வரும் வசதிகளைத் தீய வழிகளில் பயன்படுத்துவதாயும், நமது உடலாகிய யந்திரத்தை அழிப்பதில் பொறுப்புடையதாயும் இருத்தலால், அன்பு, வாய்மை, பிரமச்சரியம், புலனடக்கம், மனவடக்கம், அடங்கிய நடை, உள்ளத்தில் திருப்தி ஆகிய இவை போன்ற அரிய பத்து ஒழுக்கங்களை யோகம் நமக்கு அளித்து ஒழுகும்படி



கட்டளையிடுகிறது. இவ்வொழுக்கங்களை நவீன வாழ்க்கை முறை புறக்கணிப்பதால், எவ்வளவு கொடுமைகளைத் தீய வழியால் பெறமுடியுமோ அவ்வளவையும் தற்கால வாழ்க்கை முறையினர் பெற்றுவருகின்றனர். பிரமச்சரியம் ஒழுகாததால் நேரிடும் கேடுகளை யான் சுருக்கக் கூறுவேன்.

"நம்பத்தக்க இடத்திலிருந்து பின்வரும் செய்திகள் எனக்குக் கிடைத்துள்ளன. எழுநூற்றைம்பது ஜர்மன் பாடசாலைப் பெண்கள் வைத்திய முறையில் பரிட்சிக்கப்பட்டனர். இவர்களில் 100-க்கு 45 வீதம் துன்மார்க்க நோயால் துன்புறுகின்றவராயும், கருவுற்றிருப்பவராயும் இருப்பது கண்டுபிடிக்க நேர்ந்தது. இதில் உள்ள ஆபாசம் யாதெனில் அப்பள்ளிப் பெண்கள் தங்கள் நடத்தைக்குச் சிறிதும் நாணுமையேயாகும். அப்பெண்கள் ஊக்ககரமாகத் தெரிவித்தது யாதெனில் தங்களைப் பற்றி தாங்களே கவலையெடுத்துக் கொள்ளுவதாயும், இந்த அசம்பாவிதமான நிலைமையிலிருந்து தங்களை மீட்க, நோயைத் தடுப்பதாகச் சொல்லும் சிறு பையன்களையே நம்பி வற்புறுத்துவதாகவும் தெரிவித்தனர். பன்னிரண்டு இளம் பெண்கள் தம்மை, தம்மினும் சில ஆண்டுகளே மூத்துள்ள பையன்களிடமே முழுதும் ஒப்படைத்துவிட்டிருக்கின்றனர். இதைப் பற்றிய விளக்கமான செய்திகள் டாக்டர். ஓல்ஜிஎவி எழுதிய "A Message to the Neurotic World" என்னும் புத்தகத்தில் குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

## பெண்களின் அகால மரணம்

"பள்ளியில் ஒழுக்கம் அனுசரியாததால் இயல்பாக வரவிருக்கும் மகத்தான தீமையை ஜெர்மன் பள்ளிப் பெண்களின் பிற்கால வாழ்வில் வெட்ட வெளிச்சமாகக் காணலாம். டாக்டர். கெர் என்பார் தாம் எழுதியுள்ள "பெண்கள் மரணமும் பலக் குறைவும்" என்ற புத்தகத்தில், ஜெர்மனியில் ஆண்டொன்றுக்கு ஐந்து லட்சம் முதல், பத்து லட்சம் கருச் சிதைவுகள் தீய வகையில் செய்யப்படுவதாக எழுதுகின்றார்.

"இப்புள்ளி விவரங்களையும், அவைகளின் உண்மைகளையும் பற்றி நான் எவ்வித அபிப்பிராயமும் வெளியிடவேண்டியதில்லை. தீய வொழுக்கமே மக்களை அழிவுக்கு இழுத்துப்போவது வெள்ளிடைமலை. மற்ற நாடுகளின் மூலம் நாம் பெற்ற அனுபவத்தைக் கொண்டு யோகத்தின் பகுதியாகிய உயர் ஒழுக்கத்தை ஓம்புவோம். இவ்வொழுக்கங்களால் நம் இதயத்தைப் புனிதமாக்கி, அழிந்துகொண்டுள்ள உடல் நிலையையும் மீட்போம்.

"நான் எனது உபன்னியாசத்தை முடிக்குமுன் மேலை நாட்டு வாழ்வில் மயங்கி, குருட்டுத்தனமாகப் பின்பற்றும் நம் இந்தியர்கள் அதை விட்டுச் சிறிது சிந்திக்கட்டும் என்று கூறுகிறேன். அங்ஙனம் சிந்தித்தால் மேலை நாட்டாரிடம் என்னென்ன உயர் குணங்கள் உளவோ அவற்றை நாம் கொண்டு அதோடு, நமது மூதாதையர்களிடமிருந்து நமது இந்தியா உரிமை பெற்று அனுபவித்துவரும் நமது உயர்ந்த நாகரிகத்தையும் ஒழுகி வாழ்ந்தால்தான் நமது எதிர்கால வாழ்வில் இன்பம் பெருகும் என்பதை உணர்வர். நாம் இங்ஙனம் செய்யின் நமக்கே நாம் கடமை செய்து கொள்வதுடன் மக்கள் உலகிற்கும் மகத்தான பணி செய்தவர்களாவோம்."




# ஔவையார்

(ஸ்ரீமதி. பண்டிதை-அசலாம்பிகை அம்மையார்.)

இனி "சேரிட மறிந்துசேர்" என்பது. இது "உனக்கு நன்மை தருவதாகிய இடம் எதுவோ அதை யறிந்து சேர்ந்து வாழ் வாயாக" என்று அறிவுறுத்துவதாகிறது. எத்தகைய அறிவும் ஆற்றலும் உடையவர்களேயாயினும் தாம் சேரும் இடம் குற்றமற்றதாயிருப்பது அவர்க் குப் பெருநலம் செய்வதாகும். அவ்வாறு கொள்ளா தொழியின் அவர்தம் அறிவும் ஆற்றலும் தருணத்தில் பயன்தரா தொழியும். உதாரணமாக மகா பாரதத்தில்,

"பெண்மைக்கிரதி யெனவந்த பெண்
ணாமுதே பேருலகில்
உண்மைக் கிவனே வலிக்கிவனே
உறவுக் கிவனே உரைக்கிவனே
திண்மைக் கிவனே நெறிக்கிவனே
தேசுக் கிவனே சிலைக்கிவனே
வண்மைக் கிவனே கன்னன் எனு
மன்னன் கண்டாய்"

எனச் சிறப்பித்துக் கூறப்பட்ட அங்க தேசாதிபனும் தான் சேர்ந்த துன் மதி யுடையவர்களான துரியோதனாதியரின் கூட்டுறவால் வாழ்விழந்து இறுதியில் தனது பிறப்பும் உணர்ந்து அதன் பயனாகத் தன் தம்பியர்களிடம் இரக்கம் அன்பு இவைகள் உடையவனாகி அதனை வெளியிட முடியாத நிலைமையில் கடமைக்காக விஜயனை எதிர்த்துப் போர்புரிந்து சந்துஷ்டி யில்லாமலே போரில் இறந்துபட்டான். வியாஸ பாரதத்தினால் கர்னன் தனது பிறப் பினை யுணர்ந்த பிறகு பாண்டவர்களிடம் இருந்த துவேஷமாறி அதற்கு முன் அவர்களை இழித்துப் பேசி வருத்திய செயல்களுக்கு வருந்தினான் என் பதும், போரின் இடையில் துணைவனான சுயோதனனிடம் பாண்டவரின் விஜய பராக்ரமத்தையும் கிருஷ்ண பகவானின் (தெய்வீக சகாயத்தின்) பெருமையையும் பன்முறை எடுத்துக் காட்டி துரியோதனன் கோபத்தையும் பொருட் படுத்தாமல் புகழ்ந்திருக்கின்றான் என்பதும் விளங்கும். இவ்வித மனமாற்றத்தில் அவனுக்கு சந்துஷ்டி எவ்விதம் இருக்கும் என்பதை நாம்



ஊகித்தல் கஷ்டமன்று. தகாத சேர்க்கையின் பயனே இதுவென்று சொல்லல் வேண்டும்.

இதுபோலவே அரக்கர் குலத்தில் பிறந்த விபீஷணாழ்வார், இந்திர சித்தை நோக்கி,

"அறந்துணையா வதல்லால்
அருநர கமைய நல்கு
மறந்துணையாக மாயாப் பழியொடும்
வாழ மாட்டேன்
துறந்திலேன் மெய்ம்மை எய்தும்
பொய்ம்மையே துறப்பதல்லால்
பிறந்திலேன் இலங்கை வேந்தன்
பின்னவன் பிழைத்த போதே"

என்று தீமையினின்றும் நீங்கிச் சுற்றம் என்னும் தொடர்பினையும் அறுத்து உயிர்க்குறுதி பயக்கும் உத்தமனாய் இராம பிரானின் துணைவனாகி உய்ந்து புகழ் பெற்றான். இராமன் தனக்கு அபயதானம் அளித்ததைக் கேட்ட போதும் தனது உடன் பிறந்தார்களது இழிவையும் பழியையும் கருதி,

"நஞ்செனக் கருதினானோ தாழ்சடைக்
கடவுள் உண்ட
நஞ்செனச் சிறந்தேனன்றோ
நாயக னருளினாலே"

என வியப்புற்றுப் பாராட்டி மகிழ்ந்திருக்கின்றார். சேரும் இடத்தின் பெருமையால் வரும் பயனுக்கு இதைவிட வேறு சான்றும் வேண்டுவ தன்று. சேரும் துணைவலிக் கேற்றவண்ணமே சிறுமையும் பெருமையும் சேர்வது திண்ணம்.

தூய்மையாகிய நீர் தான் வீழும் இடத்திற்குத் தக்கபடி இயல்பு மாறுவ தென்பதை எவருமறிந்ததே.

திரிசங்கு வென்னும் சூரிய குலத்தரசன் தனது குலகுருவாகிய வசிஷ்டரால் சண்டாளனாகச் சபிக்கப்பட்டும் தவசிரேஷ்டராகிய விசுவாமித் திரரை அடுத்ததினால் அவர் தவமகிமையினால் அமைக்கப்பட்ட தனியுலகில் இன்றும் புகழ்பட வசிக்கின்றான் என்பது புராணகதை. திரிசங்கு சுவர்க் கம் என்றும் வழங்கும் உலக வழக்கே இதற்கு நற்சான்றாகும். ஆதலின் எவ ரும் ஆராய்ந்து நல்லாரை நாடிச் சென்றடைதல் வேண்டுமென்பது தெளிவு.

சர்ப்பங்களுக்கு கெருடன் நிரந்தரமான பகையுடையது. கெருட த்வனி கேட்டாலே சர்ப்பங்கள் நடுங்கிச் சோரும். சர்ப்பவிஷம் இறங்கவேண்டி ஜெபிப்பவரிற் பலர் கெருட உபாஸனா மந்திரத்தினால் குணம் உண்டு பண்ணுவர். அன்றிக் கெருடவுபாஸனை செய்பவர்களைப் பாம்பு கடிப்ப தரிது. அப்படிக் கடித்தாலும் பாம்பு உடனே இறக்கும். கடிக்கப் பட்டவர் களுக்கும் விஷம் ஏறுவதில்லை. இத்தகைய வன்மையுடைய கெருடாழ்வாரை சிவபெருமான் திருமேனியில் இடம்பெற்ற சர்ப்பங்கள் ஒருகால் சந்திக்க

நேர்ந்தபோது "என் கருடா சுகமா? என்று நிர்ப்பயமாக க்ஷேம விசாரணை செய்ததாகவும், கருடாழ்வார் அச்சர்ப்பங்கள் சேர்ந்துள்ள இடத்தின் பெருமையை நோக்கி இருக்கவேண்டிய இடத்தில் இருந்தால் சுகந்தான் என மறுமொழி கூறினர் என்றும் ஒரு உதாரணக் கதை நம் நாட்டில் வழங்கி வருகிறது. அக்கதையும் சேரிடம் அறிந்துசேர் என்னும் ஒளவையார் அருளிய நீதிக்கு ஏற்ற உதாரணமாகும்.

"சைசெனத் திரியேல்" என்பது அடுத்த தொடர். இதற்கு "நல்லோர் உன்னை சீ என்று இகழும்படி நீ நடவாதே" என்று பொருள். நல்லொழுக்கமுடைய பெரியோர்கள் இழிந்த செய்கையை யுடையவர்களைக் கண்டால் சீ என்று இகழ்வது இயல்பு. மனிதப் பிறவி கிடைத்திற் கரியது என்பதை எவரும் அறிந்ததொன்று. மதத்திற் சிறந்த யானையும் மிருகேந்திரன் என்னும் பலத்திற் சிறந்த சிங்கமும் கூட சரீர வன்மையிற் குறைந்துள்ள மனிதனுக்கு வசப்பட்டு அடங்கி நடக்கின்றன. இஃதொன்றே பகுத்தறிவினையுடைய மனிதப் பிறவியின் சிறப்புக்கு ஏற்ற சான்றாகும். இத்தகைய மனிதன் நல்லோர் இகழும்படியான செய்கைகளைச் செய்தற்கு நாணப் படாவிட்டால் அவனை விலங்கென்று தானே மதிக்கவேண்டும்? விலங்குகளுக்குத் தான் பிறர் முன் ஒழுகவேண்டிய முறை தெரியாது. நாணம் இன்னதென்பதும் அறிய இயலாது. அவைபோல் இம்மனிதனும் நடக்கத் துணிந்தால் இகழ்ச்சி எய்தல் இயல்பன்றோ? இது குறித்தே கம்ப நாட்டாழ்வார் வாலியை நோக்கி இராமன்,

"தக்கவின்ன தகாதன இன்னவென்
றொக்க வுன்னலராயின் உயர்ந்துள
மக்களும் விலங்கே மனுவின்னெறி
புக்கவேல் அவ்விலங்கும் புத்தேளிரே"

என விளக்கிக் கூறியதாகக் காட்டியுள்ளார். மனிதரிலும் சிறந்தவர் தேவர். அவர்கட்குப் பதி இந்திரன். அந்த இந்திரப்பட்டம் பெற்ற நகுஷன் இகழ்ச்சிக்குரிய காரியங்களில் மனதைச் செலுத்தியதால் ஒரே கணத்தில் மலைப் பாம்பானான். மதங்கொண்ட யானைகளுக் கரசாகிய கஜேந்திரன் ஞானியர் அடையும் அழியாப் பதவியைப் பெற்றான். ஆதலினால் பிறர் பழிக்கும் இழிவான செய்கைகளைச் செய்து இகழ்ச்சிக்கு ஆளாகாதே என்பது கருத்து. சீயென்று பிறர் இகழும்படி நடவாதே என்று ஒளவையார் கூறாமல் "திரியேல்" என்று வகுக்கின்றார். இதன் பொருள் பிறரால் இகழ்ந்து ஒதுக்கப் பட்டவர்களுக்கு எவ்விடமும் நிலையற்றதாகும். கண்ட கண்ட இடங்களிலும் திரிந்து அலைந்து அல்லல் உழக்க வேண்டுவதுதான் விதியாகும் என்பதும் திரியேல் என்ற மொழியின் குறிப்பாகவும் விளங்குகின்றது.

மானம் படவரின் வாழாமை முன்னினிதே. என்ற அறமொழிப்படி மானம் படுவதாகிய இகழ்ச்சியைச் சகித்துக்கொண்டு உயிர் வாழ்வதற்கு உத்தமர் உடன்படமாட்டார்.

"மானமும் உயிரும் ஒருங்கு நில்லாத வழி
உயிர் தன்னையே விடுத்துத்
தானுறு பொருளாய் மானமே கொளும்"

என்பது சிவப்பிரகாச சுவாமிகளின் திருவாக்காதும். மைந்தர்கள் அற்ப



ஆசைகளுக்கு அடிமைப்பட்டு இகழ்வான செய்கைகளில் ஈடுபட்டு அலைந்து கெடாமல் இருத்தல்வேண்டும் என்னும் கருணையினால் நமது பெருமாட்டியார் சைசெனத் திரியேல் என்றருளினர். காலஞ்சென்ற இன்பச் செந்தமிழ்க் கவிஞர்களின் இலக்கியப் புலவராகிய முன்சீபு வேதநாயகம் பிள்ளையவர்களும் இலேசாக அவர் திறமைக் கேற்ப,

"பூச்சியைப் பிடித்துக் கொல்லாதே—உன்றன்
ஆச்சி சொன்னாலும் அபத்தம் சொல்லாதே"

என்று நயம்படப் புகட்டியுள்ளார்.

இனி "சொற் சோர்வுபடேல்" என்பது. நீ பிறரோடு பேசும்போது மறதிபடப் பேசாதே என்று உணர்த்தியதாயிற்று.

"சொல்ல வேண்டுவதை மறவாமற் சொல்" என்பதால் மறதியினால் வரும் கெடுதி உணர்த்தப்படுகிறது. மறதி உண்மையில் மறலிக்கே சமானம். மாணாக்கர்கள் ஊக்கம் கெட்டுக் கீழ் நிலைக்கு வருவது மறதியினாலேயே என்பதை எடுத்து விவரிக்கவேண்டியதில்லை. மறதி எல்லா நலங்களையும் இழக்கச் செய்யும். சிறந்த நாவன்மை யுடையோர்களுக்கும் இம்மறதியே வன்மையுள்ள பகையாகும். நம் தமிழ்நாட்டில் "மறந்து செத்தேன் உயிரே வா" என்றால் வருமா? என்று ஒரு பழமொழியும் உண்டு. மறதியினால் வஞ்சிக்கப் பட்டு வருந்துவோர் பலப் பலர் உண்டு. இதுபற்றியே திருக்குறளாசிரியரும்,

"பொச்சாப்புக் கொல்லும் புகழை யறிவினை
நிச்ச நிரப்புக் கொன்றாங்கு"

நித்திய தரித்திரம் அறிவைக் கெடுப்பதுபோல மறதிபுகழைக் கெடுக்குமென்றார். இம்மறதி என்னும் குணம் மக்களின் அறிவாகிய சூரியனை மறைக்கும் காருண்ட மேகத்திற்குச் சமமாகும். மந்த குணத்தினாலும் செல்வப் பெருக்கு இன்பப் பெருக்கு என்னும் இரண்டு காரணங்களைத் துணைகொண்டும் இம்மறதி முகிழ்ப்பதாகும். இயல்பாக மறக்கும் தன்மை யுடையவர்களும் தமது மறதியை மாற்ற ஒவ்வொரு தருணங்களிலும் தெரிந்து கொண்ட விஷயங்களைப் பன்முறையும் சிந்திக்கப் பழகி வருவார்களானால் அம்மறதியே மறதியடையும் என்பதுறுதி.

மந்தகுண முதிர்ச்சியையுடைய கிளிகளும் பயின்ற மொழிகளை இடைவிடாது கூறும் சிறந்த நற்பழக்கத்தால் மறவாது பேசும் திறமை பெறுகின்றன. இளமையில் பெறும் கல்விச் செல்வத்தை வளரவிடாமல் குறையாடுவது இம்மறதியே என்னில் மக்களின் பிற்காலத்திய எல்லா வாழ்வுகளுக்கும் இக்குணமே பெரும் சத்துருவென்று கூறவும் வேண்டுமோ? கற்றவைகளை மறக்கக் கூடுமாகில் அத்தகையார் கேட்டவைகளையும் மறப்பர் என்பது கூறாமலே விளங்கும். இதன் கொடுமையைப் பின்னும் "இறந்த வெகுளி யிற்றீதே. சிறந்த, உவகை மகிழ்ச்சியிற் சோர்வு' என்ற விளக்கினார் தெய்வப் புலவர். சந்திர குலதிலகனாகியும் பாண்டவரின் தந்தையாகியும் இருந்த பாண்டு பூபதி. கிந்தமன் என்னும் முனிவரால் தனக் கேற்பட்டிருந்த சாபத்தையு மறந்து இளைய மனைவியாகிய மாத்திரா தேவியுடன் கூடி அக்கணமே உயிரிழந்தான் என்னும் மகாபாரதக் கதையைவிட வேறு உதாரணம் வேண்டுமோ?

சுக்கிரீவன் தன் சிறுமையை யகற்றி வாலியை வதம் செய்து அரசுரிமையையும் நல்கிய பேருபகாரியாகிய இராமபிரானின் காரியத்தில் அசட்டை

யாக இருந்த செல்வத்தாலும் இன்ப நுகர்ச்சியாலும் ஏற்பட்ட மறதி யாலன்றோ? இஃதன்றியும்,

பரசுராமரின் தாயாகிய ரேணுகா தேவியும் விசுவாமித்திரரின் தாயும் சகோதரிகள். இருவருக்கும் சந்ததியுண்டாகாமையால் ஜமதக்கினி பகவா னிடம் குறையிரந்தனர். அவர் முறையே பிராமண பத்தினியாகிய (தன் மனைவி) ரேணுகையை அரசமரத்தையும் அரசபத்தினியாகிய காதியின் மனைவி (தனது மைத்துனி)யை வேப்பமரத்தையும் வலம் வந்து பூசிக்கும்படி உணர்த்தினர். அவ்வாறே இரண்டு மாதர்களும் மரங்களை வலம் வந்து விர தம் இழைத்து முனிவர் அருளியபடி கருவுற்று மகப்பெற்றனர். ஆனால் மாதர் இருவரும் மறதியினால் அரசபத்தினி அரசமரத்தையும் முனிபத்தினி வேப்பமரத்தையும் மாறி வலம் வந்ததினால், முறையே மாறுபட்ட குணம் செய்கைகளை உடையவர்களாயினர். அதாவது முனி புத்திரனாகிய பரசு ராமர் வில்லும் தாங்கிப் போர்த்தொழிலில் ஈடுபட்டு க்ஷத்திரிய குணங் களையே பெற்றுச் சிறந்தார்.

அரசகுமாரனாகிய கவுசிகன் அரசபோகத்தை அற்பமும் மதியாமற் றுறந்து சடைமுடி தாங்கிக் கடுந்தவம் புரிந்து இருடியானார். ராஜரிஷி என்ற சிறப்பினால் திருப்தி யடையாமல் வசிட்டர் வாக்கினால் தன்னைப் பிரம்ம ரிஷி (பிராமணரிஷி) என்று அழைக்கவேண்டுமெனவும் பேராசை கொண் டார். மறதியினால் ஏற்பட்ட மாற்றமுடியாத விபரீதமான பயன்களை இச் சரிதத்தால் நன்குணரலாம். தினமும் மேசை வீடுகளில் காலம் காட்டுவதற் காக வாங்கி அமைத்துக் கொள்ளும் கடிகாரயந்திரங்களில் குறித்த மணிப் படி மறவாமல் சாவி கொடுத்தால் சரியான காலங்களைக் காட்டி வருவதோடு அதிக நாள் பழுதுபடாமல் பயன்பட்டும் வரும். ஒழுங்காக சாவி கொடுக்க மறந்து நினைவு வந்த போழ்து சாவி கொடுத்து வருவோமாயின் காலம் பிறழ் ந்து காட்டுவதுடன் அதிக நாள் கெடாமலிருக்க முடியாததாகும். கடிகாரப் பிழையினால் ஏற்படும் காரியக் கேடுகளும் பல. பாடசாலைக்கும் உத்தியோக சாலைக்கும், புகைவண்டி நிலையத்திற்கும் செல்லவேண்டிய கடமைகளை யுடையோருக்கு கடிகாரப் பிழையினால் வரும் துன்பங்களை எண்ணி விவரிக்க வேண்டுவதில்லை. கடிகாரப் பிழை மறதியினால் விளைவதென்பதை மட் டில் ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டுவதே எமது கடமை.

சொற்சோர்வு பட்டதற்கு உதாரணம் பகருவதாகிய சூரியகுல மன்னவனாகிய துஷ்யந்தன் தவறே காளிதாஸ மகாகவியால் இயற்றப்பட்ட சாகுந்தல நாடகமாகும். கும்பகருணன் அகோரமான தவம் செய்து பிரம்மதேவர் வேண் டிய வரங்களைக் கேள் என்று கூறியபோது நித்தியத்துவம் வேண்டும் எனக் கேட்க எண்ணியிருந்தும் தவறுதலாக நித்திரைத்துவம் வேண்டுமெனக் கேட்டதாகவும் அதன் பயனாகவே இறக்கு மளவும் தூக்கத்திலேயே பெரும் பாகத்தைக் கழித்தான் எனவும் கூறும் சரிதமும் உலக மறிந்ததே. இவ்வாறு பலப்பல சான்றுகள் கூறிக்கொண்டே போகலாம். ஆகையால் ஒவ்வொரு வரும் சொல்வதிற் சோர்வுபடாமல் இருந்து வரப்பழகுதல் வேண்டும்,

இனி "சோம்பித் திரியேல்" என்பதற்கு, இதற்கு நீ செய்யவேண் டிய முயற்சியைச் செய்யாமல் சோம்பல் கொண்டு வீணாக அலையாதே என் பது பொருள்.



முயற்சியில்லாமையே சோம்பல் எழுவதற்குக் காரணம். சோம்பல் தரித்திர தேவதையின் வருகைக் கறிகுறியாகும். "முயற்சியுடையார் இகழ்ச்சி யடையார்" எனவும் "முயற்சி திருவினையாக்கும் முயற்றின்மை இன்மை புகுத்திவிடும்" எனவும் வரும் முதுக் குறளால் [illegible] உணரப் படுகின்றது. சோம்பல் தாமத குணத்தால் வருவது. குணமூன்றனுள் தாமத குணமே அதமமானது. அதற்கிரையான அதிர்ஷ்டஹீனர்களே சோம்பல் உடையோராவர்;

"கெடுநீர் மறவி மடி துயில் நான்கும்
கெடுநீரார் காமக்கலன்"

என்றருளினர் வள்ளுவரும்.

கேடுற்று அழிந்துபடும் விதியுடையவர்கட்கு தாமதம், மறதி, சோம் பல், தூக்கம் இந்த நான்கும் அதற்கு ஏற்ற சாதனங்களாகும் என்றறியத் தக்க தாம். காமக்கலன் என்பது பொருளைப் பெருக்கிக் கோடலுக்கு உபாயமாகக் கருதி மக்கள் விரும்பி ஏறும் கப்பல் என்பது பொருள். அத்தகைய கப்பல் கடலிற் கவிழ்ந்தால் அதில் ஏறினவன் கதி என்னவோ அதுவே மேலே சுட் டிய தாமதம், மறதி, சோம்பல், தூக்கம் இந்த நான்கு குணங்களையுடையவர் களின் முடிவும் வாழ்வும் என்று அறிதல்வேண்டும். இந்நான்கு குணங் களும் ஒன்றிற்கு மற்றொன்று மிக்க தொடர்புடையவைகள். ஒரு குணம் உள் ளதேல் ஏனைய குணங்களும் தோழமை கொண்டாடிக் குலவி நிற்கும் என்பது அநுபவ உண்மை.

விரைவிற் செய்து முடிக்கவேண்டிய ஒரு காரியத்தைத் தாமதமாகச் செய்யும் ஒருவருக்கு அங்ஙனம் செய்விக்கும் கருவி சோம்பலே என்பது தெளிவு. சோம்பல் உள்ள இடமே மறதிக்குச் சொந்தம். மறதியுடைய மந்தமதியினர்கட்கு நித்திரையு மதிகம் என்பது கூர்ந்து நோக்குநர்க்குப் புலனாகும். ஆதல்பற்றியே நான்கு குணங்களையும் ஒரே குறட்பாவில் பிரியா மற் பிணித்து ஆண்டிருப்பதாகவும் கொள்வது பிழையாகாது. சோம்பல் உடையவர்கள் தாம் கெடுவதோடு தங்கள் குடியும் கெட்டு குற்றமும் பெரு கும் நிலையை யடைகுவர் என்பது மறுக்கமுடியாத உண்மை. சமீபகாலச் செந்தமிழ்க் கவியாகிய வேதநாயகம் பிள்ளை என்னும் சதுரர் விடிந்து துயில் வோர்களைப்பற்றி அவர்பாடிய நீதிநூலில்,

"வானுலாம் அருணன் என்றும்
மக்கள் ஆயுளின் கணக்கன்
தான் எழுமுன் எழாரை சத்திரக்
காத்தரத் தட்டும்
ஏன் என எழார் வாழ்நாளை எண்
குறைத் தெழுதிக் கொள்வான்
ஆனது கண்டு காலன் அவரிடம்
அணுகுவானே"

என்று வெகு அழகாகக் கூறியுள்ளார்.

ஒருவர் ஒருவரைப் பார்த்து அற்பாயுள் உனக்கென்றால் மிகக் கடுங் கோபம் வரும். ஆனால் நமது பிள்ளையவர்கள் விடிந்து துயில்வோர்களெல்லாம் அற்பாயுள் உடையோர் சீக்கிரத்தில் மரிப்போர் என்று காரணங்காட்டி உறுதிப் படுத்துகின்றார். இந்தக் கவி சாதுரியமென்னும் தங்கமுலாம் பூசப்பெற்றிருப்பதால் நெடுந்துயில் நேயரும் கோபியாது நகைக்கின்றனர். இதன் பொருள் யாதெனில், ஆகாயத்தில் நாளைக்கணக்கிடும் தினகரனாகிய (சூரியன்) கணக்கன் தான் உதயம் செய்வதற்கு முன்பாகவே துயிலுணர்ந்து எழுந்திராமல் படுக்கையில் இருப்பவர்களைத் தயவினால் தனது ஆயிரம் கைகளாகிற கிரணங்களினாலும் சாளரங்கள் வழியாலும் பல கணிகள் வாயிலாலும் மற்றுமுள்ள எல்லா நுழை விடங்களாலும் நீட்டிப் பரிசித்துத் தட்டி எழுப்புகின்றானாம். எழுப்பிய வுடனாவது துணுக்குற்று என், என்று விழித்தெழுவோரை மன்னிக்கின்றானாம். அப்பொழுதும் கண் விழியாமல் புரண்டுருண்டு துயில்வோர்களின் ஆயுளாகிய புள்ளியில் தினம் தினமும் குறிப்பிட்ட விதிதப்படி குறைத்து எழுதிக் கொள்ளுவானாம். கடைசியாகச் சூரிய பகவானால் கழித்த மிச்சமுள்ள நிகரத்தையே கைக்கொண்டு காலன் என்னும் இயமன் அவர் தம் ஆயுளைக்கொண்டு செல்ல வருவானாம். சூரியோதய மாகியும் விழித் தெழாதவர்களுக்கு ஆயுள் சுருங்கும் என்பது ஆயுள் வேதநூற் புலவர்களின் துணிவும் சாத்திரக் கருத்தும் ஆகும். ஆயினும் இந்நீதி நூலாசிரியர் நீதிபதியாய் இருந்து கடனாற்றியவர் ஆதலினால் அதற்குரிய காரணத்தை எவரும் வாதித்து மறுக்க முடியாதபடி வற்புறுத்தியுள்ளார்.

நெடுந்துயில் நேயர்களிற் பலர் எழுப்புவோர்களிடையுள்ள தாட்சண்யத்தாலோ பயத்தாலோ விழித்தெழ முயன்றாலும் சோம்பலாகிய தோழன் எழவிடாமல் தன்னால் இயன்ற மட்டிலும் தடுத்து நிற்பதில் சிறிதும் சோம்பல் எய்துவதில்லை. இது அநுபவ முடையார்க்கு மிகையெனப்படாது. கும்பகருணனும் சோம்பல் நித்திரை யற்றவனாக இருக்க நேர்ந்தால் அரக்கர் வதம் நிறைவேறாதென்றே அமரர்கள் வரம் கோரும்போதே சூழ்ச்சி செய்தார்கள் என்னில் அழிவுக்குக் குறுக்கான சமீபவழி சோம்பல் முதலாகிய குணங்களே என்பதை ஏற்றுக்கொள்ளத் தடையுண்டோ? இலக்குமன் பதினான்கு வருடங்களும் நித்திரை யில்லாதிருந்தான் என்பதன் கருத்து வெற்றியும் அதற்குரிய வன்மையும் நீண்ட ஆயுளும் சோம்பல் நித்திரை யற்றவர்களிடம் கால் கொள்ளும் என்னு முண்மையை விளக்கிய உதாரணங்களாகக் கொள்வது அறிவுடைமையாகும்.

இனி சோம்பித்திரியேல் என்ற நீதித் தொடரில் இறுதியில் திரியேல் என்ற முடிபு சையெனத் திரியேல் என்ற தொடரைப் போலவே சோம்பல் உடையவர்கள் ஜீவனோபாயத்திற்குரிய செய்தொழிலும் கிடைக்கப் பெறாராய் உண்ண உணவும் உடுக்க உடையும் வசிக்க இடமும் கூட உரிமையின் இல்லாராய் அல்லற்பட்டு அலைந்து வருந்தும் நிலையைப் பெறுவர் என்னும் குறிப்பை உணர்த்துவதாகும். ஆதலின் இளைஞர்கள் சோம்பலுக் கிடந் தராதவர்களாய் இருக்கப் பழகுதல் வேண்டும்.

---

# "மணிமேகலை" ஆராய்ச்சி

ஸ்ரீ R. V. இராமஸ்வாமி B. A., B. L. வக்கீல், சேலம்.

(Rights Reserved.)

## (சோழநாடு)

முற்காலத்தில் சோழநாடு எவ்வமயத்தும் நீர்வளம் பெற்று மிக வும் செழிப்புற் றிருந்ததால், புலவர்கள் அதனை நீர்நாடு, சென்னிநாடு, பொன்னிநாடு, புனல்நாடு எனச் சிறப்பித்துப் புகழ்ந்திடுவாராயினர். 'சோழநாடு சோறுடைத்து' என்ற பழமொழி வெகுகாலமாக வழங்கி வருதல் காண்க. கவித்திலகர் கம்பர் பெருமானும், அச்செழித்த நாட்டைத் "துறக்க முற்றார் மனமென்னத் துறைகெழு நீர்ச்சோணாடு" என, வீட்டின்பப் பேற்றை யடைந்தாரின் களங்கமற்ற மனம்போல, நற்றுறைகளிலே விளங்குகின்ற தெய்வத் திருநதியின் நீருடைய சோழவளநாடென்று கூறா நிற்பாராயினர்.

சோழநாட்டின் எல்லை,

"கடல் கிழக்குத் தெற்குக்கரை பொருவெள்ளாறு
குடதிசையிற் கோட்டக்கரையாம்—வடதிசையி
லேணாட்டுப் பெண்ணை யிருபத்து நாற்காதம்
சோணாட்டுக் கெல்லையெனச் சொல்."

என்னும் வெண்பாவால் விளங்கும். காவிரியின் வடபாலமைந்துள்ள இந்நாடு, புனல்நாடு, அருவநாடு, மலைநாடு, சீதநாடு, என்ற நான்கு பிரிவினையுடையதாக இருந்ததென்பதும்; தஞ்சை திருச்சி ஜில்லாக்கள் புனல்நாடு என்பதும்; தற்காலத்தில் தென்னாற்காடு எனப்படுவது (பெண்ணாறுக்கும் பாலாறுக்கும் இடைபட்ட நாடு) அருவநாடு என்பதும்; (மலையனென்ற மலையவர் தலைவனது கீழ்ப்பட்டிருந்த மலைநாடுகள் சேர்ந்த) தற்காலத்திய வடஆற்காடு ஜில்லா மலைநாடென்பதும்; கோயம்பத்தூர், நீலகிரி ஜில்லாக்களைக் கொண்ட குளிர்ந்தநாடு சீதநாடென்பதும் நூற்களில் தெரியவருகின்றன.

## (காவிரிப்பூம் பட்டினம்)

பலவிதங்களிலும் மேன்மையுற்றிருந்த புகாரெனும் தொன்னாடு, சோழநன்னாட்டின் தலைநகரமாக அக்காலத்தில் விளங்கியது. அதற்குக் காவிரிப் பூம்பட்டினமென்ற மற்றொரு பெயருமுண்டு. கடலோடு காவிரி கலந்திடுந் துறைமுகத்தி லிருப்பதுபற்றி இப்பெயர்பெற்றதென்பர். இதனை; "இருபாற் பெயரிய வுருகெழுமூதூர்" ரென்றும் கூறுவர். (மணி. பதிகம். 12:4; 16:39) செங்கோற்சோழர் தங்குலக்கொடியும், தானிலை திரியாத் தண்டமிழ்ப் பாவையாகிய சம்புவென்பாள்,

"என் பெயர்ப்படுத்த விவ்விரும்பெயர் மூதூர்
நின் பெயர்ப்படுத்தேன் நீ வாழியவென."

(பதிகம்), எதிர்வந்து வணங்கிய ஒங்கு நீர்ப்பாவை, காவிரியை உவந்து எதிர்கொண்டழைத்து இங்ஙனமாகக் கூறியதாக உள்ளதும் இதனை வலியுறுத்தும். இதனால் புகாருக்குச் சம்பாபதி யென்ற பெயரொன்று மிருந்ததென்பது பெறப்படும்.

'மணிமேகலை'யின் பதிகத்தில் முதல் முப்பது அடிகள் புகாரின் பழந்தன்மையைப் பாராட்டிக் கூறுகின்றன. எனினும், சிலப்பதிகாரத்தில் பூம்புகாரின் சிறப்பு விரிவாகக் கூறப்பட்டுள்ளவாறு, இந்நூலில் கூறப்படவில்லை. வெகுகாலமாகச் சோழர்களின் தலைநகரமாக இருந்த இதனது தொன்மையும் பெருமையும் விளங்குமாறு, மணிமேகலையில் பல விடங்களிலும், 'பலர் புகழ்மூதூர்' (1: 2), 'அலகை மூதூர்' (2:34), 'பொற்கொடி மூதூர்' (2:40) 'திருவிழை மூதூர்' (3: 34) 'உருகெழு மூதூர்' (4: 28), 'வியன்பெரு மூதூர்' (18: 61), ஒங்கிய மூதூர்' (20: 28), 'சிறப்பின் மூதூர்' (21: 119) என்றிவ்வாறாகக் கூறப்பட்டுள்ளன. இளங்கோவடிகளும், சிலப்பதிகாரம் மங்கல வாழ்த்துள்,

"பொதியிலாயினும் இமயமாயினும்
பதியெழு வறியாப் பழங்குடி கெழீஇய
பொதுவறு சிறப்பிற் புகாரே யாயினும்."

எனக் கூறியுள்ளதும் நோக்குக.

(தெருக்களின் சிறப்பு)

புகார், மக்களது இனிய வாழ்க்கைக்கு வேண்டிய எல்லா வசதிகளையும் குறைவின்றிக் கொண்டுள்ள மாபெரும் நகரமொன்றாக இருந்தது. சாத்தனார் இதனை, 'நெடுநகர்' (6: 29) என்றும், 'களிப்புமாண் செல்வக்காவற்பேரூர்" (7: 26) என்றும் உயர்த்திக் கூறியுள்ளனர். இப்பதியில் அகன்று விரிந்துள்ள பெருந்தெருவுகள் பல இருந்தன. (பதி. 62; 4: 38). மாடவீதிகளும் மணித்தேர் வீதிகளும் நகரை அலங்கரித்தன. (3: 85; 7: 68) சாளரங்களையுடைய மாளிகைகளும், பாந்து படுமனைகளும் அத் தெருக்களில் பல இருந்தன. (5: 46). மனிதர்கள் வருதல் போதலா லுண்டாகும் அரவம் அவ் வீதிகளி லெப்பொழுதும் ஓயா திருக்குமென்பது,

"கோவியன் வீதியுங் கொடித்தேர் வீதியும்
பீடிகைத் தெருவும் பெருங்கலக் குறுத்தாங்
கிருபாற் பெயரிய வுருகெழு மூதூ
ரொரு பாற்படாஅ தொருவழித் தங்காது
பாகும் பறையும் பருந்தின் பந்தரும்
மாதுல மக்களு மலவுற்று விளிப்ப."

(4: 37-42) என்ற அடிகள் கூறுகின்றன.

விண்ணளாவிய மாளிகைகளும், கைதேர்ந்த சிற்பிகளால் அழகுபெறச் செவ்வனே கட்டப்பட்ட கோபுரங்களும், ஓவியங்களும் அத்தெரு வெங்கணு மிருந்தனவென்பது "வம்பமாக்களைக் கொண்ட அக் கம்பலை மூதூரிலுள்ள



சுடுமணோங்கிய நெடுநிலை மனைதொறும், வெண்சுதை கொண்டு, மையறுபடிவத்து வானவர் முதலாக, எவ்வகை யுயிர்களையும் உவமையாகக் காட்டி, விளங்கும்படி, வித்தகரியற்றிய கண்கவ ரோவியங்களைக் கண்டு பலர் நின்றனர்" என்றும் (3: 125-31) "மங்குறோய் மாடமனை தொறும்புகூஉ" (5: 58) என்று மீட்டும் வந்துள்ளதாலும், தெளிவுபட அறிய இயலுகின்றன. மற்றும்,

"மகத வினைஞரு மராட்டக் கம்மரு
மவந்திக் கொல்லரும் யவனத் தச்சருந்
தண்டமிழ் வினைஞர் தம்மொடு கூடிக்
கொண்டினி தியற்றிய கண்கவர் செய்வினை."

(19: 107-10) என, அவ்வத்தேயத்தில் சிறந்திருந்த சிற்பிகளையும் பணியாளர்களையும் கொண்டு கட்டப்பட்ட மண்டபங்களையும் கொண்ட, அத்துணை சிறப்பு வாய்ந்தது இந்நகரம்.

(நகர மாக்கள்)

இப் பட்டினத்தில், உண்மைப் பொருளை உணர்த்திடும் சமய நூற்களைக் கசடறக் கற்றும், உலகியல் வழக்குகளை நலனே உணர்ந்தும், தத்தமது மதக் கோட்பாடுகளைச் செம்மையாகக் கேட்பவருணரும்படி உரைக்கவல்ல பேராற்றலைப் பெற்றவருமான சமயக்கணக்கர் பலர் வசித்து வந்தனர். தாம்பற்றி ஒழுகி நிற்கும் துறையாகிய சோதிடத்தில் நற்றேர்ச்சிபெற்ற கற்றறிந்த அமயக்கணக்கர் பலரும் அந்நாட்டினின்று மகலாராகித் தங்கி இருந்தனர். மக்களின் புறக்கண்களுக்குப் புலனாகாவாறு காந்து, தெய்வக்கூட்டங்கள் பல அங்கு உறைந்து வந்தன. மாபெருங் கடல்களைக் கடந்து மாக்கலமேறி வாணிபத்தின் பொருட்டு வந்து கூடிய பல்வேறு மொழிகளைப் பேசிவரும் பிறநாட்டு மனிதர்கள் நகரெங்கு மிருந்தனர்.

ஆட்சியின் செம்மையைக் கருதி அரசன், ஐம்பெருங் குழுவும், எண்பேராயமும் கொண்டிருந்தனன். இவ் விஷயங்கள் யாவும் மணிமேகலையின் முதற்காதையில் உள்ளன. இவ்வூரில் ஈகையிற் சிறந்த செல்வச்சீமான்கள் பலர் வசித்து வந்தனரென்பதைக் கூறுவான் வேண்டியும், தமிழ்நாடுகளில் இந்நகரம் பெற்றிருந்த உயர்வை உணர்த்திடவும், ஆசிரியர்,

"சம்புத் தீவினுட் டமிழக மருங்கிற்
கம்பமில்லாக் கழிபெருஞ் செல்வ
ராற்றா மாக்கட் காற்றுந் துணையாகி
நோற்றோரு றைவதோர் நோனகருண்."

என்ற அடிகளில் தெரியவைத்துள்ளனர். (17: 62-5.)

(வனமும் மன்றமும்)

விளங்கு மந்நகரில் கதிரவனது வெம்மையால் தனது விரிந்த சிறகுகளை இழந்த பக்ஷி ராஜனாகிய சம்பாதி இருந்த சம்பாதிவன [illegible]. (சம்பாதி வரலாறு ராமாயணத்தில் காண்க. கிஷ்கி. கா.) இவ்வன மிருந்த இடம் புள்ளிருக்கு வேளூரென அழைக்கப்படு மென்பர். மற்றும், காவிரிப்பாவையின் தாதை கவேரன், தவம் செய்துவந்த கவேரவனமும், 'பகவன தாணையிற் பன்மரம் பூக்கும்' உவவனமும் (3: 61) இலவந்திகைச் சோலையுமாகிய பல வனங்கள் அங்கு இருந்தன எனப் பட்டுள்ளது. இவற்றோடன்றி, நறுமணங்

207701

கமழும் பூஞ்சோலைகள் பல நகரெங்கு மிருந்தன. காய்ப்பசிக் கடும்பேய்கள் சூழ்ந்த வாகைமன்றமும்; புள்ளினஞ் சூழ்ந்த வெள்ளிமன்றமும்; சுடலை நோன்பிகள் வாழும் வன்னிமன்றமும்; பிணந்தின்டியர்கள் உறையும் வெள்ளிடை மன்றமும்; தலைமாலைகளைக்கொண்ட இரத்தி மன்றமுமென, 'ஊருக்கு நடுவாய் எல்லாருமிருக்கு மரத்தடியாகிய' (நச்சி, முருகு, 226) மன்றங்கள் பல இருந்தன.

தீயவரைப் புடைத்துண்ணும் பேய்களிருந்த பூத சதுக்கமும், மாதவரிடங்களும், பொதியிலுமாகிய வேறு பலவு மிருந்தன. (20: 28-30) எவ்வருணத்தவரும் தங்குதற்குரிய, 'பலர்புகத் திறந்த பகுவாய் வாயி—லுலக வறவி' (7: 92-3) யாகிய, ஊரம்பலத்தைச் சம்பாபதி யென்னும் தெய்வத்தின் கோயிலின் முன்னிலையில், சக்கரவாளக் கோட்டத்தில் பொருந்தப் பெற்றிருந்தது. இந்திரனால் நிருமிக்கப்பட்ட இந்திர விகாரங்கள் எழு (26:55) ஒன்றற்கொன்று உயர்வு தாழ்வின்றி அமைந்திருந்தன.

(சிலப்பதிகாரம் கூறுவன)

மற்றும், காவிரிப்பூம் பட்டனத்திலிருந்த விசேடணங்கள் பல சிலப்பதிகாரத்தால் விளங்குகின்றன. (காதை. 5) வாசனைப் பொருள்களையும், பூவகைகளையும் தெருக்களில் விற்றுச் செல்லுவரெனப் பட்டுள்ளது. பட்டுநூலும், பருத்திநூலும் கொண்டு, ஆடைகள் நெய்து விற்போர் ஒருபுற மிருந்தனர். எண்வகைக் கூலங்களும், பிட்டு, அப்பம், கள், உப்பு, வெற்றிலை, பச்சிறைச்சி, சூட்டிறைச்சி முதலியன விற்போர் தனித்தனியாக அவரவரிடங்களில் வசித்து வந்தனர். பஞ்சவாசம், ஆடு, எண்ணெய், வெண்கலம், செம்பு முதலியன விற்போரும் அங்கு இருந்தனர். தச்சர், கொல்லர், சித்திரக்காரர், சிற்பிகள், தட்டார், சிப்பியர், இசையறிந்த குழலர், பாணர் முதலிய பலரும் தத்தமது பணிகளைச் செய்துவந்தனர். உழவர், மருத்துவர், சோதிடர், முத்துக்கோப்போர், வளை அறுப்போர், நாழிகைக்கணிகர், கூத்தர், நாடகக்கணிகர், தோற்கருவி யிசைப்போர், முதலிய பலரும் அந்நகரத்தில் இருந்தனர். யானைப்பாகர், தேர்ப்பாகர், காலாட்படைத் தலைவர், முதலிய வீரர்கள் அரசன்கோயிலைச் சூழ விருந்தனர். மருவூர்ப்பாக்கம், பட்டினப்பாக்க' மென்ற பெயருடைய இடங்கள் அந்நகரில் இருந்தன. மலர், சந்தனம் பிட்டு, அப்பம், மீன் முதலியன விற்போர் இராக்காலங்களில் விளக்குகளைக் கொண்டு விற்பர். பட்டினப் பாலையில் மற்றும் காவிரிப்பூம் பட்டினத்தைக் குறித்த பல செய்திகளும் கூறப்பட்டுள்ளன.

(புகாரின் தற்கால நிலை)

'கமாரம்' எனப் பேரிப்பிளீ சென்பாரும், 'கபேரிஸ்' என டாலமியென்பாரும் கூறுவது, இந்நகரையே யென்பர். சோழமன்னர்கள் நாடாண்டு வந்த காலத்தில் காவேரியின் முகத்துவாரம் மண்ணால் மூடவில்லை. அது சிறந்ததொரு துறைமுகப் பட்டினமாக விளங்கியதாகத் தெரியவருகின்றன. அது, அயல் நாடுகளோடு வியாபாரம் செய்து வந்த நகரமொன்றாக இருந்தது. இப்பொழுதோ, காவேரியின் முகத்துவாரம் மணலால் மூடப்பட்டுள்ளதாகக் கூறுகின்றனர். சோழரது தலைநகரமாக விளங்கி யிருந்த காவிரிப்பூம்பட்டினம், தனது பழம் புகழனைத்தையும் இழந்து, ஒரு சிறிய கிராமமாக இருக்கின்றதென்பர்.



# தமிழன்னை தனித் துயரம்

:(o):

(தே. ப. பெருமாள்.)

அன்று தமிழன்னை அழகுபெற வீற்றிருந்தாள். அவள் உடற்கட்டு குலையாதிருந்தது. அந்நாள் அவள் மக்களனைவரும் அவளை ஒருங்கு போற்றினர். முடியுடை மூவேந்தரும் அவளைத் தம் தலைமிசைக்கொண்டு போற்றினாரெனின் அஞ்ஞான்றைய அவள் தம் உயர்வை வாய்விட்டுரைக்க இயலுங்கொல்? அவள் தம் பெருமை கடல் கடந்து சென்றது. அவளைக் காமுற்ற அயல் நாட்டறிஞர் பலர். அஃதன்றியும் அவளுக்கு நல்லணிசெய்து கொடுத்த பாவலர் பலர். கம்பன், வள்ளுவன், இளங்கோவடிகள், சேக்கிழார், புகழேந்தியாதிய புலவர் பெருமக்கள் செய்துகொடுத்த இழை சிற்றிழையாமோ! அன்று தமிழன்னை புலவரிழையால் பொலிவுற்று, மன்னர் செய்கையால் மகிழ்வுற்று மணி பதிந்த அரியாசனமிசை அமர்ந்திருந்தனள்.

* * * *

ஆனால் தமிழன்னையின் இன்றைய நிலையை நினைக்குங்கால் அம்மம்ம! நெஞ்சு குமுறுகின்றது. உன்ன உன்ன ஊன்கரைந்து உயிர் கரைகின்றது. அவள் எழிலினைக் காணோம்! அவள் மேனியின் ஒளியினைக் காணோம். அவள் மேனியின் கண் பிறமொழிச் சொற்கள் எனும் மாசுபடிந்துள்ளன. இன்று தமிழன்னையின் மேனி சிதைவுற்று பொலிவற்று பெருமை குன்றியிருத்தலை எந்தத் தமிழ் மகனும் அறிவன். அவளது இழை என்னும் நூற்கள் ஒளி குன்றி இருத்தலுங் கண்கூடு. அவற்றின் பெற்றியறியாது அவற்றைத் தூற்றும் மாக்களோ கணக்கில. அன்று தமிழன்னை வதிந்த இடமனைத்தும் இன்று பிற அன்னையர் வதிதல் வெள்ளிடை மலையென விளங்கா நிற்கும்.

இன்று தமிழர் தம் அன்னையைப் போற்றுதலில்லை. அன்று போல் அவளைப் போற்றும் மன்னரையுங் காணோம். தமிழர் தம் அன்னைபால் நற்கலை இல்லை யென்று கூறுகின்றனர். அக் கலையினைக் கூறுதற்கு நம் அன்னைக்கு அத்தகைய வன்மை இல்லை யென்றும், அஃது பிறமொழிபாலே அமைந்துள தென்றும் கூறுகின்றனர். தமிழரோ இங்ஙனங் கூறுங்கால் பிறமொழியாளர் வாளா விருப்பாரோ? அவர் தம் மொழியே மன்பதையில் மேம்பாடுற்றதெனக் கூறி தமிழன்னையை இழிதகைமையாய்ப் பேசுகின்றனர். ஆ! இஃது எத்தகைய பித்தச் செய்கை! தமிழன்னையின் இத்தகைய வெந்துயரினைக் கண்டு நெஞ்சுவெந்த செந்தமிழ்ப்புலவன் பாரதி அன்னைவாக்காகக் கூறும் அழகிய மொழிகள் அவள் துயரினைச் செவ்வனம் எடுத்துக் காட்டும்.

"இன்றொரு சொல்லினைக் கேட்டேன்!—இனி
ஏது செய்வேன்? எனதாருயிர் மக்காள்!
கொன்றிடல் போலொரு வார்த்தை—இங்கு
கூறத்தகாதவன் கூறினன் கண்டீர்!
புத்தம் புதியகலைகள்—பஞ்ச
பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும்
மெத்த வளருது மேற்கே—அந்த
மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை.
சொல்லவுங் கூடுவதில்லை—அவை
சொல்லுந் திறமை தமிழ் மொழிக்கில்லை
மெல்லத் தமிழினிச்சாகும்—அந்த
மேற்கு மொழிகள் புவிமிசை யோங்கும்.
என்றந்தப் பேதை உரைத்தான்—ஆ!
இந்த வசை யெனக் கெய்திடலாமோ!
சென்றிடு வீரெட்டுத் திக்கும்—கலைச்
செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்."

நமது அன்னை இத்தகைய துயருற நாம் வாளாவிடுத்தல் நன்றாகுமோ? அஃது அறச்செய்கையின் பாற்படுங்கொல்? "பெற்றதாயும் பிறந்த பொன்னாடும் நற்றவவானினும் நனி சிறந்தனவே" என்பர் ஒரு பெரியார். அத்தகைய உற்ற அன்னையினும் உயரிய அன்னையாகிய தமிழன்னை துயருற நாம் வாளாவிருப்பது பாவமேயாகும். ஆதலின் தமிழ் மக்களனைவரும் பாரதி கூறிய தமிழன்னை மொழிப்படி அவளைப் போற்றி வளர்த்து புதுக்கலை எனும் நல்லுடலையும் அளித்தல் வேண்டும். அன்றே தமிழன்னை துயர் நீங்கும்.

---


## ஆனந்தபோதினி அச்சுக்கூடத்தில்

போஸ்ட் கார்டுகள் முதல் போஸ்டர்கள் வரை புஸ்தக வேலைகள் உள்பட எல்லாவித அச்சு வேலைகளும் சுத்தமாகவும், அழகாகவும், கால தாமதமின்றியும் செய்து கொடுக்கப்படும்.

விவரங்களுக்கு கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதித் தெரிந்துகொள்ளவும்.

மானேஜர்.
"ஆனந்தபோதினி" மதராஸ்.


# திருக்குறட் பெருமை

(பண்டித. எஸ். சோமநாத செட்டியார்.)

சேலம் குகை சாந்தி நிகேதன வாசகசாலையின் 3வது ஆண்டு நிறைவு விழாவின்போது, முனிசிபல் கல்லூரி தமிழ் ஆசிரியர் பண்டித S. சோமநாத செட்டியார் "திருக்குறட் பெருமை" என்னும் விஷயத்தைப்பற்றி நிகழ்த்திய சொற்பொழிவின் சாரம்:—

### பல நூற்பொருளையும் தன்னகத் தடக்கியுள்ள பண்பு

தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாயனார் "கற்க கசடறக் கற்பவை" எனத் தாம் கூறியவாறே சில்வாழ் நாட்பல் பிணிச் சிற்றறிவினராகிய மக்கள் பயின்று பயனடைதற்கேற்ற அறம், பொருள், இன்பம், வீடு என்னும் விழுமிய பொருள் நான்கின் கூறுபாடுகள் முழுவதும் தன்னகத்தே கொண்டதாய் உள்ள திருக்குறள் என்னும் அரிய நூலை, இயற்றியருளினர். பலவகையவாய்ப் பரந்துள்ள புராணங்களிலும் காவியங்களிலும் கூறுகின்ற பொருள்களில் பொது மக்களுக்கும் படிப்பதில் ஊக்கமுண்டாக்கி மனத்தினை தம் வசப்படுத்துவனவாகிய அலங்காரப் பகுதிகளை யொழித்து, உயிர்க்கு உறுதி தருவனவாகிய நற்பெரும் பொருட் பகுதிகளை எடுத்து நோக்கின் அவை எல்லாம் இந்நூலிலுள்ள சில பாட்டுகளிலேனும், சில அதிகாரங்களிலேனும் அடங்கிவிடுகின்றன. அவ்வாறு அடங்குவதோடு அந் நூல்களெல்லாவற்றினும் காணப்படாத அரியபெரிய நுண்பொருள்களும் காணப்படுகின்றன. இவற்றிற்குச் சிலவற்றை உதாரணமாக நோக்குவாம். கந்தபுராணத்துள் சிவபிரானது அம்சமாகிய முருகக் கடவுளின் அளவிடற்கரிய வல்லமையும், அக்கடவுள் தன்னை வழிபட்டார்க்குக் கொடுக்கும் அளவில்லா இன்பமும் வழிபடாதவர் அடையுந் துன்பமும் பலவேறு முனிவர்களின் தவ வல்லமையும் பெரியோர்கள் ஆராயத்தக்க பொருள்களாகிய பதி பசு பாச இலக்கணங்களும் நீதிகள் சிலவும் காணப்படுகின்றன. இவற்றுள் முருகக் கடவுளின் அளவிடற்கரிதாகிய வல்லமை முதலிய குணங்களெல்லாம் திருக்குறளில் கடவுள் வாழ்த்தென்னும் அதிகாரத்திலுள்ள

"கோளில் பொறியில் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை."

என்னும் குறளிற் காணப்படும் 'எண் குணத்தான்' என்னும் ஒரு தொடர் மொழியால் பெறப்பட்டவையாம். "எண் குணத்தான்" என்னும் தொடருக்குப் பொருள் சொல்லுமிடத்து ஆசிரியர் பரிமேலழகர், "எண் குணங்களாவன:— தன்வயத்தனாதல், "தூய உடம்பினனாதல்" இயற்கை உணர்வினனாதல், "முற்றுமுணர்தல்" இயல்பாகவே பாசங்களி னீங்குதல். பொருளு

டமை, முடிவில் ஆற்றலுடைமை, வரம்பில் இன்பமுடைமை என இவை. இவ்வாறு, சைவாகமத்துக் கூறப்பட்டன." என உரை கூறினர்

இவற்றுள் அளவிடற்கரிய வல்லமை அடி அடைந்தார்க்குப் பேரின்பமும் தருந்தன்மை முதலியன அடங்கும்.

பிறவிப் பெருங்கடல் நீந்துவர்-நீந்தார்
இறைவனடி சேரா தார்.

என்னும் குறளால் கடவுளின் திருவடி சேராதார் பெருந்துன்ப மெய்துவர் என்பது பெறப்படும். தவம் என்னும் அதிகாரத்தால் தவம் செய்யும் முனிவர்க்கு வேண்டிய இலக்கணங்கள் பெறப்பட்டன. தவத்தால் மேம்பட்ட முனிவர்களது பெருமையை,

"குணமென்னுங் குன்றேறி நின்றார்—வெகுளி
கணமேயுங் காத்த லரிது"

"ஐந்தவித்தான் ஆற்றல் அகல் விசும் புளார் கோமான்-
இந்திரனே சாலுங் கரி"

என்னும் பாக்கள் இனிது விளக்குவனவாம். பதி, பசு, பாச இலக்கணங்களாகிய ஞானப் பொருள்களெல்லாம் கடவுள் வாழ்த்திலும் துறவற வியலிலுள்ள சில பாக்களிலும் அடங்கிவிடுகின்றன. முப்பொருள் ஆராய்ச்சி செய்யும் ஞான நூல்கள் பலவற்றினும் காணப்படும் நுண்பொருள்களின் பரப்பெல்லாம் இத் துறவறவியலில் அடங்கும். சிலப்பதிகாரமென்னும் அரும் பெருங் காப்பியத்தின்கண் முத்தமிழிலக்கணங்களும் பிறவும் கலந்து வருகின்றனவேனும் சிறப்பான மூன்று நீதிகளை விளக்குவதற்காகவே, இளங்கோவடிகளால் அஃது இயற்றப்பட்டது. அந்நீதிகளாவன நீதி முறை தவறிய அரசர்களை அறக்கடவுளே தண்டிக்கும் என்பதும், கற்பு நெறிதவறாத பெண்களைத் தேவரும் புகழ்ந்து அவர்க்கு வேண்டுவன புரிவர் என்பதும், முற்பிறப்பில் செய்த தீவினையும் நல்வினையும் பிற் பிறவியில் தவறாது வந்தடைந்து பயன் தரும் என்பதுமாம்.

இங்கே காணப்படும் நீதிகளுள் அரசன் நீதி தவறினால் அவனை அறக்கடவுளே தண்டிக்குமென்பது,

"எண்பதத்தான் ஓரா முறை செய்யா மன்னவன்
தண்பதத்தாற் றானே கெடும்."

என்னும் திருக்குறளிலும், கற்பு நெறி தவறாத மகளிரைத் தேவரும் போற்றுவர் என்பது,

"தெய்வம் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை"

என்னும் திருக்குறளிலும் ஊழ்வினை செய்தானைத் தவறாது வந்தடையும் என்பது,



"ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினும் தான் முந்துறும்"

என்னும் திருக்குறளிலும் அடங்கும். இம் மூன்று நீதிகள் சார்பாக அந்நூலிற் காணப்படும் நீதிகள் பிறவும் சில குறட்பாக்களில் அடங்கும். இங்ஙனம் எல்லா நூற்பொருள்களையும் தன்னகத் தடக்கிக்கொண்டிருக்கும் இம் மாண்பு நோக்கியே,

"எல்லாப் பொருளும் இதன்பாலுள இதன்பால்
இல்லாத எப்பொருளு மில்லையால்" எனவும்

"சாற்றிய பல்கலையும் தப்பா அருமறையும்
போற்றி யுரைத்த பொருளெல்லாம்—தோற்றவே
முப்பால் மொழிந்த முதற்பாவல ரொப்பார்
எப்பா வலரினு மில்"

எனவும் சங்கப் புலவர்கள் பாராட்டிக் கூறினார்கள்.

## முப்பால்களின் வைப்புமுறை

ஆசிரியர் திருவள்ளுவனார் தம் நூலின்கண் அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நால்வகை யுறுதிப் பொருள்களையும் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என மூன்று பாலாக வகுத்துக் கூறுவர். அறம் பொருள் இன்பம் என்னும் மூன்றனையும் தனித்தனிப் பாலாகக் கூறப்படுவதுபோல வீட்டினை ஓர் பாலாக வகுத்துக் கூறவில்லை. ஏனெனில் மக்கள் இப் பிறப்பின்கண் அறத்தின் பகுதிகளை உணரவும் செய்யவும் பொருளின் பகுதிகளை உணரவும் செய்யவும் இன்பத்தின் பகுதிகளை உணரவும் செய்யவும் வல்லுநராகின்றனர். அதுபோல, வீட்டின் தன்மைகளை உணரவும் அனுபவிக்கவும், இப்பிறப்பில் முடிவதில்லை. ஆகையால் வீட்டினை அடைதற்கேற்ற சாதனங்களையே நூல்கள் கூறுவனவன்றி, வீட்டின் சிறப்பிலக்கணங்களைக் கூறமாட்டா. ஆனால் வீட்டின்பம் அளவிடமுடியாதது, எப்பொழுதும் அழிவில்லாதது என்னும் வாக்கியங்களால் உணர்த்தப்படுகின்றதேயெனின் வீட்டின்பம் இவ்வுலகத்தின்பங்களுக்கு மாறுபட்டது. இவ்வுலகத்தின்பங்களோ சிற்றளவினையுடையன. விரைவில் மாறுந் தன்மையன என உணரும்போது வீட்டின்பம் அளவிடமுடியாதது. அழிவில்லாதது எனப் பொதுவகையால் அநுமானத்தால் கூறப்படுவதேயன்றிச் சிறப்பு வகையால் இன்ன தன்மைத்தெனக் கூறப்படாததேயாம். இம் மக்கட் பிறப்பிலேயோ வீட்டின்பம் அடைந்தவர் இருப்பினும் அவ்வின்பம் அடைவது தாம் முனைப்பற்றுத் தம் மறிவற்றவிடத்தேயாம். அவ்வாறு அனுபவித்தது அங்ஙிலை கலங்கி உலக உணர்வுடையாரயபோது, தம் உணர்வுகாண, அனுபவிக்காததனால் இன்ன தன்மைத்தெனக் கூற இயலாதவராகின்றனர். இக்காரணம்பற்றியே ஆசிரியர் பரிமேலழகரும் தாம் கூறிய உரைப்பாயிரத்தில் "வீடென்பது சிந்தையு மொழியும் செல்லா நிலைமைத்தாகலின் துறவறமாகிய காரண வகையாற் கூறப்படுவதல்லது, இலக்கண வகையாற் கூறப்படாமையின் நூல்களாற் கூறப்படுவன ஏனை மூன்றுமேயாம்" என்று கூறினர்.

இந்நூலின்கண் முப்பால்களையும் வரிசைப்படுத்தி வைத்திருக்கும் முறை பொருள்களின் சிறப்பு முறையானன்றி சூழ்ச்சிமுறையானன்று. நிகழ்ச்சிமுறையால் நோக்கும்போது மக்கள் முதலில் இன்பத்தையே நாடுகின்றனர். பின்னர் அவ்வின்பத்தை அனுபவிப்பதற்குத் துணையாகிய பொருள் தேட முயல்கின்றனர். பொருள் தேடி இன்பத்தை ஒருவாறு அனுபவித்துக்கொண்டிருக்கும் நிலையில், அவற்றின் நிலையாமை சிறிது உணரப் பெறுகின்றனர். அங்ஙனம் உணர்ந்தபின்னர் அறம் செய்வதில் கருத்துடையவராகின்றனர். இக்காரணம்பற்றியே இலக்கணநூல் வகுத்த தொல்காப்பியனார்,

"இன்பமும் பொருளும் அறனு மென்றாங்கு"

என வைத்துச் சூத்திரம் செய்தனர். தொல்லாசிரியர் பலர்க்கும் இதுவே கருத்தாம். இது,

"சிறப்புடை மரபிற் பொருளும் இன்பமும்
அறத்து வழிப்படுஉம் தோற்றம்போல"

என்ற சான்றோர் வாக்காலும் உணரலாம். சிறப்புடைய முறையில் பொருளும் இன்பமும் அறத்தின் பின்னர் வைக்கப்படும். எனவே, நிகழ்ச்சி முறையில் இன்பமும் பொருளும் அறமும் என வைக்கப்படும் என்பது பெறப்பட்டது.

## அறத்துப்பால்

அறத்துப்பால், இல்லறவியல், துறவறவியல் என இரண்டியல்களையுடையது. ஆசிரியர் இல்லறவியலை முதலில் வைத்துத் துறவறவியலை அதன் பின் வைத்துள்ளார். இல்லறம் என்பது நற்குண நற்செய்கைகளையுடைய மனைவியோடு வீட்டிலிருந்து இல்லறத்திற் கோரியுள்ள முறைகளை வழுவாமற் செய்து நடத்தப்படுவதாம். இல்லறம் நடத்துவதற்கு இன்றியமையாது வேண்டப்படும் குணம் அன்பாகும். மணமக்கள் இருவர்க்கும் ஒரு தன்மைத்தாகிய அன்பில்லாத வழி விருந்தினரைப் பேணல் முதலிய சிறந்த அறங்கள் நடைபெற மாட்டாவாம். இல்லறவியலில் 'இல்வாழ்க்கை' என்னும் அதிகாரம் முதல் 'புகழ்' என்னும் அதிகாரம் இறுதியாக இருபது அதிகாரங்கள் உள்ளன. இல்லறத்திலிருந்து அறிவு முதிர்ந்த பின்னரே துறவறம் மேற்கொள்ளவேண்டியிருப்பதால் இல்லறம் முதலில் வைத்தோதப்பட்டது. இல்லறம் துறவறம் என்னும் இவ்விரண்டியல்களிலும் பிரமசரியம் கிருகத்தம் வானப்பிரத்தம் சந்நியாசம் என்னும் நால்வகை நிலைகளும் அடங்கும். பிரமசரிய ஒழுக்கமாவது மாணாக்கராய் ஓதும் நிலையாதலால் அது இல்லறத்தில் அடங்கும். துறவடைந்த பின்னர் மனக்குற்றங்கள் அகலுதற்பொருட்டு விரதங்களை அநுசரித்தலே வானப்பிரத்தமாகலின் அது துறவறவியலில் அடங்கும். சைனர் முதலிய பிறமதத்தினர் இல்லறம் தொடங்காது இளமையிலேயே துறவடையவேண்டும் என்னும் கருத்தினராவர். ஆகையினால் சைனர்களால் இயற்றப்பட்ட நாலடியாரிலுள்ள நீதிகள் பலவும் திருக்குறள் நீதிகளோடு ஒத்தனவாகக் காணப்படினும் சில மாறுபடுகின்றன. நற்குண நற்செய்கை இல்லாத மனைவியாயிருப்பினும் கலியாணம் செய்துகொண்டவன் மனைவியை நீக்குதற்கு முடியாது காத்திருக்கவேண்டியிருப்பதாலும் மனைவியின் தொடர்



பால் பல துன்பங்கள் ஏற்படுவதாலும் கலியாணத்தை இளம்பருவத்திலேயே நீக்கவேண்டும் என்னும் கருத்தை உட்கொண்டே கலியாணம் என்னும் சொல்லிற்குப் பரியாய நாமமாகத் துன்பம் காவல் நீக்குதல் என்னும் பொருள்களைத் தருகின்ற கடி என்னும் சொல்லைச் சான்றோர் அமைத்தனர் என்பது சைனர் கருத்தாகும். இஃது அவர் கருத்தாதல்,

"மாண்ட குணத்தொடு மக்கட்பே றில்லெனினும்
பூண்டான் கழித்தற் கருமையால்—பூண்ட
மிடியென்னும் காரணத்தின் மேன்முறை கண்ணே
கடியென்றார் கற்றறிந் தார்."

என்னும் நாலடியாரிலுள்ள பாட்டாலும் உணரலாம். இளமையிலேயே துறவடையுமாறு தூண்டும் நிலைமை உலக இயற்கைக்கு மாறுபட்டதொன்றாகும். பழம் பழுப்பதற்குக் காயும் காய் தோன்றுவதற்கு மலரும் மலர் தோன்றுவதற்கு அரும்பும் முறையே காரணங்கள் ஆதல்போல இல்லறத்திற்குப் பிரம்மசரியமும் வானப்பிரத்தத்திற்கு இல்லறமும் சந்நியாசத்திற்கு வானப்பிரத்தமும் படித்துறைகளாம். ஆதலால் திருவள்ளுவனார் இல்லறவியலை மிக வற்புறுத்திக்கூறிய பின்னரே துறவறவியலை வைத்திருக்கின்றனர்.

## பொருட்பால்

பொருட்பால் அரசியல் அங்கவியல் ஒழிபியல் என்னும் மூன்றியல்களையுடையது. பொருளுக்குச் சிறந்த துணைக்காரணமாயிருப்பவன் அரசனாதலினால் இவ்வியல்கள் அரசன் சார்பாக வைத்தோதப்பட்டனவேனும் அரசர்க்கே சிறப்பாக உரியனவாக ஓதப்படும் சில குறட்பாக்கள் ஒழித்து ஒழிந்தன எல்லார்க்கும் ஒப்பக்கூறிய பொருள்களையுடையனவாகவே காணப்படுகின்றன. இவற்றுள் அரசியலில் அரசனுக்குரிய இலக்கணங்களெல்லாம் இறைமாட்சி என்னும் அதிகார முதல் இடுக்கணழியாமை என்பதீறாக உள்ள இருபத்தைந்து அதிகாரங்களால் கூறப்பட்டுள்ளன. அங்கவியலில் அரசனுக்கு வேண்டிய அங்கங்கள் ஆறின் இலக்கணங்கள் முப்பத்திரண்டு அதிகாரங்களால் கூறப்பட்டிருக்கின்றன. அங்கங்கள் ஆறுவன:-அமைச்சு, நாடு, அரண், பொருள், படை, நட்பு என்பனவாம். இவற்றுள் அமைச்செனப்பட்ட மந்திரியின் இலக்கணங்கள் பத்ததிகாரங்களாலும் நாட்டின் இலக்கணமும் காவலுக்குரிய அரண் என்னும் மதில் முதலியவற்றின் இலக்கணமும் பொருளின் இலக்கணமும் ஒவ்வோரதிகாரத்தாலும் படையின் இலக்கணம் இரண்டு அதிகாரங்களாலும் நட்பின் இலக்கணம் பதினேழு அதிகாரங்களாலும் கூறப்பட்டிருக்கின்றன. அரசியலிலும் அங்கவியலிலும் கூறாதொழிந்தனவற்றை ஒழிவியலென ஓரியலாக்கிப் பதின்மூன்றதிகாரங்களால் கூறப்பட்டுள்ளன. பொருட்பாலில் உள்ள அதிகாரங்களில் வெளிப்படையாக எல்லார்க்கும் பொருந்தும்படி கூறப்பட்ட பொருள்களையுடைய அதிகாரங்கள் பலவாம். அவை கல்வி கல்லாமை கேள்வி முதலியன. ஏனைய குறிப்பாற் பிறர்க்கும் ஏற்குமாறு கூறப்பட்டனவாம். இக்காரணம் பற்றியே பரிமேலழகரும் அரசியலுள்ளும் அங்கவியலுள்ளும் சிறப்பாகக் கூறப்பட்ட குணங்களுள் ஏற்புடையன யாவர்க்கும் பொருந்தவைத்தார் எனக் கூறினர்.

## காமத்துப்பால்

காமத்துப்பால் களவு கற்பென்னும் இரண்டியல்களை யுடையது. இவற்றில் களவு எழதிகாரங்களாலும் கற்பு பதினெட்டதிகாரங்களாலும் கூறப்பட்டுள்ளன. திருக்கோவையார் முதலிய கோவை நூல்களெல்லாம் இப்பொருள்களையே விரித்துக் கூறுகின்றன. திருக்கோவை சிற்றின்பப்பொருள் தருவதாகவே வைத்து உரை கூறினும் நுணுகி யாராய்வார்க்குப் பேரின்பப் பொருள் தருவதாயும் அமைந்திருக்கின்றதென அறிஞர் கூறுவர். "திருக்கோவையார் உண்மை" என்னும் நூலில் பேரின்பப்பொருள்படும்படி துறைகள் அமைக்கப்பட்டுள்ளன. அவ்வாறே இக்காமத்துப்பாலும் பேரின்பப் பொருள்களை பயக்குமாறு அமைக்கப்பட் டிருக்கின்றதெனச் சான்றோர் கூறுவர். இவற்றுள் களவெனப்படுவது வடிவமும் குலமும் குணமும் செல்வமும் கல்வியும் முதலியவற்றால் மேன்மையுற்ற ஓர் ஆண்மகனும் அவ்வாறே பல வகையாலும் மேன்மையடைந்த பெண்மகளும் நேர்படச் சமயம் வாய்த்து நேர்பட்டபோது முன்னைய பல பிறவிகளிலும் இருவரும் பழகியுள்ள பழக்கத்தால் ஒருவர்மேல் ஒருவர்க்கு விருப்பம் செல்ல, அன்புகொண்டு ஓரிடத்திற் கூடுவதாம். கூடிப் பிரிந்த பின்னரும் அவ்வாறே பிறரறியாதபடி சில நாட்கள் ஒருவரை ஒருவர் கண்டு செல்வர். பின்னர் தோழியின் உதவியாலும் தோழன் உதவியாலும் இக்கூட்டம் சில நாட்கள் நிகழும். இச்செய்தி தாய் தந்தையர் அறிந்த காலத்துப் பெரியோர்களால் இருவர்க்கும் மணம் செய்து வைப்பர். பெண்ணின் தாய் தந்தையர் இச்செய்தி யறியாது பிறனொருவனுக்குக் கலியாணம் செய்யக் கருதினால் அப்பெண் தன் கருத்தைத் தோழிக்கு அறிவிக்கத் தோழியால் அவர்களறிந்து அவனுக்கே மணம் முடித்துவைப்பர். மணம் முடித்த பின் இல்லறம் நடத்த முற்படின் அது முதல் தலைவியின்பால் நிகழ்வன கற்பாகும். இந்நூலில் களவியலிலும் கற்பியலிலும் கூறப்பட்டுள்ள பொருள்கள் வேறு நூற்களிற் கூறப்பட்டுள்ளன. பொருள்களினும் நுட்பமாக உணரும் தன்மையன. இங்ஙனம் இருவரும் அன்புகொண்டு விருந்தினரை யுபசரித்தல் பெரியோர்க்கு வேண்டுவன செய்தல் முதலாகிய காரியங்கள் செய்து இல்லறம் நடத்துவதால் மனம் சுத்தமடைய அதனால் துறவறத்தின் மேற் கருத்துடையராவர். பின்னர் துறவறம் நடத்துவதே இல்லறத்திற்குச் சிறந்த பயனும்; இன்றேல் இல்லறத்தாற் பெரும்பயன் இல்லையாம். இம்முறைகளெல்லாம் இந்நூலில் வெகு அழகாகக் கூறப்பட்டிருக்கின்றன. தொல்காப்பியரும்,

"காமஞ்சான்ற கடைக்கோட் காலை
ஏமஞ்சான்ற மக்களொடு துவன்றி
அறம்புரி நெஞ்சமொடு கிழவனும் கிழத்தியும்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே."

என்னும் சூத்திரத்தால் இல்லறம் செய்ததற்கு பயன் துறவறம் நடத்துவதேயாம் எனக் கூறினர். இனிப் பொருட்பாலில் அரசர்க்கே சிறப்பாக ஓதப்பட்ட இலக்கணங்களுட் பலவும் ஏனையோர்க்கும் ஏற்புடையன ஆமாறும் காமத்துப்பால் பேரின்பத்தினையும் கூறுமாறும் உதாரணங்களால் விரித்துக் காட்டலுறின் இச் சொற்பொழிவு மிக விரியுமாகலிற் கூறாது விடுத்தேன். இதனால் நூலில் பொதுவாக அமைந்திருக்கும் பெருமையே ஒரு சிறிது விளக்கப்பட்டது.




# கம்பர் கவி நயம்

(சி. ஆர். சங்கரன்.)

சிறையிருந்த செல்வியின் நிலைமையை வருணிக்கப் போந்த கம்பர், சுந்தரகாண்டத்தில் காட்சிப்படலத்தில்,

"அரிது போகவோ விதிவலி கடத்தலென்றஞ்சிப்
பரிதிவானவன் குலத்தையும் பழியையும் பாராச்
சுருதிநாயகன் வரும் வருமென்பதோர் துணிவால்
கருதி மாதிரம் அனைத்தையும் அளக்கின்ற கண்ணாள்"

என்றார். தனது நாயகன் எந்த க்ஷணத்திலும் வரக்கூடும் என்ற நம்பிக்கை கொண்டவளாய், எல்லாத் திசைகளையும் அளக்கக்கூடிய கண்களுடன் பார்த்து வந்தாள் என்று எழுதியுள்ளார். விதிவலி நடத்தல் தானே செல்ல மாட்டாமையால் போக அரிதென்றும் தன்னால் ஒன்றும் செய்யக் கூடாமையால் விதிவலி கடப்பதென்றும் கூறினள். இராமபிரான் வேத நாயகனாகையால் சுருதி நாயகன் என்றார். அவர் பொறுக்கிவைத்துள்ள சொற்களின் நயம் கண்டு நோக்கத்தக்கது. 'இராமன் என்னை நோக்கி வாராது இருந்தாலும் தமக்காகவேயாவது வரவேண்டும்; தம் குலப் பழியைக் காப்பது அவர் கடமை. தமது வில்லாண்மை பழுதுற்றதே என்றாவது எண்ணி வருவார்' என்பதாம். மற்றொரு இடத்தில்,

"ஆவியந் துகில்புனைவ தொன்றன்றி வேறறியாள்
தூவியன்ன மென்புனலிடைத் தோய்கிலா மெய்யாள்
தேவு தென்கட லமிழ்துகொண் டனங்கவேள் செய்த
ஓவியம் புகையுண்டதே யொக்கின்ற வுருவாள்"

என்று எழுதுகின்றார். இக்கவியில் கம்பரின் உவமை நோக்கத்தக்கது. கம்பர் வருணனைகளில் இது ஒரு சிறந்த பாடல்.

இராவணன் கவர்ந்துகொண்டு செல்வதற்கு முன் இலக்குவனை இடித்துக் கூறியதைப்பற்றி,

"என்னை நாயகனிளவலை யெண்ணலா வினையேன்
சொன்ன வார்த்தைகேட் டறிவிலளெனத் துறந்தானோ

முன்னையூழ்வினை முடிந்ததோ வென்றென்று முறையால்
பன்னவாய் புலர்ந்துணர்வு தேய்ந்தாருயிர் பதைப்பாள்"

என்று நினைந்து வருந்துகின்றாள். இதில் சீதையின் மனப்பாங்கு நன்கு விளங்குகின்றது. இதனாலன்றோ அனுமனும் அவளைத் "தவம் செய்த தவமாம் தையல்" என்றான். தன்னைப் பிரிந்ததால் இராகவனுக்கு ஏற்படும் துன்பங்களை யுன்னி,

"அருந்து மெல்லடகாரிட வருந்துமென்றழுங்கும்
விருந்து கண்டபோதென்னுறு மோவென்று விம்மும்
மருந்து முண்டுகொல் யான்கொண்ட நோய்க்கென்று மயங்கும்,
இருந்த மாநிலம் செல்லரித்திடவு மாண்டெழாதாள்"

என்று மனம் புழுங்குவாள். இப்பாட்டின் கடையடி மிகவும் அழகானது. புலையனும் விரும்பாத புன்புலால் யாக்கையை விரும்பாது, இருந்த இடத்தை விட்டு அசையாது இருந்தாள். இதே கருத்தை சிலப்பதிகாரத்தில், கணவனைப் பேணுதலைப்பற்றி கூறப் போந்தவிடத்து,

"அறவோர்க்களித்தலும் அந்தணர் ஓம்பலும்
துறவோர்க்கெதிர்தலும் தொல்லோர் சிறப்பின்
விருந்தெதிர்கோடலும் இழந்த என்னை"

என்று இளங்கோவடிகள் கண்ணகி வாயிலாக வெளியிடுகின்றார். இராமாயணம் சிலப்பதிகாரத்துக்குப் பின்னர்த் தோன்றியதாகலின், கம்பர் சிலப்பதிகாரச் செய்யுளின் கருத்தையும் இதே விஷயத்தைப்பற்றித் திருவள்ளுவனார் கூறியுள்ள செய்யுள்களின் சாராம்சத்தையும் கம்பர் மேற்கூறிய செய்யுளின்கண் அமைத்துப் பாடியுள்ளார்.

மற்றும் சீதை இராமபிரான் குணநிசயங்களை யுன்னி வருந்தும்போது குகனுக்கும் இராமனுக்கும் உண்டான வாஞ்சையைப்பற்றியும் எண்ணுவாள் என்பதை,

"ஆழநீர்க் கங்கை யம்பி கடாவிய
ஏழை வேடனுக்கு எம்பிநின் றம்பிநீ
தோழன் மங்கை கொழுந்தி யெனச்சொன்ன
வாழி நண்பினை யுன்னி மயங்குவாள்"

என்ற கவியால் விளக்குகின்றார். இராமபிரான் குகனிடம், கங்கைக்கரையில் (இவர் வனவாசம் செய்யப்போகையில் பார்த்தபோது, குகன் இவரைக் கண்டு, சேவித்து, உணர்ச்சியால் ஒன்றுபட்ட நண்பனாகி, மீனும் தேனும் திருத்திக்கொண்டு வந்தான். அப்பொழுது சீதையை நோக்கி இராகவன் "இவன் நீராக் காதலனாகும்" என்றான். இராமன் சொல்லின் திறத்தை எவ்வாறு அறிந்துகொண்டான் எனில், பின்பு குகன் ஓரிடத்து "தோழமை என்று அவர் சொல்லிய சொல் ஒரு சொல்லன்றோ" என்று கூறுவதினால் விளங்குகிறது. குகன் கல்லெனத் திரண்ட தோளினனாயினும், மாசற்ற மென்மையான மனத்தையும், புத்திகூர்மையையும் உடையவன். இப்பாட்டு இராகவன் நட்புத்தன்மையை நன்கு விளக்குவதோடு, அது கடல்போன்று கங்குகரையற்றது என்றும் தெரிகிறது.



இதே கருத்து ஒற்றுமையை கீழ்க்கண்ட ஒரு திருவாய்மொழிப் பாட்டிலும் காணலாம்.

"ஏழையேதலன் கீழ்மகன் என்னாது இரங்கி மற்றவர்க்கு
இன்னருள் சுரந்து,
மாழைமான் மடநோக்கி உன் தோழி உம்பியெம்பி
என்று ஒழிந்திலையுகந்த,
தோழன் நீயெனக்கு இங்கொழியென்ற சொற்கள் சொற்கள்
வந்து அடியேன் மனத்திருந்தி
ஆழிவண்ண நின்னடியினை யடைந்தேன் அணிபொழில்,
திருவரங்கத் தம்மானே"

இவ்வாறு கம்பர் தமது ஊழிதோறும் வழங்கும் கீர்த்தியை நிலை நாட்டியுள்ளார். மணிமேகலை, ஜீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம், தமிழ்வேதமாகிய திருக்குறள் முதலியவற்றின் கருத்தை நயம்பட இனிய சொற்களில் அமைத்துப் பாடியுள்ளார். கம்பர் அநாவசியமாக ஒரு வார்த்தையேனும் தமது பாட்டில் உபயோகிப்பவரல்லர். இப்பாடல்கள், நாம் எவ்வளவுக்கு எவ்வளவு நூதனமான முறையில் பொருள் செய்து நோக்கினும், புதிய புதிய கருத்துக்களைத் தரும் அற்புதக் களஞ்சியமாயுள்ளது. பெரிய நூலுக்கு இது ஒரு முக்கிய அம்சமாம், இதேவிதமாகத் திருக்குறளிலும் பொருள்பண்ணலாம். இதனாலன்றோ, கம்பனை கவிச்சக்கரவர்த்தி என்றழைக்கின்றார்கள்.


## நாகரிக உலகுக்கோர் நற்செய்தி.

வெளிவந்துவிட்டது! வெளிவந்துவிட்டது!!

# காதலனா? காதகனா?

(நவரசந் ததும்பும் நவீனம்.)

'கண்டதுங் காதல்!' 'கேட்டதுங் காதல்!' என்றெல்லாம் மதிமயங்கிக் கெட்டலையும் வாலிபர்களுக்கு இவ்வற்புத மிகுந்த கற்பிதக் கதை தகுந்தவாறு புத்திபுகட்டி, உண்மைக் காதல் இதுவென உணர்த்துகிறது. கலாசாலை மாணவ மாணவிகளின் ஆடம்பர வாழ்க்கையையும் விபரீதப் போக்கையும் அதனால் அவர்கள் அடையும் சீர்கேட்டையும் இந்நூல் ஆசிரியர் அப்படியே தம் இனிய எளிய நடையால் படம் பிடித்துக் காட்டியிருக்கிறார். இவ்வருமையான நாவல் ஒவ்வொரு தமிழ் மகன் கையிலும் இருக்கவேண்டிய அவசியம். சொற்ப பிரதிகளே கைவசமிருக்கின்றன. உடனே ஆர்டர் செய்யுங்கள்.

இதன் விலை அணா 10 தான்.

குறிப்பு:—1935௵ டிசம்பர்௴ 31-ந் தேதிக்குள் வாங்குபவர்களுக்கு மட்டும் இந்நாவல் எட்டணாவுக்குக் கொடுக்கப்படும்.

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால் பெட்டி நெ. 167, மதராஸ்.

# கணவனின் விருப்பத்தைக் கண்டுகொண்டாள்.



அவள் தன் கணவன் வருகையை ஆவலுடன் எதிர்பார்த்திருக்கிறாள். அவரும் தெருமூலையில் திரும்பிவிட்டார். கணகணவென இருந்த கரியடுப்பின்மேல் 'டக்'கென கெட்டில் ஏறிற்று. கணவன் உள்ளே வருமுன் கெட்டில் ஜலம் பொங்கிவிட்டது. ஐந்தே நிமிஷம். இந்தியத் தேயிலையைப் போட்டுத் தயாரித்த சுகமான ஒருகப் 'டீ' கணவன் கையில் வந்துவிட்டது.

இச்சிறுகாரியம் அவர்களது மணவாழ்க்கையில் என்ன மாறுதலைச் செய்துள்ளது! வேலையின்பின் வாடி வீடுதிரும்பும் கணவன் முன்பெல்லாம் 'சிடுசிடு' என்று இருப்பதுண்டு. இப்போது அதெல்லாம் போய்விட்டது. தேயிலைப்பானம் அவரது மனவாட்டத்தைப் போக்கி அவருக்குச் சுகத்தையும் வீட்டில் சந்தோஷத்தையும்அளிக்கின்றது. இது ஒரு செலவு என்று கருதமுடியாது ரொம்பமலிவு. இதையன்றி அவர் வேறெதையும் விரும்புவதும் இல்லை.

உங்கள் கணவர் வேலையினின்றும் வீடு திரும்பியதும் நீங்களும் அவருக்கு இந்த 'அன்பிற் கறிகுறியான ஒருகப் டீ'யை இன்று முதல் கொடுக்க ஆரம்பியுங்கள். அவர்கள் உங்களைத் தன்மனமார வாழ்த்துவார்.

டீ செய்யும் முறை. நல்ல இந்தியத் தேயிலையை உபயோகியுங்கள். புதிய ஜலத்தைப் பொங்கவிட்டுச் சுத்தமாய் உலர்ந்த மண் பாண்டத்தை வெந்நீரால் அலம்பி, ஒருவருக்கு ஒரு டீ ஸ்பூன் வீதம் அதில் தேயிலையைப்போட்டு, பொங்குகிற ஜலத்தை விடுங்கள். ஐந்து நிமிஷம் கழித்து ருசிக்காக பாலையும் சர்க்கரையும் சேர்த்து அருந்தவேண்டும்.



உடலை தளும்பத்திற்கு ஈடற்ற பானம்-இந்தியத் தேத்தண்ணீர்.


# சன்மார்க்க சத சற்போதங்கள்.

(ஸ்ரீ தெல்லிப்பழை-கா. சின்னப்பா.)

அத்தன் பதமலர் பத்தியுடன் பணி
ஆதர வெவர்க்கும் நீதவறாது செய்
இல்லாச் சிரம நல்லறம் நாடு
ஈடிலா நற்புகழ் தேடுதல் நன்று
உற்றார்க் கேற்ற சற்குணம் தாங்கு
ஊரவர்க் கென்றும் சீருடன் சேவைசெய்
எக்கா லத்தும் தக்கது புரிந்திடு
ஏசுவோர் தமக்கும் நேசம் காட்டு
ஐய மகற்றிச் செய்திடு நன்மை
ஒருவருக் கேனும் பெருமை காட்டாதே
ஓதுதற் கேற்ற போதம் போற்று
ஔவிய மெவர்க்கும் தவ்வையைச் சேர்க்கும்
கற்றவர் கூறும் சொற்களைக் கவனி
காலத்திற் கேற்ற கோல மவசியம்
கிரக நிலைப்படி வரம்பல பொருந்தும்
கீழோர் வசைமொழி கேளாதிருந்திடு
குருபணி மறுத்தல் இருநா குய்க்கும்
கூற்றுதைத் தோனைப் போற்றிடு நிதமும்
கெட்ட பழக்கம் விட்டு விலகு
க்ஷேத்திர கணித சூத்திரம் கற்றிடு
கைத்தொழி லெதையும் பத்தியாய்ப் பழகு
கொடுப்பவ ரெவரையும் தடுப்பது தீது
கோதையர்க் கெவ்வித தீதும புரியேல்
சன்மார்க்க மென்றும் நன்மைக் கேது
சாதிப் பெருமை பேதமை பெருக்கும்
சித்த சுத்தி முத்திக் கவசியம்
சீவனுக் குறுதுணை பாவ மகற்றல்
சுகபெல மிரண்டும் இகமதில் நாடு
சூது செய்வோர்க்கும் தீது செய்யாதே
செய்வ தெதையும் ஐயமிலாது செய்

சேக்கிழார் புராணம் நீக்கு மஞ்ஞானம்
சையெனப் பகர்வதைச் செய்யா திருந்திடு
சொல்வ தெதையும் நல்லாயுணர்ந்து சொல்
சோதரர் போல மாதரை மதித்திடு
தந்தை தாய்தம்மை நிந்தனை செய்யேல்
தாசிகளுறவு மோசம் விளைக்கும்
திக்கற் றவர்க்குத் தக்க துணைபுரி
தீயவ ருறவால் தாயை மறவேல்
துன்பம் பின்தரும் இன்பம் தவிர்த்திடு
தூய விருதயம் மாயைவே றறுக்கும்

தெய்வ பயத்தால் உய்வது நிச்சயம்
தேச சேவையில் ஆசை வைத்திடு நிதம்
தையலர்க் குதவி செய்வது மிகநலம்
தொன்மை முறைகள் நன்மை பயக்கும்
தோற்றமும் மனமும் மாற்றா திருந்திடு
நன்றி மறப்பவர் என்றும் கெடுவர்
நாணமட மாதிய பூண்பர் நன்மாதர்
நிலையிலா மாந்தர் பலநல மிழப்பர்
நீரிற் குமிழி பாரிலெம் வாழ்வு
நுண்மதி யுடையோர் திண்மை யடைவர்

நூன்முறைப்படி வாழ்ந் தான்ம சுகம்பெறு
நெருங்கிய உறவினர்க் கருந்துணை புரிந்திடு
நேரத்தி னருமையைத் தேருத லவசியம்
நைந்து வருந்தின் சிந்தை நலியும்
நொந்து வருந்துவோர் சிந்தையைத் தேற்று
நோக்கம் நன்றெனில் ஆக்கம் சேரும்
பந்து மித்திரர் நைந்திடச் செய்யேல்
பாச மகற்றி ஈசனைத் தொழுதிடு
பிறர்மனை நயவா அறமதைத் தாங்கு
பீடு பெற்றிட நாடுநற் புண்ணியம்

புத்திரப்பேறு பத்தியா லமையும்
பூண்பணி யெதற்கும் வீண் செலவிடாதே
பெருமையாற் சிலர்தம் அருமை யிழப்பர்
பேதமை யகற்றி நீதியை நிதம்புரி



பையலோ டிணங்கும் மையலைத் தவிர்த்திடு
பொருளைத் தேடித் தருமம் புரிந்திடு
போதனைக் கேற்ற சாதனை பொருந்து
மமதையா லனேகர் தமதகங் கெடுப்பர்
மாதர் கற்பழிக்கும் பேதையர் கெடுவர்
மின்னல் நேர்வாழ்வை அன்னியமென நினை

மீறும் பெண்டிரை வேறுக்குதல் நலம்
முகத்தின் கோலம் அகத்தைக் காட்டும்,
மூத்தோர் வாழ்த்துச் சேர்த்திடும் பலநலம்
மென்மைப் பேச்சால் நன்மை பொருந்தும்
மேதாவியரின் போதம் போற்று
மைதுனம் பெருக்குவோர் மெய்தனைக் கெடுப்பர்
மொழிவ தெதையும் தெளிவா யுரைத்திடு
மோச விளக்கம் நேச மகற்றும்
வருவாய்க் கேற்ற தருமம் வழங்கு
வாங்கிய கடனைப் பாங்குடன் கொடுத்திடு

விளக்கப் பிழையால் உளத்தைக் கெடாதே
வீணர் முகத்தைக் காணவும் விரும்பேல்
உத்தம னெனநீ எத்தினமும் வாழ்
ஊதாரிக் குணத்தைத் தீதென வகற்று
வெறிதரு மெதையும் அறிவுளோர் வெறுப்பர்
வேத விதிகளைச் சாதனை பண்ணு
வையகம் போற்ற மெய்யுரைத்திடு நிதம்
ஒரு மனதோடு அரன்பதத் தன்புவை
ஓதி யுணர்ந்து பேதமை யகற்று
அற்ப ருறவு சற்குண மகற்றும்

ஆடவர்க் கழகு வீடதி லிருத்தல்
இரவும் பகலும் பரர்சுகம் விரும்பு
ஈன ருறவெம் மான மழிக்கும்
உலகினர் வாழ்த்து நலம்மிக நல்கும்
ஊரவர் மெச்சும் வீரம் பொருந்து
எந்த நிலையிலும் தந்தை தாய் சொற்கேள்
ஏற்றதைச் செய்பவர் போற்றப் பெறுவர்
ஐயமிடுவோர் உய்வது நிச்சயம்
ஒற்றுமை யெவர்க்கும் நற்றுணை புரியும்
ஓர்மம் எவர்க்கும் நன்னீர்மையை நல்கும்
வாழ்க வையமெந் நாளும் செழித்தே.




**நடனப் போட்டியில் கிழவருக்கு வெற்றி:**—ஆஸ்திரியா தேசத்தில் ஒ[ரு] கிராமத்தில் நடந்த நடனப் போட்டியில் 110-வயதுள்ள ஒரு கிழவர் நன்று நடனஞ் செய்து வெற்றி பெற்றாராம்.

***

**தீக்குச்சு பிடில்:**—ரஷியாவில் ஒரு சிறுவன் தீக்குச்சுகளைக் கொண்டு ஒரு பிடில் செய்திருக்கிறான். அந்த பிடில் வாசிப்பதற்குச் சுலபமாக இருப்பதோடு, இனிமையான ஒலியையுந் தருகிறதாம்.

***

**ரேடியோவில் பேசும் குழந்தை:**—அயோவா என்னுமிடத்தில் 20 மாதக் குழந்தை யொன்று ரேடியோவில் அழகாகப் பேசுகிறது. மற்ற குழந்தைகளைவிட இக்குழந்தை 600 வார்த்தைகளைத் தெளிவாகப் பேசுகிறது. இக் குழந்தை பேர் பெற்ற சினிமா நடிகை மாலெஸ்ட் மீது அளவு கடந்த அன்பு கொண்டிருப்பதால், ரேடியோவில் பேசியபோது "மாலெஸ்ட் என்னை அவசியம் வந்து காணவேண்டும்" என்று தெரிவித்ததாம்.

***

**நேரம் காட்டும் பூட்டு:**—அமெரிக்காவில் நேரங்காட்டும் பூட்டுகளை முதலாளிகள் சிலர் கையாண்டு வருகின்றனர். இப் பூட்டு உபயோகிக்கும் காரியாலயத்தில் வேலை செய்யும் ஊழியர்கள் முதலாளிகளை ஏமாற்ற முடியாது. ஏனென்றால் அவர்கள் வந்து ஆபீஸைத் திறக்கும் நேரத்தையும், பூட்டிவிட்டுப் போகும் நேரத்தையும் இந்நூதன பூட்டு குறித்து வைக்கிறதாம். எனவே, முதலாளி வந்து பூட்டைப் பார்த்தால் வேலையாட்கள் வரும் நேரம் தெரிந்துவிடுகிறதாம்.

***

**சிறுமிக்கு எக்ஸ்ரே கண்கள்:**—லண்டன் ஆஸ்பத்திரிக்குச் சமீபத்தில் ஒரு சிறுமி கொண்டுவரப்பட்டாள். அப்பெண்ணுக்குச் சிகிச்சை செய்த டாக்டர் அவளது கண்களைப் பார்த்துத் திகைத்தார். உடனே ஆராய்ச்சி செய்யலானார். கண்களைத் துணியால் இறுகக் கட்டிவிட்டு, அச்சிறுமியை எதிரேயுள்ள சாமான்களின் விவரம் நிறம் முதலியவைகளைக் கூறும்படி கேட்டார். சிறுமி எல்லாவற்றையுஞ் சரியாகக் கூறினாள். டாக்டர் பே[ர்] அச்சிறுமி இதுவரை கண்டிராத ஒரு படத்தைக் காட்டி அது என்ன[வெ]ன விளவினார். அதையும் அவள் கூறிவிட்டாள். ஆகவே, டாக்டர் இச்சி[று]மியின் கண்களில் எக்ஸ்ரே சக்தி இருப்பதாக முடிவு செய்தார்.

***

**23 வருடங்களுக்கு முன் செய்த ரொட்டித்துண்டு:**—1912-ம் வருட[த்தில்] தம் கணவனுக்குப் பரிசாகக் கிடைத்த ரொட்டித் துண்டொன்றை ஸ்ரீமதி எஸ். எஸ்மன் என்னும் பெண்மணி 23 வருடங்களாகப் பாதுகாத்து வ[ரு]கிறார்.




பாஞ்சால நாட்டில் போலீஸ் இலாகாவில் மெட்ரிகுலேஷன் பரீட்சையில் தேறிய 1220 பேர் கான்ஸ்டேபில்களா யிருக்கிறார்களாம்.

*   *   *   *

டாக்டர் வில்லியம் வாண்டேவால் ஸ்ரீமதி கிளாராமரியா லீப்மான் முதலிய ஆராய்ச்சியாளர்கள் சென்ற 14 வருடங்களாகச் செய்த ஆராய்ச்சியின் முடிவாக, பெருங் குற்றவாளிகளையும், பைத்தியக்காரர்களையும் சங்கீதத்தால் நல்வழியில் திருத்திவிடலா மென்று கூறுகிறார்கள்.

*   *   *   *

நோபல் பரிசு கமிட்டியார் இவ்வருஷ நோபல் சமாதானப் பரிசை யாருக்குங் கொடுப்பதில்லை எனத் தீர்மானித்துவிட்டார்களாம்.

*   *   *   *

சர்வதேச சங்கத்தின் அகில உலக நூல் நிலயத்தில் சுமார் 180,000 புத்தகங்களுக்கு மேல் இருக்கின்றனவாம்.

*   *   *   *

கல்கத்தாவைச் சேர்ந்த காவிபூரில் கொள்ளைக் கூட்டத்தார் கத்தி, பிச்சுவா, தடி முதலிய ஆயுதங்களோடு வீடுகளில் நுழைந்து கொள்ளையடித்தனராம். அக்கொள்ளைக்காரர்களில் ஆயுதந்தாங்கிய ஒரு பெண்ணும் இருந்தாளாம்.

*   *   *   *

இத்தாலி-அபிஸீனியா யுத்தத்தால் ராய்ட்டர் என்னும் வெளி நாட்டுச் செய்தி ஸ்தாபனத்துக்கு மட்டும் வாரம் 1000 பவுன் விலையுள்ள தந்திச் செய்திகள் செலவாகின்றனவாம்.

*   *   *   *

பிரிட்டிஷ் மந்திரிகளுக்குச் சொந்தமான 6 போட்டோ எடுக்கும் ஆகாய விமானங்கள் எதியோபியாவில் இருக்கின்றனவாம். இத்தாலியர் இவ்விமானங்களைத் தங்கள் பக்கம் வர அநுமதிப்பதில்லையாம்.

*   *   *   *

சிகாகோவில் உலகிலேயே பெயர்பெற்ற சிறுவர் பாண்டு வாத்திய கோஷ்டி யொன்று இருக்கிறதாம்.

*   *   *   *

நியூயார்க்கிலுள்ள பெரிய கட்டிடங்களுக்கு ஏராளமான மின்சார சக்தியை உபயோகித்து வருகிறார்களாம். கதவுப் பிடிகளுக்குக்கூட மின்சார விளக்குகளை வைத்திருக்கிறார்களாம்.

*   *   *   *

இத்தாலியில் ஒரு மோட்டாருக்கு நிலக்கரியை உபயோகித்து ஓட்டி வருகிறார்களாம்.

# ஆசிரியர் குறிப்புக்கள்

## விவசாயத்திற்குக் குழாய்க் கிணறுகள்

சென்னை மாகாணத்தில் நீர்வளமுள்ள நிலங்களை விட வானம் பார்க்கும் பூமிகளே அதிகம். புன்செய்களில் கிணறுகள் வெட்டி நீர் இறைத்து விவசாயம் செய்யும் பிரதேசங்களும் இருக்கின்றன. வானம் வழங்காவிட்டால் இந்தக் கிணறுகளும் வறண்டு விடுகின்றன. கிணறுகளை ஆழமாக வெட்டவோ அவற்றினின்று நீர் இறைக்கத்தக்க மாடுகளை வாங்கவோ குடியானவர்களால் முடிவதில்லை. பழைய கடன் தொல்லை—குடும்பச் செலவு—வரிப் பளு—விளையாமை—விளைந்தாலும் விலையின்மை முதலிய காரணங்களால் விவசாயிகள் படும் துயரம் வருணனைக்கு அடங்காது. அரசாங்கத்தார் விளைந்தாலும் விளையாவிட்டாலும் வரி வசூல் செய்வதில் முனைந்து நிற்கின்றனரே யொழிய விவசாயிகளுக்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்து கொடுப்பதில் சிரத்தை காட்டுகின்றனர் இல்லை. சென்ற மாதம் 24-ஆம் தேதியில் சேலம் ஜில்லா அரசியல் மகாநாடு திருச்செங்கோட்டில் நடைபெற்றது. ஸ்ரீமான் கே. பாஷ்யம் ஐயங்கார் தலைமை வகித்தார். அவர் தமது முன்னுரைத் தொடக்கத்தில் விவசாய வளர்ச்சிபற்றிச் சுட்டிக் காட்டிய ஒரு யோசனை அரசாங்கத்தாராலும் மற்றவர்களாலும் நன்கு கவனிக்கத்தக்கதாகும். "ஆழமான கிணறுகள் வெட்டித் தண்ணீரைக் குழாய்கள் மூலம் பாய்ச்ச ஒரு திட்டம் வகுக்க வேண்டும். இந்தத் திட்டத்தினால் ஏற்படும் செலவைக் கட்டாயம் குடிகளிடமிருந்து வசூல் செய்ய வேண்டுமானால் அரசாங்கத்தார் அத் தொகையை நாற்பது ஆண்டுகளில் சிறிது சிறிதாக வசூல் செய்து கொள்ளலாம்"—இதுதான் ஸ்ரீமான் பாஷ்யம் கூறிய யோசனை. சாதாரண நீர்ப்பாசன முறைகளில் இல்லாத ஒரு நன்மை இந்த முறையில் இருக்கிறது என்றும், சாதாரண நீர்ப்பாசன முறையின் கீழ் ஒரே தானியம்தான் விளைக்க முடியும் என்றும், இம் முறையில் விற்பனையாகக் கூடிய பலவேறு விளைபொருள்களை உற்பத்தி செய்யலாம் என்றும் அவர் எடுத்துக் காட்டினார். இந்த முறையை ஐக்கிய மாகாண ஜமீன்தார்கள் அநுஷ்டித்து வருகிறார்களாம். சேலம் ஜில்லா அரசியல் மகாநாடு இந்த யோசனையைத் தீர்மானமாகவும் நிறைவேற்றி இருக்கிறது. எனவே அரசாங்கத்தாருக்கும் விவசாய அனுபவம் படைத்தவர்கட்கும் இச் செய்தியை நாம் அர்ப்பணம் செய்ய விரும்புகின்றோம்.

## விவசாயத்திற்கு மேட்டூர் மின்சாரம்

அரசாங்கத்தார் மேட்டூரில் உற்பத்தி செய்யப் போகும் மின்சாரம் பெரும்பாலும் சேலம்—வட ஆற்காடு ஜில்லா விவசாயிகளின் முன்னேற்றத்திற்கு உபயோகிக்க வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இந்த மின்சாரத் திட்டம் வெகு முக்கியமானது. சேலம்—வட ஆற்காடு ஜில்லாக்கள் ஆற்று நீர்வளம் உள்ள பிரதேசங்கள் அல்ல. பெரும்பகுதி வானம் பார்க்கும் பூமிகள். ஆழமான கிணறுகள் வெட்டி நீர் இறைத்துப் பயிர் செய்யவேண்டிய பூமிகள். இவ்விடங்களில் உள்ள விவசாயிகள் நீர் இறைப்



புக்கு—கவலைகட்கு மாடுகளையே உபயோகிக்க வேண்டியிருப்பது எல்லாரும் அறிந்த விஷயம். எப்பேர்ப்பட்ட மாடுகளும் ஓராண்டில் வலிவிழந்து கசாப்புக்கடைகட்குப் போகவேண்டிய நிலை ஏற்படுவது கண்கூடு. மேலும் மாடுகளைக் காப்பாற்றும் செலவும் அதிகம். இதனால் விவசாயிகள் ஆண்டுதோறும் பெரிய நஷ்டம் அநுபவிக்க நேருகின்றது. நீர் இறைப்புக்கு மின்சார விசையை உபயோகித்தால் குடியானவர் தொல்லைகளில் பெரும்பகுதி ஒழிந்துவிடும். ஒருநாள் முழுதும் கவலைமாடுகள் இறைக்கும் நீரை மின்சார விசையால் இரண்டு மணி நேரத்தில் இறைத்துவிடலாம். ஒரு தடவை வாங்கும் குழாய்கள் பத்தாண்டுகட்கு வரும். விவசாயத்தையும் விரிவாக்கலாம். எனவே அரசாங்கத்தார் மேட்டூர் மின்சார விசையைத் தனிப்பட்ட ஏஜன்சிகளிடம் ஒப்புவிக்காமல் தாங்களே பொறுப்பேற்றுக் கொண்டு ஏழைக் குடியானவர்களின் சௌகரியங்களைப் பெருக்க வேண்டும் என்று விரும்புகின்றோம்.

## நரிமனின் நல்ல முயற்சி

பம்பாய் மேயரான ஸ்ரீமான் நரிமன் மேற்படி நகரிலுள்ள எல்லாரும் எழுதப் படிக்கத் தெரிந்தவர்களாக விளங்கவேண்டும் என்று ஆசைப்பட்டு அதற்கு வேண்டிய முயற்சிகளைச் செய்துவருவது பெரிதும் கவனிக்கத்தக்கதாகும். சிறுவர்—சிறுமியர் மாத்திரமில்லை; வயதானவர்களுங்கூடக் கல்வி கற்க என்ன வழி என்று அவர் நீண்ட நாட்களாகவே ஆலோசனை செய்து வந்திருக்கிறார். ஸ்ரீமான் நரிமன் அதற்காக இப்போது ஒரு திட்டமும் வகுத்திருக்கிறார். பம்பாய் முனிசிபல் பள்ளிக்கூடக் கமிட்டியின் ஒத்துழைப்பையும் உதவியையும் பெறும் பொருட்டு அத்திட்டத்தை அதனிடம் சமர்ப்பித்திருக்கிறார். இவர் தமது திட்டத்தை நிறைவேற்றி வைக்கக் கார்ப்பொரேஷன்—அரசாங்கங்களின் பணவுதவிகளை அவ்வளவாக எதிர்பார்க்கவில்லை என்று தெரிகின்றது. இச்சாசேவகர்களின் உதவியையே பெரிதும் எதிர்பார்த்து நம்பியிருக்கிறார். வாராவாரம் தங்களுடைய ஓய்வுநேரத்தில் சில மணி நேரத்தையாவது செலவிடத் தயாராகவுள்ள வாலிபர்கள்—சிறப்பாக மாணவர்கள் முன்வரவேண்டும் என்பது ஸ்ரீமான் நரிமன் கோரிக்கை. விரும்புகின்றவர்கட்குப் பிரயாணப்படி கொடுக்கவும் ஏற்பாடு செய்திருக்கிறார். தற்சமயம் நகர முழுவதையும் எடுத்துக்கொள்வது அவர் நோக்கமில்லை. தொடக்கத்தில் தாழ்த்தப்பட்ட மக்கள் வசிக்கும் இடங்களைத் தேர்ந்தெடுக்கத் தீர்மானித்திருக்கிறார். பரீக்ஷார்த்தமாக இலவச இரவுப் பள்ளிக்கூடங்களும் ஞாயிற்றுக்கிழமை மற்ற விடுமுறை நாட்களில் நடத்தும் வகுப்புக்களும் எடுத்துக்கொள்ளப்படும். 3 முதல் 6-மாதங்கட்கு வாரம் 6-மணி முதல் 8-மணி நேரம் போதித்தால் பெரியவர்களும் சிறியவர்களும் எழுதப் படிக்கக் கற்றுக்கொள்ளலாம் என்றும், அவர்கள் பத்திரிகை படிக்கும் திறமையும் பெற்றுவிடுவார்கள் என்றும் நிபுணர்கள் மூலம் ஸ்ரீமான் நரிமன் அறிந்துகொண்டிருக்கிறார். நமது நாட்டு முன்னேற்றத்திற்கும் விடுதலைக்கும் முட்டுக்கட்டையாயிருப்பது அறியாமை. நாகரிக ஆங்கில ஆட்சி ஏறக்குறைய இருநூறு வருஷகாலம் இருந்தும் இன்னும் கோடிக்கணக்கான மக்கள் கல்வியறிவில்லாத பாமரர்களாய்—தற்குறிகளாய்க் காலந்தள்ளி வருகின்றனர். இது நாகரிக ஆட்சிமுறை என்பதற்கே மானக்

கேடு. ஒரு பக்கம் பயனற்ற உயர்தரக் கல்வி கற்றவர்கள் வேலையில்லாமல் திண்டாடுகின்றனர். இன்னொரு பக்கம் தற்குறிப் பாமர மக்கள் அறியாமையில் மூழ்கித் திண்டாடுகின்றனர். இந்தப் பரிதாபகரமான நிலைமையை மாற்றவேண்டிய பொறுப்பு யாரைச் சேர்ந்தது என்று கேட்கின்றோம். இனி எல்லாவற்றிற்கும் அரசாங்கத்தையே எதிர்ப்பார்ப்பது வீண் என்று அநுபவத்தில் தெளிவாகிவிட்டது. தன் கையே தனக்குதவி என்பதையொட்டி நாமே நம் நிலையை உயர்த்த முன்வரவேண்டும். நரிமன் இப்பொழுது இவ்வுண்மையைக் கடைப்பிடிக்க முன்வந்திருப்பதைக் கண்டு நாட்டு மக்கள் எல்லாரும் அவரைப் பாராட்டவேண்டும். மற்றவர்களும் ஸ்ரீமான் நரிமனைப் பின்பற்றி அறியாமை இருளை ஓட்ட முன்னணிக்கு வரவேண்டும் என்று ஆசைப்படுகிறோம்.

## சமூகச் சீர்திருத்தச் சட்டம்

ஒரு சில வைதிக மனப்பான்மை கொண்டவர்களைத் தவிர மற்றவர்கள் எல்லாம் சமூகக் கொடுமைகளை ஒழிக்க அனுதாபங் காட்டுவார்கள் என்பதில் சிறிதும் சந்தேகம் இல்லை. இந்நிலையில் பெரிய சட்ட நிபுணர்களும், இக்கால உலகப் போக்கை நன்கு அறிந்தவர்களுமான ஸ்ரீமான்கள் டி. ஆர். வெங்கடராம சாஸ்திரியார், வே. ப. ராமேசம் பந்துலு போன்றவர்கள் குறுகிய மனப்பான்மை காட்டுவது ஆச்சரியமாயிருக்கிறது. சென்ற மாதம் 23-ம் தேதி சென்னை ரானடேஹாலில் ஆரியமத சபையின் ஆதரவில் ஸர். வேப. ராமேசம் பந்துலு தலைமையில் ஸ்ரீமான் டி. ஆர். வேங்கடராம சாஸ்திரியார் சமூகச் சீர்திருத்தம்பற்றி ஒரு சொற்பொழிவு நிகழ்த்தினர். அச்சமயத்தில் அவ்விருவரும் வெளியிட்ட கருத்துக்கள் எமக்கு மிகவும் வியப்பை அளித்தன. ஸ்ரீமான் வேங்கடராம சாஸ்திரியார் சமூக ஊழல்களை நீக்கச் சட்டம் செய்யவேண்டுமா வேண்டாமா என்பதைப்பற்றி ஒரு தெளிவான முடிவை வெளியிடவில்லை. உடன்கட்டை ஏறுதலாகிய ஸதி ஒழிப்பு, மாதர் மறுமணம், குழந்தை மணத்தடை ஆகியவைகளுக்குச் சட்டம் செய்தது பொது ஜன விரோதம் என்று கூறினர் ஸ்ரீமான் சாஸ்திரியார். மேலும் டாக்டர் பகவன்தாஸ் இந்திய சட்டசபையில் கொண்டுவரவிருக்கும் விவாக சம்பந்தமான மசோதாவையும் கண்டித்தார். இத்தகைய சட்டங்கள் ஏற்படுத்துவதற்கு முன் பெரிய பெரிய மாஜி உத்தியோகஸ்தர்கள் அடங்கிய ஒரு சபையின் அநுமதியைப் பெற்றுக் கொள்ளவேண்டும் என்றும், சட்டங்களை ஒரு சிறு பிரிவினர் இயற்றிவைத்து விடுதல் கூடாது என்றும் ஸ்ரீமான் சாஸ்திரியார் யோசனை கூறினர். பிறகு தலைமை வகித்த ஸர். வேப. ராமேசம் பந்துலு ஸ்ரீமான் சாஸ்திரியார் கூறியதை அப்படியே ஆமோதித்தார். "சாரதாச் சட்டம் பம்பாய் வாசிகளால் ஏற்படுத்தப்பட்டது. சென்னைவாசிகள் அதற்கு விரோதமாயிருந்தனர். ஒரு மாகாணத்தால் ஏற்படுத்தப்படும் சட்டம் மற்ற மாகாணம் ஏற்க வேண்டியது அநாவசியம். பெண்களுக்குச் சொத்துரிமை வேண்டும் என்று கொண்டுவரப்பட்ட மசோதா கேடானது. அதனால் பிள்ளைகள் பிச்சைக்காரர்களாகிய விடுவார்கள்" என்று கூறினர் நீதிபதி ஸர் ராமேசம். மேற்கண்ட கூற்றுக்களிலிருந்து இவர்கள் எவ்வளவு பிற்போக்கான மனப்பான்மை கொண்டிருக்கிறார்கள் என்பது இனிது விளங்கும் என்றே நம்புகிறோம்.




# லக்ஷ்மிபாய்

அல்லது

# ஆற்காட்டு முற்றுகை.

(எம். லக்ஷ்மண முதலியார்.)

(398-ம் பக்கத் தொடர்ச்சி.)

"ஆம், ஆம், உண்மைதான். இப்போது நானும் உன்னிடம் உண்மையைச் சொல்லிவிடுகிறேன். நமது இருவருக்கும் வாக்கு வாதம் வேண்டாம். உன் தமயனுக்கு ஒருவிதக் கெடுதலும் செய்யாமல் சாத்தாராவுக்கு அனுப்பிவிடுகிறேன். இராஜீய விஷயமாய் மஹாராஷ்டிரப் பெண்களெல்லாம் அதிக நிபுணர்கள் என்று கேள்விப் பட்டிருக்கிறேன். அது விஷயமாய் சிறிது நேரம் என்னிடம் சம்பாஷிப்பதாக உறுதி செய்."

"ஆஹா," என்றாள் அப் பெண்ணும் சிறிது யோசித்த பிறகு.

"நல்லது முதலில் நான் இன்னார் என்று உண்மையைச் சொல்லி விடுகிறேன்."

"நல்லது."

"நான் தான் ராஜா சாஹேபு—இந்த ஆற்காட்டு முற்றுகையை இப்போது நடத்துபவன்."

"ஆ, நான் முதலிலேயே அப்படித்தான் நினைத்திருந்தேன்."

"உன் பெயரென்ன ?"

"என் பெயர் இலக்ஷ்மிபாய். என் தமயன் பெயர் உத்தமஜீ."

"இந்த முற்றுகையில் நாங்கள் ஜெயிப்போமா ? அல்லது தோல்வியடைந்து விடுவோமா !"

"இதில் நீங்கள் தோற்றுப் போவதும் அன்றி இருந்த இடம் தெரியாமல் மறைந்து விடப் போகிறீர்கள்" என்று சாபமிடுவது போல் சொல்லினள். ஆனால் அவன் கோபப்படவில்லை.

"என்ன காரணம் ?"

"நான் சிறு பெண் என்று நினைக்க வேண்டாம்; எனக்கு பாரதநாடு முழுவதும் நடக்கும் ராஜீய விஷயமும் ராஜ தந்திரங்களும் தெரியும்."

"ஆம், ஆம். எத்தனையோ ராணிகள் உங்கள் குலத்தில் அபாரமான ராஜரீகம் செய்திருக்க வில்லையா ? அதனால் தான் நான் உன்னை இந்தக் கேள்வி கேட்டுத் தெரிந்து கொள்ள விரும்பினேன்."

"இப்போது தென்னிந்தியாவிலுள்ள ஆங்கிலேயர்கள் வலிவு அடைந்து வருகிறார்கள். இந்தக் கோட்டையையும் அவர்களே உறுதி செய்து விடுவார்கள். பிறகு திருச்சியையும் சுலபமாய் அவர்கள் பிடித்து விடுவார்கள். நீங்கள் அப்போது தங்க இடமில்லாமல் தெருவில் நிற்க வேண்டியது தான்" இதைக் கேட்டதும் அம் மனிதனுக்கு கோபத்தினால் கண்கள் சிவந்தன.

"போதும், போதும், உன் ஆலோசனை. நீ ஜல்தி போய் பல்லக்கில் படுத்துக் கொள்" என்றான்,

"ஏன் ?"

"ஏனா ?"

"ஏன் பல்லக்கில் போய்ப் படுத்துக் கொள்ள வேண்டும் ?

' உன்னை இப்போது புதுச்சேரிக்கு அனுப்பப் போகிறேன். ஆட்கள் தயாராய் வந்து கொண்டிருக்கிறார்கள். அங்கே என் தாயாரும் மற்ற பந்துக்களும் பந்தோபஸ்துக்காக இருக்கிறார்கள். அவர்களுடன் நீயும் போய் இரு. இந்த முற்றுகை முடிந்தவுடன் நான் அங்கே வந்து சேருகிறேன். பிறகு..."

"ஐயோ, இந்த தகாத வார்த்தைகளை என்னிடத்தில் வீணிலே பேச வேண்டாம். உடனே என்னையும் என் தமயனையும் விடுதலை செய்து அனுப்பிவிடும். ஏன் அநியாயமாய் சீக்கிரத்தில் உமக்கு அழிவு காலத்தைத் தேடிக் கொள்கிறீர்."

"என்ன, என்ன ? மிரட்டல் கூட செய்து பார்க்கிறாயா ?"

"மிரட்டல் அல்ல; உண்மை. எங்களோடு வந்த வேவுகாரன் இதுவரைக்கும் எங்கள் ராஜதானிக்குச் சென்று விவரம் தெரிவித்திருப்பான். உடனே மஹாராஷ்டிரக் குதிரைப் படை திரண்டு வந்து கொண்டிருக்கும். சீக்கிரம் எங்களை விட்டு விடுவதே உமக்கு நல்லது. நன்றாய் ஆலோசனை செய்து பாரும்."

"ஓ, பயமில்லை. உனது கூடவந்த வேவுகாரனை நாங்கள் கொன்று விட்டோம். அதைப்பற்றிப் பயமே யில்லை. நேரமாகிறது. நீ போய் பல்லக்கில் படுத்துக் கொள். ஆட்கள் வரும் நேரமாகிறது. ஜல்தி, ஜல்தி. இல்லாவிட்டால் நான் பலவந்தம் செய்யும்படி நேரிடும்."

"என் உயிரைத் திரணமாய் நினைத்து விட்டேன். எனக்கு என் குலத்தின் பெருமையாகிய கற்பே பெரிது. என் உயிர் பெரிதல்ல." என்று பிரதிக்ஞை செய்தாள். அவளது கட்டாரி பிடித்த கை நடுங்கியது.

அந்த மனிதன் ஒரு சைகை செய்தான். உடனே வாசலில் காவல் நின்ற இரண்டு முரட்டு முகம்மதியர்களும் கையில் நீண்ட பட்டுக் கயிற்றோடு உள்ளே வந்தார்கள். வந்த உடனேயே அந்த இரண்டு தடியர்களும் லக்ஷ்



மிபாயின் பேரில் பாய்ந்து அவளிடமிருந்த கட்டாரியை எளிதில் பிடுங்கி விட்டார்கள். பிறகு அவளைக் கெட்டியாய்ப் பிணித்துக் கட்டிப் பல்லக்கில் போட்டு விட்டார்கள். பல்லக்கைத் தூக்கிக் கொண்டு போவதற்கு ஆட்கள் வரத்தான் தாமதம்.

தன்னை பலவந்தமாய் மானபங்கம் செய்வார்களோ வென அஞ்சி தனது உயிரை மாய்த்துக் கொள்வதே உத்தமம் என முடிவு செய்து கொண்டாள். அப்பொழுது கூடாரத்தின் வெளியில் ஆட்கள் வரும் ஓசைக் கேட்டது.

"யார் அங்கே !" என்று சாஹேபு அதட்டினார். அவர் வாய் மூடு முன் இரண்டு வாலிபர்கள் உருவிய வாளுடன் உள்ளே பாய்ந்து வந்தார்கள். அவர்களைப் பார்த்ததும் வேற்று மனிதர்களாய் இருக்கக் கண்டு ராஜாசாஹேபும் தனது உடைவாளை உருவிக் கொண்டு அவர்களை எதிர்த்தான். அங்கு நின்ற அவனது சிப்பாய்களிருவரும் அவனோடு சேர்ந்து கொண்டார்கள். சிறிது நேரத்தில் அக் கூடாரமானது ஒரு சிறு யுத்தகளமாகி விட்டது. கத்திகள் விண், விண் என்று சப்தித்தன. வீரர்களின் கோபக் குரல் மனதைத் திடுக்கிடச் செய்தது. உதிரம் ஏராளமாய்ச் சிந்தி வழிந்தது. அன்னியர்களிருவரும் வாலிபராயிருந்த போதிலும் வெகு தீவிரமாய்ச் சண்டை செய்தனர். சித்திரப் பதுமை போல் கட்டுண்டு கிடக்கும் லக்ஷ்மிபாய் அதிக உற்சாகத்தோடு சண்டை செய்யும் அவ் விருவரையும், அதிலும், முஸ்லீம் உடை தரித்திருந்த இளைஞனை அதிகமாகவும் கண் சிமிட்டாமல் பார்த்தபடியே இருந்தாள். கூடாரத்தைச் சேர்ந்த சிப்பாய்களில் ஒருவன் முதலில் வெட்டுண்டு வீழ்ந்தான். மற்றவன் படுகாயத்தோடு வெளியே ஓடி விட்டான். ஹிந்து உடையணிந்திருந்த வாலிபன் தனியாயிருந்த சாஹேபுவுடன் கை கலந்து சண்டை செய்து கொண்டிருந்தான். ஒருவனை இருவர் எதிர்க்கக் கூடாதென்று நினைத்த மற்ற முஸ்லீம் வாலிபன் அப்பால் சென்றான். இதையறிந்த லக்ஷ்மிபாய், "பேஷ் !" என்றாள். அவ் வாலிபன் திரும்பினான். அவளது திருமுகம் அவன் கண்ணில் பட்டது. கண்ணோடு கண் சந்தித்தன. மறுக்ஷணம் அவன் அவளருகிலிருந்தான். இரத்தம் தோய்ந்த அவனது கத்தியினால் அவளைப் பிணித்திருந்த கயிற்றை அறுத்தெறிந்து தன் கண்ணைப் பறித்த அப் பூங்கொடியை விடுவித்தான். அந்தக் கோரமான வேளையிலும் அவளது பரிசத்தால் அவ் வாலிபனுக்குண்டான சுக உணர்ச்சியை அவனது ஆயுள் பரியந்தம் மறக்க முடிந்திராது!

மற்றொரு வாலிபனோடு சண்டை செய்து கொண்டிருந்த சாஹேபு சீக்கிரத்தில் களைப்புற்று சோர்வடைந்தான். அவனைக் கட்டிப் போட வேண்டுமென்று அவ் வன்னிய வீரர்கள் நினைத்தார்கள். அதே சமயத்தில் டக், டக் என்ற குதிரைகள் வரும் சப்தம் கேட்டு இருவரும் திடுக்கிட்டார்கள். அந்தக் கலக்கம் தெளிவதற்குள் ஆறு குதிரை வீரர்கள் முழு ஆயுத பாணிகளாக உள் நுழைந்தார்கள். அவர்களைக் கண்ட உடனேயே "ஹுசேன், நீ லக்ஷ்மியைக் காப்பாற்று. ஜல்தி. அவளை அழைத்துக் கொண்டு நீ தப்பி ஓடு" என்று கூவிக் கொண்டு அந்த ஆறு பேரையும் மறைத்துக் கொண்டு கத்தியை சுழற்றினான் ஹிந்து வாலிபன். ஹுசேன் என்ற முஸ்லிம் யுவன் ஒரு க்ஷணம் தங்கினான். ஓர் பெண்ணரசியைக் காப்பாற்ற வேண்டி சற்று முன்பு தான் தன்னால் சிறையினின்றும் விடுவிக்கப் பட்ட ஒரு வாலிப

வீரனை அநியாயமாய் ஆறு முரட்டு சிப்பாய்களின் கையால் மடியவிட்டுப் போவதா? அல்லது தானும் அவனோடு சேர்ந்து மடிவதா? அப்படியானால் அப் பெண்ணின் கதி என்ன ஆகும்." இவ்வளவு எண்ணங்களும் ஒரு க்ஷணத்திற்குள் மின்னல் ஒளி போல் அவனது மனதில் தோன்றின. இதற்குள், "ஹுசேன்! ஹுசேன்! கடவுள்மேல் ஆணை! என்னைப்பற்றி சிந்திக்காதே. லக்ஷ்மியைக் காப்பாற்ற வேண்டியது உன் கடமை. ஜல்தி, ஜல்தி!" என்று கூவினான் அஞ்சாத நெஞ்சம்படைத்த அந்த வாலிபன். முன்னமேயே அந்நங்கை மூர்ச்சையாகி ஒடிந்த பூங்கொடிபோல் துவண்டு கிடந்தான். ஹுசேன் ஒரு நொடியில் அவளை வாரித்தூக்கித் தன் மார்போடு அணைத்துக் கொண்டான். சரேலென்று ஒரே பாய்ச்சலில் கூடாரத்தைவிட்டு இருட்டில் மறைந்தான்.

